பல்கலைக்கழக மானியக்குழு (UGC) அங்கீகாரம் பெற்ற மாதஇதழ்
New Centurian Ungal Noolagam ISSN 2394-7535-109

நியூ செஞ்சுரியின்

# உங்கள் நூலகம்

மாத இதழ்

New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly)

| மலர் : 16 | இதழ் : 03 | | ஜூன் 2024 | விலை | | ஆண்டு சந்தா | |
|---|---|---|---|---|---|---|---|
| Vol : 16 | Issue : 03 | www.ncbhpublisher.in | June 2024 | Price | ₹ 45/- | Annual Subscription | ₹ 540/- |



## நகரத்துப் பெண்கள், கிராமத்துப் பெண்கள் எனப் பிரித்துப் பார்க்கத் தேவையில்லை

சு.தமிழ்ச்செல்வி

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம்


## வழங்கும் மகத்தான படைப்பு தற்போது விற்பனையில்...

# சங்க இலக்கிய உரைவேறுபாட்டுக் களஞ்சியம்

**22** தொகுதிகள்
**7500** பக்கங்கள்
விலை
**ரூ.9000/-**

1/8 டெம்மி அளவு,
தரமான தாள்,
அழகிய
வடிவமைப்புடன்

- ஒரு நூற்றாண்டு வாசிப்புப் பின்புலத்தில் -
- பாடல் - பாடவேறுபாடு - உரைவேறுபாட்டு விளக்கங்கள்
  - பாடல் கருத்து - அருஞ்சொற்பொருள்
  - விரிவான ஆய்வு முன்னுரை எனும் அமைப்பில் -
- எண்மரின் பத்தாண்டு காலக் கடும் உழைப்பில் -
- 22 தொகுதிகள் 7500 பக்கங்களில் -
- பலமுறை முன் மதிப்பீடு செய்யப்பட்டு -
- உயர்ந்த கட்டமைப்பில் -
- தமிழக வரலாற்றில் முதல்முறையாக -




## நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410, 48601884 www.ncbhpublisher.in | email: info@ncbh.in

**நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் அனைத்து கிளைகளிலும் மற்றும் புத்தகக் கண்காட்சி அரங்குகளிலும் கிடைக்கும்.**

கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

**நியூ செஞ்சுரியின்**

# உங்கள் நூலகம்

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2055*

*மலர் - 16 இதழ் - 03 - ஜுன் 2024*

ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்

**சண்முகம் சரவணன்**

ஆசிரியர் குழு

பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன்
முனைவர் ச.சுபாஷ் சந்திரபோஸ்
முனைவர் ந.முத்துமோகன்
முனைவர் மு.இராமசுவாமி
முனைவர் நா.இராமச்சந்திரன்
முனைவர் பா.ஆனந்தகுமார்
முனைவர் ஞா.ஸ்டீபன்
ப.குராஜன்
முனைவர் இரா.அறவேந்தன்
முனைவர் இரா.காமராசு
முனைவர் உ.அலிபாவா

இதழ் வடிவமைப்பு

*கா. குணசேகரன்*

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142). ஜானி ஜான்கான் ரோடு.
இராயப்பேட்டை. சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com
இணைய தள முகவரி: www.ncbhpublisher.in

தனி இதழ் ₹ 45.00. ஆண்டு சந்தா ₹ 540.00
மாணவர்களுக்கு ₹ 500.00
ஆயுள் சந்தா ₹ 5400.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00

*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch. Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், (பி) லிட்.,**
**41-பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்.**
**அம்பத்தூர். சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**

## உள்ளே...

1 விருதுகளும் விவகாரங்களும்
ஆசிரியர் குழு......04

2 நகரத்துப் பெண்கள், கிராமத்துப் பெண்கள் எனப் பிரித்துப் பார்க்கத் தேவையில்லை
சு.தமிழ்ச்செல்வி......06

3 தனித்தமிழ் இயக்க முன்னோடி சுவாமி விருதை சிவஞான யோகியார்
டாக்டர் சு.நரேந்திரன்......11

4 அனந்தாயி கதை
அ.கா.பெருமாள்......17

5 பாணர் குடிலின் கதை
வீ.அரசு......25

6 கவிஞர் தமிழ் ஒளியின் சிறார் இலக்கியப் பங்களிப்பு
முனைவர் ஜெ. மதிவேந்தன்......29

7 நான்கு ஆளுமைகள்
முனைவர் ந.அருள்மொழி......33

8 சங்க இலக்கியத்தில் யானை குறியீட்டுப் படிமம்
ச.பொ.சீனிவாசன்......37

9 மரபுத்தொடர்களும் கணினிவழி மொழிபெயர்ப்புச் சிக்கல்களும்
நா. சந்திரசேகரன்......41

10 அம்பையின் படைப்பும் ஆளுமையும்
வெ.சந்தியா......46

11 காலந்தோறும் ஔவையார்கள்
ச.முத்துச்செல்வி,......50

12 வண்ணதாசன் படைப்புகளில் பெண்ணியம்
அ.சாந்திராணி, & முனைவர் சா.சுஜாதா,......55

13 பால்யத்தை எழுதுதல்
ஹமீம் முஸ்தபா......58

14 'கபிலம்' வழி வெளிப்படும் ம.ரா.போ வின் உரைத்திறன்
முனைவர் மா.கார்த்திகேயன்......60

15 தொல்காப்பியமும் இலக்கணநிலை வழுவமைதியும்
ஸ்ரீ.மணிகண்டன்......63

16 EXISTENTIAL AND HISTORICAL AND POST COLONIAL DISCOURSE IN THE SELECT NOVELS OF AMITAV GHOSH
W. M. Seenivas Leandar Bias & Dr. V. Rajendran......69



# விருதுகளும் விவகாரங்களும்

சத்தீஷ்கர் மாநிலத்தின் நாராயண்பூர் மாவட்டத்தில் வசித்து வரும் வைத்தியராஜ் என அழைக்கப்படும் ஹேம்சந்த் மஞ்சி என்பவருக்கு சமீபத்தில் பத்ம ஸ்ரீ விருது வழங்கப்பட்டது.

நாராயண்பூர் நகரில் இரும்புத் தாது சுரங்கம் அமைக்கும் திட்டத்திற்கு மஞ்சி உதவியுள்ளார் என்றும் அதற்கு ஈடாகப் பெரிய தொகையைப் பெற்றுக்கொண்டார் என்றும் நக்சலைட்டுகள் தரப்பில் குற்றம் சாட்டி மிரட்டப்பட்டதோடு இவரது உறவினர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன. ஆனால் மஞ்சி இக்குற்றச்சாட்டை திட்டவட்டமாக மறுத்துள்ளதோடு பொதுமக்களுக்கு விளக்கமும் கொடுத்துவிட்டதாகக் கூறியுள்ளார்.

இந்நிலையில், பாதுகாப்பு அதிகாரிகளின் துணையுடன் வாடகை வீட்டில் வசித்துவரும் இவர் தற்போது பத்ம ஸ்ரீ விருதினை திரும்ப ஒப்படைக்கப் போவதாக அறிவித்திருப்பது அதிர்ச்சியைத் தருவதாக உள்ளது.

மக்களுக்கு மருத்துவ சேவையாற்றியதற்காக ஒன்றிய அரசால் வழங்கப்பட்ட இந்த விருதைத் திரும்ப ஒப்படைக்கப் போவதாக ஒரு சமூக சேவகர் அச்சத்தின் காரணமாக அறிவித்திருப்பது துயரமானது. அவலமானதும்கூட.

ஒன்றிய, மாநில அரசுகள் உடனடியாக இதன் உள்விவகாரங்களில் தலையிட்டு அவருக்குப் போதிய பாதுகாப்பு வசதிகளைச் செய்யவேண்டும் என்பதோடு சமூக அமைப்புகளும் பொதுமக்களும் அவருக்கு ஆதரவாகச் செயல்படவேண்டியது தற்போதைய அவசர அவசியத் தேவையாகும்.

தமிழிலக்கிய சூழலைப் பொருத்தவரை இது விருது வேட்டையாடிகளின் நிலம். விருது வேட்டையில் கடுமையான துரத்துதல்களின் காரணமாக நடுவர்கள் ‘ஆளை விட்டால் போதும்‘ என்று தப்பியோடிய கதைகள் பல உண்டு. விருதாளர்களை முடிவு செய்துவிட்டு நடத்தப்படும் சம்பிரதாயப் போட்டிகளுக்கும் குறைவில்லை. சாதா நிறுவன விருதுகள் முதல் சாகித்ய விருது வரைக்கும் ஒவ்வொருமுறை விருதுகள் வழங்கப்படும்போதும் சர்ச்சைகள் எழுவது பல்லாண்டுகாலங்களாக இருந்துவரும் நடைமுறைதான். விருது பெற்ற பிறகான விருந்துகளைவிட விருதுக்கு முன்பான விருந்துகள் இங்குப் பிரசித்தம். மேல்விளக்கம் தேவையில்லை.

விருதுக்கு அலைகிறவர்கள் ஒரு ரகம் என்றால் இப்போது விருது வழங்கும் அமைப்பொன்று அம்பலப்பட்டிருக்கிறது.

புகழ் வாய்ந்த கவிஞர் ஒருவரின் பெயரால் அறக்கட்டளை தொடங்கி விருது வழங்கி வந்த ஓர் இலக்கிய அமைப்பு நான்காண்டுகளுக்கு முன்பு அறிவித்தபடி ஒரு எழுத்தாளருக்கு இன்றைய தினம் வரை விருதுத்தொகையை வழங்கவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இது கண்டிக்கத்தக்கது. ஒரு எழுத்தாளனை விருதாளனாக அறிவித்துவிட்டு விருதுத் தொகையை வழங்காமல் அலட்சியப்படுத்துவது எவ்வகையிலும் உவப்புடையதல்ல. உடனடியாக இவ்விவகாரம் முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டும் என்பதே இலக்கிய ஆர்வலர்களின் விருப்பம்.

இவ்வேளையில் விருது வழங்கப்படுவதற்கான தயாரிப்புகளை செம்மைப்படுத்திக் கொள்வதற்கு முன்னுதாரணமாக சமீபத்திய ஒரு நிகழ்வைச் சுட்டிக்காட்ட வேண்டும். தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றமும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனமும் இணைந்து 35 ஆண்டுகளாக இலக்கிய விருதுகளை வழங்கி வருகின்றன. இதில் தனிப்பட்ட பங்களிப்பாக, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தைச் சேர்ந்த கவிஞர் கோ.கலியமூர்த்தி என்பவர் கவிஞர் தமிழ்ஒளியின் நூற்றாண்டையொட்டி அவரது பெயரால் ஒரு விருது உருவாக்கி வழங்கப்படவேண்டும் எனத் தீர்மானித்து அதற்காக ரூபாய் ஒன்றரை லட்சத்தை தனது சேமிப்பிலிருந்து வழங்கியுள்ளார்.

தமிழ்க்கவியுலக வரலாற்றில் மறைக்கப்பட்ட கவிஞர் தமிழ்ஒளியின் மீதான தனது பெருவிருப்பின் காரணமாக தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்திற்கு ஒன்றரை லட்சம் நிதித்தொகுப்பு வழங்கியுள்ள அவரின் செயல்பாடு உள்ளபடியே நெகிழ்வுக்குரியதாகும். அவர் பாராட்டப்பட வேண்டியவர். வாழ்த்துக்குரியவர். வருங்காலத்தில் இன்னும் பலராலும் இதுபோன்ற நிகழ்வுகள் தொடரவேண்டும் என்பது நம் ஆவல்.

**ஆசிரியர் குழு**



# நகரத்துப் பெண்கள், கிராமத்துப் பெண்கள் எனப் பிரித்துப் பார்க்கத் தேவையில்லை

**- சு.தமிழ்ச்செல்வி**

**நேர்காணல்: ஜி.சரவணன்**

ஒரு ஞாயிறு பிற்பகலில் எழுத்தாளர் சு.தமிழ்ச்செல்வியை விருத்தாச்சலம் பெரியார் நகரிலுள்ள அவரது இல்லத்தில் சந்தித்தோம். கனிந்த முகத்தோடு வரவேற்றார். கணவர் கவிஞர் கரிகாலனும் உடனிருந்தார். பெயரக் குழந்தைகள் வியன், ஆழியோடு அளவளாவிய எழுத்தாளரை இலக்கியத்தின் திசையில் நகர்த்தி அழைத்து வந்தோம். மா மரங்களும் பலாவும் வாழையும் சூழ்ந்த அவரது தோட்டத்தில் அமர்ந்து உரையாடத் தொடங்கினோம்.

அளம், கற்றாழை, கீதாரி, ஆறுகாட்டுத்துறை, சிலாவம் உட்பட தமிழின் முக்கியமான நாவல்களை எழுதியவர். பல்கலைக் கழகங்களில் இவரது படைப்புகள் பாடங்களாக இருக்கின்றன.

தமிழ் வளர்ச்சித்துறை விருது, கலைஞர் பொற்கிழி விருது, த.மு.எ.க.ச விருது, அவள் விருது, புதிய தலைமுறை நம்பிக்கை நட்சத்திரம் விருது, விளக்கு விருது, தமிழ்ப்பேராய விருது எனப் பெருமைகள் பெற்றவர். நவீன தமிழ் இலக்கியத்தின் தவிர்க்க முடியாத ஆளுமை. கேட்கும் கேள்விகளுக்கு தயக்கம் இல்லாமல் சிந்தித்தபடியே பதில் சொல்கிறார். வாருங்கள். சு. தமிழ்ச்செல்வியோடு உரையாடுவோம்.

**வெவ்வேறு நிலம் சார்ந்து கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் பத்து நாவல்கள், இரண்டு சிறுகதைத் தொகுதிகள் எழுதியுள்ளீர்கள். உங்களின் இந்த நெடிய எழுத்துப் பயணத்தை எப்படி மதிப்பிடுகிறீர்கள்?**

குடும்பம், பணி இவற்றுக்கிடையே இவ்வளவு எழுதியிருக்கிறேன் என்பது பிரமிப்பாகவும் பெருமையாகவும் இருக்கிறது. எனது படைப்புகளைப் படித்த பலர் என்னோடு உரையாடுகிறார்கள். இருளில் காணத் தவறிய ஏதோ ஒன்றை, அவர்கள் என் எழுத்தின் ஒளியில் கண்டடைந்ததாகக் கூறினார்கள். பலர் என் கதைகளில் தங்களையே பார்த்ததாகச் சொன்னார்கள். அடுத்து என்ன செய்வது? தவித்தபோது என் படைப்பின் பாத்திரங்கள் எடுத்த முடிவுகள் தமக்கு உத்வேகமளித்ததாகத் தெரிவித்தவர் உண்டு.

என் படைப்புகள் ஊடாக நான் பல பிறவிகளை எடுத்தேன். ஏராளமான வாழ்வை வாழ்ந்தேன். புதிய நிலப் பகுதிகளில் உலவினேன். வாழ்வின் புதிர்களை அவிழ்க்க நள்ளிரவுகளில் கண்விழித்தேன். எழுத்து எனக்கு தீரா மனக்கொதிப்பைத் தந்தது. அதுவே அமைதியைக் கண்டுபிடிக்கும் வழியையும் காட்டியது.

வழக்கமான மதிப்பீடுகளைக் கலைக்கவும், நவீன வாழ்வுக்குகந்த மதிப்பீடுகளை அடையவும், என் படைப்புகள் சமகால சமூகத்துக்கு உதவியிருப்பதாகவே நம்புகிறேன். பழம் சமூகம் தன் காலத்தின் தாழியில் மூடிவைத்திருந்த நாட்டார் செல்வங்களை, என் படைப்பின் வழி அள்ளிவந்து தந்திருக்கிறேன்.

இதன்வழி மொழியின் கருவூலத்தைச் செழுமைப்படுத்தியிருக்கிறேன். பிரபஞ்சத்தின் முன்னால் நான் ஒரு சிறு துகள் என்பதை எழுதி எழுதி அறிந்திருக்கிறேன். சக மனிதர்கள் அறியவும் உதவியிருக்கிறேன். என் எழுத்தைப் பல்கலைக் கழகங்கள் எடுத்துச் சென்றபோது, மாணவர்கள் என்னைத் தேடி வந்தார்கள். அவர்களோடு உரையாடியபோது மேலும் உற்சாகத்தையும் நம்பிக்கையையும் பெற்றேன்.

நான் என்பது என்ன? எனத் தேடிக்கொண்டே இருந்தபோது, அது வேறொன்றுமில்லை. நானென்பது என் எழுத்தென உணர்ந்தேன்.

**வாழ்க்கைச் சூழல் காரணமாக கடுமையாக உழைக்கும் விளிம்புநிலைப் பெண்களை உங்கள் படைப்புகளில் அதிகம் ஆவணப்படுத்தியுள்ளீர்கள். அந்த அனுபவங்களைக் கூறுங்களேன்.**

அடிப்படையில் வேளாண் குடும்பத்துப் பெண் நான். ஆகவே உழவு வாழ்க்கை எனக்கு மிகவும் பரிச்சயமானது. எங்களூர் ஒரு கடலோரக் கிராமம், என்பதால் மீன்பிடி வாழ்வையும் நன்கு அறிவேன். எங்களூருக்கு அருகேயுள்ள உப்பளங்களையும் அது சார்ந்த தொழிலாளர்கள் வாழ்முறையும் எனக்குப் பழக்கமானதுதான்.

திருமணத்துக்குப் பிறகு நாங்கள் விருத்தாசலத்தை ஒட்டிய பெரியார் நகரில் வசிக்கத் தொடங்கினோம். அங்கு எங்கள் குடியிருப்புப் பகுதி இடையே உள்ள காலி மனைகளில் கீதாரிகள் கூடாரங்கள் அமைத்து தங்குவார்கள். அந்தப் பெண்மணிகளோடு இரவில் பேசிக்கொண்டிருப்பேன். இரவில் மழை என்றால், அவர்கள் எங்கள் வீட்டில் தங்கிக்கொள்வார்கள். இப்படி அவர்களோடும் நெருங்க முடிந்தது.

பின்னலாடை நகரில் என் உறவுக்காரப் பெண்மணிகள் பலர் வேலை செய்தார்கள். ஒருமுறை அவர்களைப் பார்க்கச் சென்றபோது கற்றாழைக்கான விதை முளைக்கத் தொடங்கியது. எங்கள் தெருவில் ஒரு பெண் மீன் விற்பார். அவரிடம் மீன் வாங்குவோம். அவரே அரிந்து தருவார். அப்போது தன் கதையை என்னிடம் பகிர்ந்துகொள்வார்.

அது ஓர் இதிகாசம்போல வளர்ந்தபடி இருந்தது. அவரது கதையை ஒரு பாரமாக என் மனசு சுமந்து கொண்டிருந்தது. இறக்கி வைக்கலாமே எனத் தோன்றியது. அதுதான் கண்ணகி நாவல்.

ஒரு முறை வேதாரண்யம் போயிருந்தோம். அப்படியே ஆறுகாட்டுத்துறைக்கும் போனோம். அங்கு ஒரு நாட்டாமைக்காரர். நண்பரொருவர் அவரிடம் என்னை எழுத்தாளர் என அறிமுகப்படுத்தியிருந்தார். அவர் வீட்டுப் பெண்களிடம் பேசிக்கொண்டிருந்தபோது வளர்ந்த புதினம்தான் ஆறுகாட்டுத்துறை. அந்நாவலை எழுதி முடிக்க சில காலம் ஆறுகாட்டுத்துறையில் தங்க வேண்டி வந்தது.

பிறகு சிலாவம் நாவல் எழுத தூத்துக்குடி போனேன். சிலநாட்கள் கடலில் பயணித்தேன். புதிய தீவுகளுக்குப் போனேன். என் நாவல் பரப்பில் காணப்படுகிற வாழ்க்கை ஏதோ நாவல்களுக்காக நான் வேடிக்கை பார்த்து எழுதிய வாழ்வல்ல. நானும் என்னைச் சுற்றியுள்ளவர்களும் அனுபவித்த வாழ்வு.

இப்புதினங்களில் கண்ணீரும் வேர்வையும் மட்டுமல்ல. ஆன்மாவும் இருக்கிறது. மானுட இனவரைவியலுக்குத் தேவையான தரவுகள் இருக்கின்றன. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் காணக்கூடிய காப்பிய அவலங்கள் இருக்கின்றன.

**சரி சிலாவம் நாவலில் வருவதுபோல் இப்போது முத்துக்குளித்தல் என்பதே நடப்பதில்லை என்று சொல்கிறார்களே அது குறித்து..**

ஆம். சில தட்ப வெப்பச் சூழல் காரணமாக தூத்துக்குடியில் இப்போது யாரும் முத்துக் குளிப்பதில்லை. எழுபது ஆண்டுகளுக்கு முன்பு குளித்ததாகச் சொல்கிறார்கள். இதனால் தூத்துக்குடிக்கு முத்து நகர் என்கிற பெயரும் உண்டு. சிலாவம்

> ஏகாதிபத்தியங்கள், பெருந்தேசியங்கள் போன்றவை சிறிய இனக்குழுக்களின் அடையாளங்களை அழிப்பதில் கவனமுடன் செயல்படும்போது, படைப்புகளில் நாட்டார் அடையாளங்கள் தேவைப்படுகின்றன.

எழுதச் சென்றபோது அங்கு முத்துக் குளிப்பவர்களின் வாரிசுகளைச் சந்திக்க முடிந்தது. இப்போது அவர்கள் சங்கு மற்றும் சிப்பி சேகரிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். சங்கு குளிப்பதற்காக அதிகாலையிலேயே கடலுக்குச் செல்கிறார்கள். கடற்கரையிலிருந்து பத்துமைல் தொலைவு சென்று சங்குகளை எடுத்து வருகின்றனர். முத்துக் குளித்த பழைய அனுபவங்களையும் இப்போது சங்கு, சிப்பி சேகரிக்கும் அனுபவங்களையும் இணைத்து, சிலாவம் நாவலை எழுதியிருக்கிறேன்.

**தங்கள் படைப்புகளில் பதிவாகியுள்ள பெண்கள் இந்தக் காலகட்டத்திலும் இருக்கிறார்களா?**

நிச்சயம் இருக்கிறார்கள். இன்னும் பெண்கள் வயல்காட்டில் அல்லல் படுகிறார்கள். அளத்தில் உப்பு சேகரிக்கிறார்கள். பெண் குழந்தைத் தொழிலாளர்களை ஊக்குவிக்கிற சுமங்கலித் திட்டங்கள் மறைமுகமாக செயல்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன .

குறைந்த சம்பளத்துக்கு பெண்களிடம் வேலை வாங்கும் போக்கில், பெரிய அளவு மாற்றம் ஏற்படவில்லை. ஆனாலும் நிலைமை முன்னேறி வருகிறது. தமிழகத்தில் பெண் கல்வியில் இடைநிற்றல் விகிதம் குறைந்திருக்கிறது. ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது படிக்கும் பெண் பிள்ளைகளுக்கு சைக்கிள் கொடுத்தார். இப்போதைய அரசு உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் 1000 கொடுக்கிறது. குடும்பத் தலைவிகளுக்கு உரிமைத்தொகை அளிக்கிறது. பெண்களுக்கு இலவசப் பேருந்து பயணம் திட்டத்தையும் பாராட்டியாக வேண்டும்.

இத்தகைய மாற்றங்கள் உருவாகவே எழுதுகிறோம்.

**நம் சமூகத்தில் பொதுவாக ஆணாதிக்கக் கட்டுமானமாகவே குடும்ப அமைப்பு இருந்து வருகிறது. படித்து வேலைக்குச் செல்லும் பெண்களில் பலரது நிலையும் அவ்வாறாகவே இருக்கிறது. இதனை எப்படி சமன்படுத்த இயலும் என நினைக்கிறீர்கள்?**

நிச்சயம் இயலும். இன்று மாற்றங்கள் நிகழத் தொடங்கியிருக்கின்றன. கோவிட் தொற்று காலத்தில் குடும்பத்தின் அவசியத்தை அனைவரும் உணரத் தொடங்கினார்கள்.

இன்றைய சூழலில் ஆண், பெண் இருபாலரும் வேலைக்குச் செல்கிறார்கள். அவ்வாறே இருவரும் சமையலறைக்குச் செல்கிறார்கள். குழந்தை வளர்ப்பில் இருவரும் அக்கறை காட்டுகிறார்கள். இளைய சமூகம் முன்பைவிட முற்போக்கான பாதையில் செல்வதைக் காண முடிகிறது. இருப்பினும் குடும்ப வன்முறைகள் குறித்த செய்திகளையும் ஊடகங்களில் கவனிக்கிறோம். கோவிட் காலத்தில் வெளியான தப்பெட், கிரேட் இந்தியன் கிச்சன் போன்ற படங்களுக்கு நிறைய பெண்கள் விமர்சனம் எழுதியிருந்தார்கள். குடும்பம் எந்த அளவு சனநாயகப் பண்பைப் பெறவேண்டும் என்கிற அவர்களது எதிர்பார்ப்பை உணரமுடிந்தது. இதை 2k இளைஞர்கள் உணர்ந்தே இருக்கிறார்கள். மாற்றம் ஒன்றுதான் மாறாத விதி. எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

**அவலங்களையும் துயரங்களையும் எதிர்கொள்ளும் பெண்களை மட்டுமே தொடர்ந்து எழுதி வருகிறீர்களே?**

அது, நான் பெண்ணாக இருப்பதாக இருக்கலாம். சமூகத்தால் ஒருவர் பாலினமாக அறியப்படுகிறவரை இத்தகைய சார்புகள் இருக்கவே செய்யும். ஒடுக்கப்பட்ட ஒரு பிரிவிலிருந்து எழுத வருபவர் தாம் சார்ந்த சமூகத்தை பிரதிபலிக்கவே செய்வார். அதேவேளை சமூகத்தை இப்படிப் பிரித்தும் பார்க்க முடியாது. இங்கு குடும்பம் என்கிற அமைப்பு யதார்த்தமாக இருக்கிறது. பெண்களைப் பற்றி எழுதுவது குடும்பம் குறித்த விமர்சனமாகவும் இருக்கிறது. அது குடும்பத்தில் மட்டுமல்ல, சமூகத்திலும் பாலின சமத்துவத்தை சனநாயகத்தை செயல்படுத்த உதவுமென நம்புகிறேன். இங்கு சட்டங்களை விடவும் மனப்போக்கில் மாற்றம் தேவைப்படுகிறது. அத்தகைய புதிய மதிப்பீடுகளை இலக்கியம் சமூகத்துக்கு வழங்கும் என்பது என் ஆழமான நம்பிக்கை.

**அப்படியென்றால் அடித்தள வர்க்கப்பெண்கள் வாழ்வில் மகிழ்ச்சி என்பதோ கொண்டாட்டம் என்பதோ அறவே இல்லை என்று கூறமுடியுமா?**

அப்படிக் கூற முடியாது. அடித்தள மக்களிடம்தான் கேளிக்கை மனோபாவம் அதிகம். தங்கள் துன்பங்களை பாட்டிலும் கூத்திலும் கழிப்பவர்கள் அவர்கள். சிலப்பதிகாரத்தில் வருகிற குரவைக்கூத்தை ஆடியவர்கள் அடித்தட்டுப் பெண்களே. இயல்பாகவே படைப்பாக்க

மனநிலை அதிகம் கொண்டவர்கள் பெண்கள். சலிப்பு நிறைந்த வாழ்வை கேளிக்கையாக மாற்றத் தெரிந்தவர்கள் அவர்கள். நடவு நட்டாலும் பாட்டு. நலங்கு வைத்தாலும் பாட்டு. உழவுக்கும் பாட்டு. இழவுக்கும் பாட்டு. பிறப்புக்கும் பாட்டு. இறப்புக்கும் பாட்டு என்பதே அடித்தட்டுப் பெண்களின் இயல்பாக இருந்து வருகிறது.

**நீண்டகாலமாக நகரத்தில் வசித்து வந்தாலும் நகரத்துப் பெண்கள் குறித்தும் பல்லாண்டுகளாகப் பணியாற்றி வரும் கல்விப்புலம் சார்ந்த பெண்களைப் பற்றியும் ஏதும் எழுதவில்லையே?**

கற்றாழை நாவல் கிராமத்தில்தான் தொடங்குகிறது. அது வந்தடைகிற இடம் திருப்பூர். கண்ணகி கிராமத்துப் பெண்தான். ஆனாலும் அவள் அயல்நாடுகளுக்குச் சென்று வேலை செய்வதாக எழுதியிருக்கிறேன்.

நுகர்வளவில் கிராமம் மற்றும் நகரத்துப் பெண்களிடையே சில வேறுபாடுகள் தோன்றலாம். அவை தோற்றம் மட்டுமே.

நகரமோ, கிராமமோ, பெண்கள் வசதியாக வாழுவதற்குத் தேவையான துணிச்சலான முடிவுகளை எடுக்க முன்வர வேண்டும். ஓரளவு கல்வி, வேலைவாய்ப்பு போன்றவை இதற்கு உதவக்கூடும். நம்முடைய கல்வி முறையும் ஆண்களை முதன்மையாக ஏற்றுக்கொள்ளுகிற மனதைத்தான் பெண்களிடம் தயாரிப்பதாக இருக்கிறது. இந்நிலையில் நகரத்துப் பெண்கள், கிராமத்துப் பெண்கள் எனப் பிரித்துப் பார்க்கத் தேவையில்லை.

மெட்ரோபாலிட்டன் நாகரிகமென்பது வெறும் மால் போவது, மல்ட்டிஃபிளக்ஸ் தியேட்டருக்குப் போவதில்லை. அது பெண்களை, விளிம்புநிலை மக்களை சமத்துவமாக பாவிக்கிற மனநிலையாக உயரவேண்டும். அப்படிப்பட்ட மாநகரப் பெண்களின் வாழ்வையும் வருங்காலத்தில் எழுதுவேன். இப்போது எழுதிக் கொண்டிருக்கும் புதினம்கூட பள்ளி சார்ந்த உள்ளடக்கம் உடையதுதான்.

**யதார்த்தவாதப் பெண் எழுத்தாளரான நீங்கள் பெண்ணியக் கோட்பாடுகளை எப்படி அணுகுகிறீர்கள்?**

புதினங்கள் சிறுகதைகளை எந்தக் கோட்பாட்டின் அடிப்படையிலுயும் எழுதுவதில்லை. மார்க்ஸ் சொல்வதுதான். ஒவ்வொரு சொல்லுக்குப் பின்னாலும் ஒரு வர்க்க நலன் இருக்கிறது. நான் பெண் என்பதால் பாலின நலன் இருக்கலாம். மற்றபடி எனது கதைகள் யதார்த்தவாத அழகியலாக இருக்கலாம். அதேவேளை அவை நிலவுகிற யதார்த்தத்தைப் பிரதிபலிப்பவை அல்ல. பெண்ணுக்கு உகந்த மாற்று யதார்த்தங்களை படைப்புகளில் வெகு இயல்பாகக் கட்டமைக்கிறேன். நான் கனவு காண்கிற யதார்த்தமே எனது படைப்புகளாக இருக்கின்றன.




**தமிழில் பெண்கள் எழுத்து பெரிதாக அங்கீகரிக்கப்படுவதில்லை என்ற தங்கள் கருத்து இன்று மாற்றமடைந்திருக்கிறதா?**

எப்போது இப்படி சொன்னேன். அல்லது எழுதினேன் எனச் சரியாக ஞாபகம் இல்லை.

(குறுக்கிட்டு) **2016இல் ஆனந்த விகடன்...**

சரி, யாரிடமிருந்து அங்கீகாரம்? எதற்கான அங்கீகாரம்? அங்கீகாரம் தேவைதானா?

என்கிற கேள்விகளை எனக்கு நானே கேட்டுக்கொள்கிறேன். அங்கீகாரங்கள் ஒருவரது வேகத்தை, தேடலை, போராட்டத்தை குளிர்விக்கக் கூடும். அங்கீகாரங்களைக் கடந்து என் எழுத்துக்கள், வாசிக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறேன்.

**இன்றைய காலகட்டத்தில் இந்திய அளவிலும் தமிழ்ச் சூழலிலும் ஆண் பெண் சமத்துவம் எந்தளவில் உள்ளதாகக் கருதுகிறீர்கள்?**

ஓரளவு முன்னேற்றம் அடைந்துள்ளது. கூலித் தொழில் செய்பவர்களிடையே ஆண், பெண் ஊதிய விகிதத்தில் இன்னும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. எம்.என்.சியில் வேலை செய்தாலும் பெண் என்றால் லேசான இளக்காரம் இருக்கத்தான் செய்கிறது. பணியிடங்களில் பெண்களுக்கு போதிய அளவு பாதுகாப்பு இல்லை. பாலியல் சீண்டல்கள், வன்முறைகள் குறையவேண்டும். பெண்களை வல்காரிட்டியாகக் காட்டுகிற வணிகக் கலைவடிவங்கள்,

விளம்பரங்கள் குறித்த விழிப்புணர்வு நம் சமூகத்துக்குத் தேவைப்படுகிறது.

**இன்றைய நிலையில் இன்னும் எப்படியான நிலைக்குப் பெண்கள் உயரவேண்டும் என நினைக்கிறீர்கள்?**

பெண்கள் படிக்கிறார்கள். உயர் பதவிக்குச் செல்கிறார்கள். ஆனால் அவர்கள் மனம் ஆண்களால் தயாரிக்கப்பட்ட மனமாகவே இருக்கிறது. கல்வி, மதம், பண்பாடு எனப் பரந்த அளவிலான முன்னேற்றங்கள், மாற்றங்கள் தேவைப்படுகிறது. குறிப்பாக பாலின சமத்துவப் பார்வையை விரிவுபடுத்தும் பொறுப்பு, கல்வி மற்றும் பண்பாட்டு நிறுவனங்களுக்கு இருக்கிறது.

**நாட்டார் வழக்காற்றியல் சார்ந்த தொன்மங்கள் உங்கள் படைப்புகளின் ஊடாகப் பெருமளவில் வருகின்றன. அதைப் பற்றிக் கூறுங்களேன்.**

உலகின் சிறந்த இலக்கியங்கள் யாவும் நாட்டார் கூறுகளை உள்ளடக்கியவையே. கடலும் கிழவனும் நாவலை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் இல்லாத நாட்டார் கூறுகளா? ஏகாதிபத்தியங்கள், பெருந்தேசியங்கள் போன்றவை சிறிய இனக்குழுக்களின் அடையாளங்களை அழிப்பதில் கவனமுடன் செயல்படும்போது, படைப்புகளில் நாட்டார் அடையாளங்கள் தேவைப்படுகின்றன.

சிறந்த உள்ளூர் படைப்புகள்தாம் சிறந்த உலகப் படைப்புகளாகவும் போற்றப்பட்டிருக்கின்றன.

**தாங்களறிந்த நாட்டார் தெய்வங்களின் கதைகள், நாட்டார் கதைகள், பாடல்களைத் தொகுத்து வெளியிடும் திட்டம் ஏதேனும் இருக்கிறதா?**

அப்படி தனியாக வெளியிடும் எண்ணம் இல்லை. தன்னியல்பாக படைப்புகளில் மட்டுமே பயன்படுத்தி வருகிறேன். இவை பல்கலைக் கழகங்கள், நாட்டுப்புற ஆய்வாளர்கள் செய்யவேண்டிய பெரும்பணி என நினைக்கிறேன்.

**நாட்டார் கதைகளை எவ்விதமாகச் சேகரிக்கிறீர்கள் எனக் கூறமுடியுமா?**

அளம், மாணிக்கம், கீதாரி போன்ற எனது புதினங்கள் பலவற்றில் நாட்டார் கதைகளை வாசிக்க முடியும். பெரும்பாலும் இவை எல்லாமே சிறுவயதில் நான் கேட்ட கதைகள். என்னுடைய அம்மா, அக்கா, எங்களூரைச் சேர்ந்த மூதாட்டிகளிடம் கேட்ட கதைகள். எனது சிறு பருவம் கதைகளால் வளர்ந்தது. எங்களூரில் இருந்த சிறு தெய்வங்கள் ஒவ்வொன்றுக்குப் பின்னாலும் கதைகளிருந்தன. வீடுகளில் செய்யப்படும் சின்னச் சின்ன சடங்களுக்குப் பின்னாலும் கதைகள் இருந்தன. இவை உண்மையா? பகுத்தறிவுக்கு உட்பட்டவையா? என ஆராய விரும்பியதில்லை. இவை ஒரு வளமார்ந்த சமூகத்தின் நினைவடுக்குகளில் இருந்தன.

இவற்றைப் பாதுகாத்து, அடுத்த தலைமுறைக்குக் கொடுப்பது, எனது கடமை எனக் கருதுகிறேன்

**இன்றைய தமிழ்ச் சூழலில் பெண் எழுத்தாளர்களின் நிலை எப்படியுள்ளது? புதியவர்களின் வருகை நம்பிக்கையளிப்பதாக உள்ளதா?**

சிறப்பாக உள்ளது. நிறைய புதுமுகங்கள் எழுத வருகிறார்கள். ஆகாத தீதார் என்று ஒரு சிறுகதைத் தொகுதியை சமீபத்தில் படித்தேன். ஆமினா முகம்மத் புதிய எழுத்தாளராகத் தோன்றவில்லை. இசுலாமியப் பின்னணியில் பெண்களின் வாழ்வியலை பிரமாதமாக எழுதியிருந்தார். பற்சக்கரம் என்றொரு நாவல். எஸ்.தேவி எழுதியிருக்கிறார். சுமங்கலித் திட்டம் போன்றவற்றால் பெண் அடையும் வலியை எழுதியுள்ளார். இவரும் புது எழுத்தாளர்தான். சிங்கப்பூரிலிருந்து எழுதும் ரமா சுரேஷின் புனைவுகள் தனித்தன்மை உடையது.

இப்படிப் பலர் எழுதி வருகிறார்கள். இத்தகைய சகோதரிகளின் இயக்கம் நம்பிக்கையையும் உற்சாகத்தையும் தருகிறது. முகநூலில் பெண்கள் நிறைய பேர் கவிதைகள் எழுதுகிறார்கள். சமூக விமர்சனத்தில் ஈடுபடுகிறார்கள். இவற்றை ஆரோக்கியமான போக்காகப் பார்க்கிறேன்.

**தற்போது ஏதும் எழுதிக்கொண்டிருக்கிறீர்களா?**

இரண்டு நாவல்கள் எழுதிக் கொண்டிருக்கிறேன். ஒன்று கல்விப் புலம் சார்ந்தது. மற்றொன்று மருத்துவம் சார்ந்தது. இப்போது பேரக் குழந்தைகளைப் பேணும் வேலையும் சேர்ந்திருக்கிறது. அவர்கள் மழலையில் மகிழ்ந்திருக்கும் காலமிது. ஆனாலும் எழுத்துப்பணி ஓயப்போவதில்லை.

**பொதுவாக இன்றைய தமிழிலக்கிய சூழல் போக்குகள் உங்களுக்கு நிறைவளிக்கக் கூடியதாக இருக்கிறதா?**

நிறைவளிக்கிறது. நிறைய இளைஞர்கள் புதிதாக எழுத வருகிறார்கள். தேய்வழக்குகள் இல்லை. கதை சொல்லலில், கவிதையில், புதுமை வளர்கிறது. நேர்க்கோட்டு கதை மரபு மாறியிருக்கிறது.

எல்லாவற்றையும் கலைத்துப்போடும் உத்வேகத்தை இளம் தலைமுறைப் படைப்பாளிகள் பெற்றிருக்கிறார்கள். லஷ்மி சரவணக்குமார், அகரமுதல்வன், என்.ஸ்ரீராம், நரன், கதிர்பாரதி, பூவிதழ் உமேஷ், மாதவன் அதிகன், சீனிவாசன் நடராசன், கார்த்திக் திலகன், வெய்யில், திருச்செந்தாழை இப்படிப் பலர் புதுமை விருப்பத்தோடு இயங்குகிறார்கள். சமீபத்தில் மு.தமிழ்ச்செல்வன் எழுதிய கரிக்காசு நாவலையும் வெற்றிச்செல்வன் எழுதிய குளம்படி நாவலையும் படித்தேன். இரண்டுமே முக்கியமான நாவல்கள். இயற்கை வேளாண்மை குறித்து வானவன் எழுதிய ஒரக்குழியும் பொருட்படுத்தி வாசிக்க வேண்டிய நாவல்.

சமகால தமிழ் இலக்கியச் சூழல் ஆரோக்கியமான திசைவழியில் இயங்குவதாகவே நம்புகிறேன்.

●

கட்டுரை


திருவிடர்கழகம்.

அடக்கம்.

1. தமிழ்மொழியும் சிவநெறியும்.
(சுவாமி. விருதை. சிவஞானயோகிகளின் பெருஞ்சொல்)

2. தமிழர் தொன்மை, அகவல், டி. டி.

திருவிடர்கழக அமைச்சர்
சுவாமி, விருதை
சிவஞானயோகிகளால்
வெளியிடப்பட்டது.

மதுரைத் தமிழ்ச்சங்கம் பவர்ப் பிரசில்
அச்சியற்றப்பட்டது.

1913.

விலை அணா 2.

# தனித்தமிழ் இயக்க முன்னோடி சுவாமி விருதை சிவஞான யோகியார்

**டாக்டர் சு.நரேந்திரன்**

மறைமலையடிகள் தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மும்மொழிப் புலமையர்; காளிதாசன் இயற்றிய சாகுந்தலம் நாடகத்தைத் தமிழில் படைத்தளித்தவர்; பட்டினப்பாலை, முல்லைப்பாட்டு முதலிய நூல்களுக்கு உரை எழுதியவர்; வாழ்க்கை வரலாறு, படைப்பிலக்கியம் முதலிய துறைகளிலும் தம் ஆற்றலை வெளிப்படுத்தியவர். இவ்வாறு துறைதோறும் மறைமலையடிகள் தமிழ்த் தொண்டாற்றியிருப்பினும் தனித் தமிழியக்கம் தோற்றிய பணியே அனைவராலும் மிகுதியும் போற்றப்படும் தன்மையதாய் உள்ளது.

**தனித்தமிழியக்கத் தோற்ற நிகழ்ச்சி:**

தனித்தமிழியக்கத் தோற்ற நிகழ்ச்சி குறித்து மறைமலையடிகள் மகள் நீலாம்பிகை அம்மையாரும், மகன் மறை திருநாவுக்கரசும் தம் நூல்களில் எழுதியுள்ளனர்.

தனித்தமிழியக்கத் தோற்ற நிகழ்ச்சியின்போது உடனிருந்தவரான நீலாம்பிகை அம்மையார் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

வட சொற்கலப்பால் தமிழ் தன் இனிமையும் தூய்மையும் இழத்தலை யான் முதன்முதல் அறிந்தது பின்வருமாறு:

யான் பதின் மூன்றாண்டுடைய சிறுமியாயிருந்தபோது ஒரு நாட் சாயங்காலம் என் தந்தையாரவர்களுடன் மிக மகிழ்வோடு எங்கள் தோட்டத்தில் உலாவிக் கொண்டு வருகையில் தந்தையார் தம்மை மறந்து இராமலிங்க அடிகள் அருளிச் செய்த திருவருட்பாவிலுள்ள "பெற்றதாய்தனை மக மறந்தாலும்" என்னும் பாட்டைப் பாடி வந்தார்கள். அப்பாட்டின் இரண்டாவது அடியாக "உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்" என்பதனைச் சொன்னபோது என் தந்தையாரவர்கள் என்னை நோக்கி "அம்மா இப்போது நான் பாடின பாட்டைத் தூயதமிழில் இராமலிங்க அடிகள் எவ்வளவு அழகாய்ப் பாடியிருக்கிறார்கள்! ஆனால் அப்பாட்டின் இரண்டாம் அடியிலுள்ள 'தேகம்' என்ற சமஸ்கிருதச் சொல்லை நீக்கிவிட்டு, உடம்பாகிய யாக்கை என்று அங்கே அமைத்துப் பாடியிருந்தால் இன்னும் எவ்வளவு நன்றாயிருக்கும்! தமிழில் வடசொற்களைச் சேர்ப்பதால் தமிழ் தன் இனிமை இழந்து போவதோடு, பல தமிழ்ச் சொற்களும் வழக்கில் இல்லாமல் இறந்து போகின்றன" என்றார்கள். இது கேட்ட நாள்முதல் என் தந்தையாரும் நானும் தனித்தமிழிலேயே பேசுவதற்கும் எழுதுவதற்கும் உறுதி கொண்டோம்."

நீலாம்பிகை விவரிக்கும் இந்நிகழ்ச்சியே தனித்தமிழியக்கம் தோன்றுவதற்குத் தோற்றுவாயாக அமைந்தது.

இதை மறை. திருநாவுக்கரசும் குறிப்பிட்டுள்ளார். இந்நிகழ்ச்சி நடந்த ஆண்டு கி.பி.1916.

தனித்தமிழியக்கத்தின் தோற்ற நிகழ்ச்சி, "சுவாரசியமானதாகவும், நாடகபாணி நெறிப்பட்டதாகவும் அமைகின்றது எனக் கருதும் சிவத்தம்பி, மறைமலையடிகள் "இத்தகைய நாடக நிலைப்பட்ட முறையில் தனித் தமிழியக்கத்தைத் தோற்றுவித்தாரென்று கூறுவதிலும் பார்க்க பல காலமாக உள்ளத்துள் அறிவுசெல் நெறியில் கருவிட்டு உருப்பெற்று வளர்ந்து வந்த ஒரு கருத்து மேற்குறிப்பிட்ட சம்பவம் காரணமாக இயக்கப் பரிணாமம் பெற்றது எனக் கூறுவதே பொருத்தமானதாகும்" என்று முடிவு செய்கிறார்.

இம்முடிவு பொருத்தமானதே. தனித்தமிழ்க் கருத்து பல காலமாக மறைமலையடிகள் உள்ளத்துள் எவ்வாறு வளர்ந்து வந்தது எனக் காண்பது தனித்தமிழியக்கம் தோன்றுதற்குரிய அகத்தூண்டல்களை அறியத் துணை செய்யும்.

மறைமலையடிகள் அவரது பதினைந்தாம் வயதில் தொடங்கிய முறையான தமிழ்க்கல்வி இருபத்தோராம் வயதில் பெரும்பாலும் நிறைவெய்தியது. கி.பி.1897 இல் அவர் இருபத்தோராம் அகவை எய்தினார். அவ்விளமைக் காலத்திலேயே தொல்காப்பியம், திருக்குறள், சிற்றம்பலக்கோவையார், கலித்தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், நாலடியார், நன்னூல் விருத்தி, இறையனார் அகப்பொருள் உரை, தண்டியலங்காரம், சிவஞானபோதம், சிவஞானசித்தியார் முதலிய தமிழ் இலக்கிய இலக்கண மெய்யியல் நூல்களைக் கற்றிருந்தார்.

**தூண்டல்கள்:**

அவரது ஆசிரியர் வெ. நாராயணசாமியிடம் கற்ற ஆழமான தமிழ்க்கல்வி மறைமலையடிகளுக்கு இயல்பாகத் தூய தமிழை எழுதவும் பேசவும் வாய்ப்பாக அமைந்தது.

இதனால்தான் "அடிகளுக்கு அரிய தூண்டலாக அமைந்தது இளந்தைப் பருவத்திலேயே அவர் ஆழ்ந்து கற்ற தமிழ் வளமேயாம்" என இரா.இளங்குமரன் குறிப்பிடுகிறார்.

"நாகப்பட்டினம் சொக்கநாதப்பிள்ளை மகன் வேதாசலம் பிள்ளையின் தமிழாசிரியரான வெ. நாராயணசாமிப் பிள்ளையே அவரது தனித்தமிழ் இயக்கத்தின் ஆரம்பத்திற்குக் காலாக விருந்தாரெனலாம்" என சிவத்தம்பி சுட்டுகிறார். பேராசிரியர் சுந்தரனாரோடு மறைமலையடிகளைத் தொடர்பு படுத்திய நிகழ்ச்சியால்தான் தமிழ்; தமிழின மேன்மைக் கோட்பாடு மறைமலையடிகளுக்கு ஏற்பட்டது என்ற கருத்தில் சிவத்தம்பி மேற்சுட்டியவாறு குறித்துள்ளார். அவர் எக்கருத்தில் இதைக் குறித்திருப்பினும் மறைமலையடிகட்கு இளமையில் தமிழ்க்கல்வி புகட்டிய அவரது ஆசிரியர், அடிகளின் தனித் தமிழ்க் கோட்பாட்டிற்கு ஒரு தூண்டுகோலாக இருந்தார் என்பது ஏற்கக் கூடியதே.

கி.பி.1897 ஆம் ஆண்டிற்குள்ளே கட்டுரை எழுதும் ஆற்றலும் பெற்றுவிட்டார் மறைமலையடிகள். அவ்வாண்டில் 'முருகவேள்' என்ற தனித்தமிழ்ப் புனைபெயரில் நீலலோசனி என்னும் இதழில் கட்டுரைகள் எழுதினார். தனித்தமிழியக்கம் தோன்றுவதற்குப் பத்தொன்பது ஆண்டுகட்கு

முன்னரே 'முருகவேள்' எனும் தனித் தமிழ்ப் புனைபெயர் ஏற்றமை மறைமலையடிகட்கு அவ்விளமைக் காலத்திலேயே தனித்தமிழ் உணர்வு அரும்பியிருந்ததைக் காட்டுகிறது.

கி.பி.1898 இல் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் தமிழாசிரியராகப் பணியாற்றத் தொடங்கியபின் பரிதிமாற் கலைஞரின் தொடர்பு கிடைத்தது.

சூளை, சோமசுந்தர நாயகரோடு *(1846-1906)* இருந்த நெருக்கத்தாலும் அன்றாடத் தொடர்பாலும், அவரை ஆசிரியராகக் கொண்டு சிவனியக் கொண்முடியையும், மெய்யியலையும் கற்கும் வாய்ப்பை மறைமலையடிகள் அப்போது பெற்றார்.

வடமொழிச் சொற்களை மிகக் கலந்து எழுதும் சோமசுந்தர நாயகர் மறைமலையடிகளின் தனித்தமிழ் ஆற்றலையறிந்து தனித் தமிழிலேயே எழுதுமாறு தூண்டினார்.

மறைமலையடிகளின் தனித்தமிழ் நடை தடைப்படும் வகையில் வடமொழி கலந்த தன் ஆசிரியர் நடையை அவர் பின்பற்ற விழைந்ததையும் அதனைச் சோமசுந்தரர் தடுத்தாட்கொண்டதையும் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"யாம் நாயகரவர்களின் நூல்களைப் பயின்று அவர்களையடுத்த இளமைக்காலத்தில் நாயகரவர்களின் உரைநடையைப்போல் வட சொற்கலப்பு மிகுதியும் உடைய ஓர் உரைநடை எழுத எமக்கும் ஒரு விருப்பம் உண்டாயிற்று. என்றாலும் நக்கீரர், சேனாவரையார், சிவஞான முனிவர் முதலான உரையாசிரியன்மார் வரைந்த தனித் தமிழ்த் தீஞ்சுவையுரை நடையிற் பெரிதும் பழகிய எமதுள்ளத்தை வடசொற் கலந்த நடைக்குத் திருப்புவது எளிதில் இயலவில்லை."

*1898* ஆம் ஆண்டு மூன்றாந்திங்கள் ஒன்பதாம் நாளிற் சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் தமிழாசிரியராய் அமர்ந்த காலந்தொட்டு, நாயகரவர்கட்கு அணுக்கராய் ஒழுகி வருகையில், வடசொல் மிகக் கலந்து அவர்களது உரைநடையைப் போல் யாமும் எழுதுவது நல்லதாமோ? என்பதை அவர்கள்பால் வினவ, அவர்கள், "வடசொற்கலவா உரைநடையே இனிதாயும் எவர்க்கும் எளிதிற் பொருள் விளங்கத் தக்கதாயும் இருத்தலால் உனது நடைப்படியே எழுது; எனது உரைநடையை பின்பற்றாதே என்று ஆணை தந்தார்கள். அவர்களின் அக்கருத்தை அறிந்த பின், முன்னமே தொல்லாசிரியர்தம் தீந்தமிழ் உரைநடையிற் பழகி அதன் சுவை கண்ட எமதுளத்திற்கு அவர்கள் இட்ட கட்டளை மிகவும் பொருத்தமுடையதாகவே



காணப்பட்டது. அது முதல் தீந்தமிழ் உரைநடை எழுதுவதில் எமதுள்ளம் உறைந்து நிற்கலாயிற்று."

மறைமலையடிகள் இளமையில் பெற்ற தமிழறிவால் தோன்றிய தனித்தமிழ் உணர்வு அவரது ஆசிரியர் தூண்டலால் உரம் பெற்றதை மேற்குறித்த பகுதி தெளிவாக்குகிறது.

இங்ஙனம் உரம்பெற்ற தனித்தமிழ் உணர்வால் தமிழ்ச்சொல் இது, வடசொல் இது எனப் பகுத்தாயும் பணியிலும், தமிழின் பிணைப்பு பற்றிய ஆய்விலும் அவர் ஈடுபட்டார்.

மறைமலையடிகளின் தனித்தமிழியக்கம் திடுமெனத் தோன்றவில்லை. மாறாக உரிய காலச் சூழலில் பரிதிமாற் கலைஞர், பாம்பன் சுவாமிகள், சுப்பிரமணிய சிவா ஆகியோர் அமைத்துத் தந்த களத்தில் மறைமலையடிகட்கு ஏற்பட்ட அக, புறத் தூண்டல்களின் விளைவால் 1916 இல் இயக்கமாக மலர்ச்சியுற்றது எனலாம்.

ஆனால் இதையும் தாண்டி மற்றொருவரும் உண்டு. இவரும் மறைமலையடிகளார் போல தனித்தமிழ் மீது பற்றுக் கொண்டவர். சைவ நெறியைப் பின்பற்றியவர். அவர்தான் சுவாமி விருதை சிவஞான

யோகியார் (1840-1924). இவர் அமைத்த திருவிடக் கழகத்தில்தான் மறைமலை அடிகளார் உறுப்பினராக பணியாற்றி உள்ளார். இக்கழக உறுப்பினர்களாக 59 பேர் கொண்ட பட்டியல் உள்ளது. இதில் மறைமலை அடிகளாருடன் சேர்த்து குறிப்பிடத்தக்கவர்கள் தியாகராச செட்டியார், வெ.ப.பாலசுப்பிரமணிய முதலியார், அரசஞ் சண்முகனார், மு.சி.பூர்ணலிங்கம் பிள்ளை, மு.கதிரேசன் செட்டியார், நாவலர் சோமசுந்தர பாரதியார் ஆகியோர்.

**சுவாமி விருதை சிவஞான யோகிகள்**

பழைமையோடு புதுமை பொலியும் "தமிழக ஒழுகு என்ற மக்கட்சட்டம்" எனும் நூல் தமிழ்க்கடல் இரா.இளங்குமரனுக்கு எங்கோ ஒருவர் பரணையில் வைத்திருந்தது கிடைத்தது. அதில் நூலாசிரியர் பெயர் இல்லை ஆனால் இளங்குமரனார் மற்ற பல நூல்களின் துணை கொண்டு இதனை இயற்றியவர் சுவாமி விருதை சிவஞான யோகிகள் என்பதை உறுதிப்படுத்தியுள்ளார். இந்நூல் அகவற்பாவால் அமைந்த பெருநூல். இதில் மூவாயிரத்து எண்ணூறு அடிகள் உள்ளன. தமிழ் நாட்டு அரசு முறை, திருமணமுறை, குடிகள் ஒழுகலாறு, இல்லறநிலை, தமிழ் நாட்டுக் கல்வி நிலை, மறுமண முறை முதலியனவெல்லாம் தெளிவான நடையில் இதில் விளக்கம் பெற்றுள்ளன. இதனை "அருட்சுனைவர்" பட்டப் படிப்புக்கு பயன்படும் வகையில் திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகம் முன்வந்து வெளியிட்டது.

**திருவிடர் கழகம்**

இந்நூலோடு கிடைத்ததோர் அரிய அறிக்கைகள் அடங்கிய நூல் "திருவிடர் கழகம்" என்னும் பெயரிடப்பட்டது.

இந்நூல் மதுரைத் தமிழ் சங்கத்தினரால் 1913 இல் அச்சிடப்பட்டுள்ளது. இக்கழகத்தின் தலைவர் சீர்காழி கே.சிதம்பர முதலியார், துணையமைச்சர்கள் மூவர், கழக உறுப்பினர்கள் ஐம்பத்து ஒன்பது. அவருள் ஒருவர் தனித்தமிழ் இயக்கத் தந்தை என போற்றப்படும் மறைமலையடிகள்.

இக்கழகம் தனித்தமிழ் இயக்கம் உருவாவதற்கு எட்டு ஆண்டுகளுக்கு முந்தியது (19.11.1908). இக்கழக நோக்கம், கட்டளைகள் அனைத்தும் தூய தமிழில், இச்சிறு நூலில் அச்சிடப்பட்டுள்ளது.

நோக்கங்கள் ஆறு, கட்டளைகள் பதினைந்து அச்சிடப்பட்டுள்ளன. இயக்கத்திற்கு சுவாமி விருதை சிவஞான யோகிகள் நிலையான அமைச்சர். இவர் ஒரு பன்மொழிப் புலவர்.

**அச்சுவடியில் உள்ள குறிப்புகள்**

1. திருவிடரின் பழைய வரலாறுகளை ஆராய்தல் என்பது திருவிட நாட்டின் முற்கால பிற்கால நிலைமைகள் யாவை? திருவிடர் என்பவர் யாவர்? திருவிடர் தோற்றம் யாது? அன்னவர் அறிவு, கைத்தொழில், செட்டு, கடற் செலவு, உரிமை, மொழி, நூல், தெய்வக கோள், மணம், தூய்மை, உணவு, ஒழுக்கம், வழக்கம், அரசியல், அவைக்களம், சீர்த்தேற்றம் முதலியன எத்தகையன என ஆய்தல்.

2. திருவிட மொழியின் உண்மை வரலாறுகளை ஆராய்தல் என்பது, திருவிட மொழியாகிய தமிழன் தோற்றம் யாது? அதன் இயல்பு யாது? அது இயல் மொழியா? செயல் மொழியா? அதன் வளர்ச்சி எவ்வாறு?

அதனின்று தோன்றிய மொழிகள் எவை? அதிற் பிற மொழிகளின் கலப்புளதா? அவை யாவை? அதன் எழுத்தின் (இலக்கண) அமைப்பு எத்தகையது? தமிழ் தொன்மை நூல்கள் யாவை? தமிழ்மொழியின் முதனிலைகள் (பகுதிகள்) எத்தகையன- உலகிலுள்ள மொழிகள் அனைத்துக்கும் அல்லது வேற்றுமைகள் உள்ளன? என்பது முதலியவற்றைப் பற்றி ஆய்தல் என்பவை.

இக் குறிப்புகளைத் தாமே தலைக் கொண்டு கடமை செய்தார் யோகிகள். அவர் இயற்றிய 15 நூல்களாலும், அவர் ஆப்ரஹாம் பண்டிதரின் கருணாமிர்த சாகரத்திற்கு வழங்கிய சிறப்புப்பாயிர 250 அடியளவு அகவலாலும் விளங்கும்.

**தூய தமிழ்க் கலைச் சொற்கள்**

"மெம்பர் என்னும் சொல்லைத் தமிழாக்கம் செய்ய முயன்று நிறைவு பெறாது இப்பொழுது மெம்பர் என்றே எழுதுகிறேன். இன்னும் ஆற அமர யோசித்துப் பார்த்துச் சரியான பதங்கள் கண்டுபிடித்து மற்றொரு மறை சொல்கிறேன் " என்கிறார் பாரதியார். ஆனால் திருவிடர் கழகத்தின் குறிக்கோள்கள், கட்டளைகள், செயல்பாடுகள் குறித்து காணப்படும் தமிழ்ச் சொற்கள் அருஞ்சிறப்பு வாய்ந்தவை. தலைவர், துணைத்தலைவர், அமைச்சர், இணை அமைச்சர், உறுப்பினர், பேரவை, பொருளாளர், ஆண்டறிக்கை, தீர்மானம், திருவன், மறைந்திருவன் முதலிய அரிய தமிழாட்சி கோலோச்சுகிறது.

யோகியாரால் திருக்குற்றாலத்தில் உண்டான இந்த அமைப்பின் நோக்கம், குறிப்பு, கட்டளைகள் என்பனவெல்லாம் தனித்தமிழாகவே உள்ளன. தனித்தமிழ் என்றும் தொடர் இல்லையேயன்றி அதனை

முழுமையாகக் கடைப்பிடித்து எழுதப்பட்டுள்ளது கண் கூடு.

சான்றாக பிரசங்கம், பெருஞ்சொல் எனவும், பகுதி, முன்னிலை எனவும் குறிக்கப்பட்டுள்ளன. *Objects.* நோக்கங்களாக பெயர்க்கப்பட்டள்ளது. *Treasurer* பொருளாளர் என்றும், *Majority* பேரெண் கருத்து என்றும், *Casting vote* கிழமைக் குடவோலை என்றும், *General body* பொதுக்கூட்டம் என்றும், *Annual Reort* ஆண்டறிக்கைத்தாள் என்றும், *Subscription* கட்டணம் என்றும் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன. இச்செய்திகளால் பாம்பன் சுவாமிகள் தனித்தமிழில் நூல் எழுதும் முயற்சியினை மேற்கொண்டது போலவே திருவிடர் கழக அமைப்பாளர்களும் அமைப்பு நிலையில் தனித் தமிழைப் பயன் படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர் என அறிகிறோம். இளங்குமரனார், குறிப்பிடும் இச்செய்தி தனித் தமிழியக்க வரலாற்றில் புதியதொரு செய்தியாகும்.

**விருதை சிவஞான யோகிகள் வரலாறு**

கொங்கு நாட்டு அவிநாசியில் இராம சாமிப்பிள்ளை, கிருட்டிணம்மாள் என்னும் இணையர்க்கு 1840 ஆம் ஆண்டு இவர் பிறந்தார். சிவஞானம் பெயரோடு விளங்கிய இவர் தம் தந்தையாரை மூன்று வயதிலும், தாயாரை ஐந்து வயதிலும் இழந்தார். இவர்க்கு வாய்த்த மாமன்மார்கள் இவரை வளர்த்தனர். தமிழ்க் கல்வி, ஆங்கிலக் கல்வி இரண்டும் கற்றார்.

**பெயர் விளக்கம்**

பிறகு ஊட்டி வெல்லிங்டன் நகரில் வணிக நிறுவனப் பணியில் உள்ளபோது சச்சிதானந்த அடிகள் தொடர்பு ஏற்பட்டது. அவ்வடிகள் சித்த மருத்துவம், ஓகப் பயிற்சி மிக்கர், அவர் தொடர்பு சிவஞானத்திற்கு அக்கலைகள் இரண்டையும் வழங்கியதுடன் சிவஞான யோகிகள் என்பதற்கு அடித்தளம் ஆக்கியது. பிறகு வேலையை விட்டு அவ்வூரிலிருந்து புறப்பட்டு பலப்பல கோயில்களை வழிபடும் ஆவலில் புறப்பட்ட யோகிகள் விருதுப்பட்டிக்கு வந்து சேர்ந்தார், மிகச் சிறிய பட்டியாக இருந்த அச்சிற்றூரே இப்போது விருதுநகர் என்ற பெயரோடு பெரு நகராட்சியாய் விளங்குகிறது. இவர் அந்நகரில் பல காலம் அங்கு தங்கியிருந்த படியால் ஆரம்பத்தில் விருதுப்பட்டி சுவாமிகள் என்ற சிறப்புப் பெயரை அடைந்தார். அங்கே இவர் செய்த தொண்டினால் பிறகு விருதை சிவஞான யோகிகள் என அழைக்கப்பட்டார், பிறகு செட்டி நாடு சென்றார். அங்கே குருநாத சாஸ்திரியிடம் வடமொழி கற்றபின் பிரமசூத்திரத்தைத் தமிழாக்கம் செய்து வேத நெறியோடு சைவநெறியும் விளங்க உரைவிளக்கம் இயற்றினார்.

ஆகவே, இவர் “தமிழ்ப் பிரமசூத்திர ஆசிரியர்” என்று புகழ் பெற்றார். அவ்வூர் இளம் பெருங்கவிஞர் சுப்பிரமணியத்திற்கு பாரதி என்ற பட்டத்தை வழங்கியும் போற்றினார். அங்கிருந்து கோயில்பட்டிக்குச் சென்றார். அங்கே பத்தி விளைக்கழகம் என ஒரு கழகத்தைத் தோற்றுவித்துத் தம் காலமெல்லாம் திருவிடர் கழகத்தையும் அமைத்துப் பல ஆண்டு விழாக்களைத் தக்க பெரியார் தலைமையில் சிறப்பாக நடத்தி வந்தார்.

மேலும் பத்தி விளைக் கழகத்தின் ஒரு பகுதியாகச் சித்த மருத்துவச் சாலை ஒன்றை நிறுவினார். இவர் சமகாலத்தில் வாழ்ந்த மருத்துவர்கள், ஒரு பைசா தமிழன் இதழ் நடத்திய அயோத்தி தாச பண்டிதர், ஆபிரகாம் பண்டிதர், பண்டிதர் எஸ்.எஸ் ஆனந்தம், மறைமலை அடிகளார்க்குத் தமிழ் மருத்துவம் பார்த்தவர். யோகியாரிடம் ஏழு ஆண்டுகள் சித்த மருத்துவம் கற்றவர், சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் அமைத்த இ.மு. சுப்பிரமணியபிள்ளை; இவரே வ.உ.சிக்கு கால் முட்டி வலிக்கு தமிழ் மருத்துவம் அளித்து நலம் பெறச் செய்தவர். யோகியார் "தமிழும் தமிழ் மருத்துவமும்" என்ற நூலைப் படைத்து தமிழ் மருத்துவச் சிறப்பை நிலை நாட்டி பெருமை சேர்த்தார். இவர் கோயில்பட்டியில் சித்த மருத்துவமனையைத் தொடங்கி தீர்க்க முடியாத பெரு நோய்களைத் தீர்த்தார். அக்கால கட்டத்தில் அரசு இந்திய மருத்துவப் பள்ளியை தொடங்க அரசுக் குழுவிற்கு தக்க ஆலோசனை வழங்கினார்.

பல்கலை யோகி தமிழ்ச் சித்த மருத்துவத்தை பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுவதற்கு 1920 இல் தமிழ் வைத்திய சங்கம் ஒன்றை கோவில் பட்டியில் தொடங்கினார். தமிழ் மொழியைப் பாதுகாப்பது போல் தமிழ் மருத்துவத்தையும் பாதுகாக்க வேண்டும் என்ற தமிழக அரசின் சித்தாந்தங்கள், யோகியார் படைத்த தமிழக ஒழுகு என்ற மக்கட் சட்டம் என்ற நூலின் வெளிப்பாடு என்பது பலரும் அறியாத ஒன்றாகும். அரசின் துணையோடு பல்வேறு நகர்களில் சித்த வைத்திய மாநாடு நடத்தினார்.

மேலும் இச்சங்கம் மூலமாகத் தமிழ் மருத்துவ நூல்கள் சீர்படுத்தி அச்சிடுதல், மருத்துவத்தை கற்பிக்கும் பள்ளிகளை அமைத்தல், தமிழ் மருத்துவப் பெருமைகளை பற்றி உரை நிகழ்த்துதல், தமிழ் மருந்துகளைக் கண்காட்சி வைத்தல், மருத்துவப்

பயிற்சி அளித்துச் சான்றிதழ் வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொண்டார்.

இவர் தொண்ணூற்றொன்பது ஆண்டுகள் வாழ்ந்ததாக இ.மு சுப்பிரமணியபிள்ளை குறிப்பிடுகிறார். இவர் எழுதிய நூல்கள் 1. செப்பறை வெண்பா 2. நெல்லை அந்தாதி மாலை 3. திருச் செந்தில் சிலேடை வெண்பா 4. பதஞ்சனயோக சூத்திர மொழிபெயர்ப்பு 5. தமிழ் மொழியும் சிவநெறியும் 7. தமிழர் தொன்மை வேதாகம உண்மை 9. கீதாமிர்த மஞ்சரி 10. சிவஞான விளக்கம் 11. சுவேதாசுவதா உபநிடத மொழி பெயர்ப்பு. 12. தமிழும் மருத்துவமும் 13. தமிழக ஒழுகு என்னும் மக்கட் சட்டம் 14. கோயில்பட்டிப் புராணம் 15. தேவேபாசனாதீபம் முதலியன என்கிறார் கருப்பக்கிளர் இராமசாமிப் புலவர்.

**முடிவுரை:**

இச் செய்திகளால் பாம்பன் சுவாமிகள் தனித்தமிழில் நூல் எழுதும் முயற்சிகளை மேற்கொண்டது போலவே திருவிடர் கழக அமைப்பாளர்களும் அமைப்பு நிலையில் தனித் தமிழைப் பயன்படுத்தும் முயற்சியால் ஈடுபட்டனர் என அறிகிறோம்.

9-11-1908 இல் தொடங்கிய திருவிடர் கழகமே முதல் தனித்தமிழ் அமைப்பு என இளங்குமரனார் சுட்டும் இச்செய்தி தனித்தமிழியக்க வரலாற்றில் புதியதொரு செய்தியாகும். இரா.நெடுஞ்செழியன் எழுதிய தி.மு.க வரலாறு நூலில் சிவஞான யோகியாருடைய திருவிடர் கழகம் குறித்து பதிவு செய்யப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

**துணை நூற்கள்:**

- இளங்குமரன் இரா.மறைமலையடிகளார் தனித்தமிழ்க் கொள்கை. 1986.
- நீலாம்பிகை அம்மையார் தனித்தமிழ்க் கட்டுரைகள் முகவுரை.1960.
- சிவத்தம்பி கா. தனித்தமிழ் இயக்கத்தின் அரசியல் பின்னணி.1979.
- திருமாறன்.கு, தனித்தமிழியக்கம் 2021.
- முருகவேள் த.ரா.ஆய்வுலகம் போற்றும் ஆசிரிய மணிகள்.


●

கட்டுரையாளர், எழுத்தாளர், சென்னை டாக்டர்
எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக
சிறப்புநிலைப் பேராசிரியர்.




27.05.2024 அன்று கோபிசெட்டிபாளையத்தில் தோழர் சி.எஸ்.சுப்பிரமணியம் நினைவாக மார்க்சிய மெய்யறிவுக் கல்வி நிலையம் திறப்பு விழாவில் தோழர் சி.எஸ்.சுப்பிரமணியம் அவர்களின் ‘தமிழ்நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாறு’ எனும் ஆங்கில நூலின் தமிழாக்கம் வெளியிடப்பட்டது. இதில் கட்சியின் முன்னணித் தோழர்கள் டி.ராஜா, இரா.முத்தரசன், கே.சுப்பராயன் எம்.பி., டாக்டர் கே.நாராயணா, மு.வீரபாண்டியன், ஸ்டாலின் குணசேகரன், க.சந்தானம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கட்டுரை



நன்றி: விகடன்.காம்

# அனந்தாயி கதை

**அ.கா.பெருமாள்**

கொரோனா காலகட்டத்தில் வில்லிசைக் கலைஞன் தங்கமணி மூலம் எனக்குக் கிடைத்த ஏடுகளில் அனந்தாயி கதை ஏடு தெளிவாக படிக்கும்படியாக இருந்தது. அதைக் கொஞ்சம் படிக்க ஆரம்பித்ததும் ஏற்கனவே என்னிடம் இருந்த தாள் பிரதியின் கதை என்பதை அறிந்து கொண்டேன் என்றாலும் சிறிய கதை தானே என்று அதைப் பிரதி செய்துகொண்டேன்.

அனந்தாயி கதை ஏடு மலையாள ஆண்டு 1075 ல் (1910) பிரதி செய்யப்பட்டது. 715 வரிகள் கொண்டது. உத்தேசமாக ஒரு பக்கத்தில் ஆறு வரிகள். 60 ஓலைகள். 16 செ மீ நீளம். 6. செ மீ அகலம். புதிய ஓலை அதனால் எழுத்துக்கள் படிப்பதற்குப் பிரச்சனையாக இருக்கவில்லை. நான் ஏற்கனவே எண்பதுகளின் ஆரம்பத்தில் அகஸ்தீஸ்வரம் ஆறுமுகப்பெருமாள் நாடாரிடம் வாங்கிய பிரதியை இந்த ஏட்டுப் பிரதியுடன் ஒப்பிட்டுப் பார்த்தேன்.

ஆறுமுகப் பெருமாள் நாடாரின் பிரதி வில்லிசை நிகழ்ச்சியில் படிப்பதற்கு என்று மட்டுமே உருவாக்கப்பட்டது. அதனால் இடையிடையே வசனப்பகுதி இருந்தது. ஏட்டுப்பகுதியில் வசனம் இல்லை. மேலும் தாள்பிரதி கொஞ்சம் விரிவாக இருந்தது. இரண்டையும் ஒப்பிட்டு கதைச்சுருக்கத்தைத் தயார் செய்து கொண்டேன்.

அனந்தாயி கதையை எனது பிஎச்டி ஆய்வேட்டிற்குப் பயன்படுத்த வேண்டும் என்று நினைத்து படித்து அது தொடர்பாக சேகரித்த செய்திகளை மறுபடியும் புரட்டினேன். என் ஆய்வேட்டின் பக்க வரையறை கருதி அனந்தாயி கதையைப் பயன்படுத்தவில்லை. அதனால் நான் சேகரித்த பழைய செய்திகளை இந்தக் கட்டுரையில் சேர்த்துக் கொண்டேன்.

இந்தக் கதை ஸ்ரீவைகுண்டம் ஊர் அருகே உள்ள ஒரு குக்கிராமத்தில் நடந்த கதை. அந்த ஊரை இப்போது அடையாளம் காண முடியவில்லை. ஸ்ரீ வைகுண்டத்திற்குக் கோட்டை பிள்ளை எனும் சமூகத்தினர் தொடர்பான செய்திகளைச் சேகரிக்க சென்ற போது அனந்தாயி கதையைப் பற்றிய செய்திகளைச் சேகரித்தேன். மிகக் குறைவான செய்திகளே கிடைத்தன. அனந்தாயிக்கு அந்த ஊரில் வழிபாடு இல்லை என்பதை ஓரளவு கேட்டுத் தெரிந்து கொண்டேன். இந்தக்கதை நடந்த அந்தக் கிராமத்தையும் அடையாளம் காண முடியவில்லை.

அனந்தாயி இறந்த பிறகு இலக்கியம்மன், போன்ற வேறு தெய்வங்களுடன் இணைந்து வழிபாடு பெறுகிறாள் என்ற செய்தி மட்டும் ஸ்ரீவைகுண்டத்தில் கேட்டேன். தென் மாவட்டங்களில் இவளது வழிபாடு பரவலாக இல்லை என்றாலும் வெள்ளை மாரி என்னும் பெயரில் கன்னியாகுமரி, திருநெல்வேலி எல்லையில் உள்ள கடற்கரை கிராமங்களில் வழிபாடு பெறுவதை அறிந்தேன்.

பொதுவாகக் கொலைப்பட்டவரோ கொலைக்குக் காரணமானவரோ இறந்தவரை வழிபடுதல் என்பது பொது நியதி. ஆனால் இங்கு இறந்து தெய்வமான பிராமணப் பெண்ணான அனந்தாயியைப் பிராமணர்கள் யாரும் வழிபட்டதாக செய்தி கிடைக்கவில்லை அவளது கொலைக்குக் காரணமானவர்களும் அவளை வழிபட்டதாகச் செய்தி கிடைக்கவில்லை. ஆனால் அவள் எப்படியோ வழிபாடு பெறுகிறாள்.

அனந்தாயி கதை மற்ற கதைகளிலிருந்து சற்று வித்தியாசமானது. ஆனந்தாயி தற்கொலை செய்து கொண்டு தெய்வமானவள். சொத்துத் தகராறின் காரணமாக ஊரை விட்டு குடி பெயர்ந்து தன்னை மாய்த்துக் கொண்டவள். அவளுக்கு சரியான நியாயம் வழங்கப்படவில்லை. கைக்கூலி பெற்றுக் கொண்டு அவளுக்கு அநியாயம் செய்த மணியக்காரனும் அவனது குடும்பமும் இயற்கைப் பேரிடரால் அழிந்து போகிறார்கள்.

மற்ற கதைகளில் இருந்து இக்கதை வேறுபடும் இடமும் இதுதான். இந்தக் கதையில் பஞ்சதந்திரக் கதை தொடர்பான ஒரு நிகழ்ச்சி வருகிறது. வீட்டில் வளர்த்த கீரிப்பிள்ளையை அனந்தாயி அறியாமல் கொன்று விட்டாள். அந்தப் பாவத்தைத் தீர்க்க பாபநாசம் சென்ற கணவன் பாம்பு கடித்து இறக்கிறான்.

இதன் பிறகு அனந்தாயியின் கணவனின் உறவினர்கள் அவளை ஊரை விட்டு விரட்ட சதி செய்கின்றனர். ஆண் குழந்தை இல்லை. பெண் குழந்தை மட்டுமே இருக்கிறது. ஆகவே சொத்துக்கு உரிமை இல்லை என்ற காரணத்தைக் கூறி அவளை விரட்டுகின்றனர். ஊர் மணியக்காரனும் முதலில் அவளுக்காக பரிந்து பேசினாலும் பின்னால் லஞ்சப் பணத்தைப் பெற்றுக் கொண்டு அவளுக்குச் சொத்தில் உரிமை இல்லை என்று தீர்ப்பு சொல்லுகிறான். ஆகவே அவள் தன்னை மாய்த்துக் கொள்கிறாள்.

அனந்தாயி மணியக்காரனின் அநியாயமான தீர்ப்பைக் கேட்டு ஆவேசமாய் சாபம் கொடுக்கிறாள். கதைப்பாடலின் இந்தப் பகுதி உருக்கமாக உள்ளது. மணியக்காரனின் ஒரே மகளுக்குத் திருமணம் நடக்க இருக்கிறது. அந்தத் திருமணம் நடக்காது. மணமகள் மட்டுமல்ல, குடும்பத்தார் எல்லோருமே அழிந்து விடுவார்கள் என்று சாபம் விடுகிறாள் அனந்தாயி. அவள் சாபம் பலிக்கிறது.

பேராசிரியர் வையாபுரி பிள்ளை சிலப்பதிகாரத்தின் காலத்தை கிபி ஐந்தாம் நூற்றாண்டுக்குப் பின்னர் கொண்டு செல்லுகிறார். இதற்கான ஆதாரங்களை விரிவாகவே தருகிறார். அந்தச் சான்றுகளில் ஒன்று பஞ்சதந்திரத்தில் வரும் கீரிப்பிள்ளை கதை. சிலப்பதிகாரத்தில் பார்ப்பனப் பெண் ஒருத்தி கீரிப்பிள்ளையைக் கொன்ற கதை வருகிறது. இதே கதை பஞ்சதந்திரக் கதையிலும் வருகிறது. பஞ்சதந்திரக் கதையின் காலம் கிபி ஐந்தாம் நூற்றாண்டு என்பது பெரிடேல் சீத்தின் கருத்து. ஆகவே சிலப்பதிகாரம் இதற்குப் பிற்பட்டது என்பது வையாபுரிப் பிள்ளையின் வாதம்.

சிலப்பதிகாரம் அடைக்கலக்காதையில் வரும் மாடல மறையோன் கோவலனுக்கு நேர்ந்த அவலத்தைக் கேட்டு அவனைத் தேற்றுகிறான். கோவலன் செய்த நல்ல காரியங்களை எல்லாம் பட்டியலிடுகிறான். அப்போது சொல்லும் ஒரு செய்தி (அடைக்கலக்காதை வரி 54 75) பிராமணன் ஒருவனின் மனைவி தெரியாமல் பிழையாக கீரிப்பிள்ளை ஒன்றைக் கொன்று விடுகிறாள். அதனால் அவளது கணவன் அவனைப் பழித்து பேசுகிறான். உன் கையால் இனி சாப்பிட மாட்டேன் என்கிறான். அவளிடம் வடமொழியில் எழுதப்பட்ட ஒரு வாசகத்தைக் கையில் கொடுத்தான். இதை நல்லவர் யாராவது கிடைத்தால் காட்டு. உதவி செய்வார்கள்

என்று சொல்லிவிட்டு அவன் அவளை விட்டு நீங்கி காசிக்குக் சென்று விடுகிறான்.

அந்த பிராமணப் பெண் கணவன் கொடுத்த வாசகம் அடங்கிய ஓலையைப் பலரிடம் காட்டுகிறாள். யாரும் அவளுக்கு உதவி செய்யவில்லை. கடைசியில் கோவலனிடம் கொடுக்கிறாள். அவன் அவளது பாவம் தீர உதவி செய்கிறான். வாழ்விற்கு உதவுகிறான்.

இந்தச் செய்தியைச் சொல்லும் சிலப்பதிகாரம் "பிள்ளை நகுலம் பெரும் பிறிது ஆக எள்ளிய மனையோள்" என்று கூறுகிறது (அடைக்கலக் காதை 54-55 இதற்கு அடியார்க்கு நல்லார் "தான் வளர்த்த கீரி தன் பிள்ளையைக் காத்திருந்ததாகவும் அதனை ஒரு பாம்பணுக அதனைக் கவ்வித் துணித்த குருதி வாயோடு தன் வரவு பார்த்து எதிர் கொண்டதனை தன் பிள்ளையைக் கடித்தது எனக் கருதி தன் கையின் மணையால் புடைக்க அது மரித்ததாலே வட திசை நோக்கி கங்கையாடப் போகின்ற கொழுநன் , " என்று கூறுகிறது (உ.வே. சா சிலப்பதிகாரம் 1960 பக் 402)

இப்படியாகப் புறப்பட்ட அந்தக் கணவன் ஒரு ஓலையில் வட மொழி வாசகம் ஒன்றை எழுதிக் கொடுத்து இதைத் தகுந்தவரிடம் காட்டு உதவி கிடைக்கும் என்கிறான். பிராமணன் எழுதிய வடமொழி (ஆரியம்) வாசகம் பஞ்சதந்திர கதையில் (5-18) வருவது என்கிறார் அடியார்க்கு நல்லார் (உ.வே.சா. மேற்படி).

இந்த வடமொழி வாசகம் "அபரீக்ஷ்ய ந | கர்த்தவ்யம் கர்த்தவ்யம் ஸு பரீக்ஷி தம் பச்சாத் பவதி ஸந்தாபம் ப்ராஹ்மணி நகுலம் யதா " என்பதாகும் என அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகிறார். இந்தச் செய்யுள் பஞ்சதந்திரம் 5 ஆம் தந்திரத்தில் முதற்கதையில் வருவது.

பஞ்சதந்திரம் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்ட செய்யுள் நூல். ஆசிரியர் விஷ்ணு சர்மா. காலம் ஐந்தாம் நூற்றாண்டு என்பது பெரிடேல் கீத் கருத்து. இக்கதை பார்சி (570) அரபி (750) ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு இருக்கிறது. பஞ்சதந்திரக் கதை உலகளாவிய நிலையில் பரவலாக அறியப்பட்ட கதை. இந்தக் கதையின் செல்வாக்கு சிலப்பதிகாரத்தில் மட்டுமல்ல அனந்தாயி கதையிலும் வருகிறது.

மிக அபூர்வமாக வில்லுப்பாட்டில் இது பாடப்படுகிறது. அகால மரணம் அடைந்தவர்கள் பிரபலமான நாட்டார் தெய்வத்துடன் இணைந்து அதுவாக ஆகி வழிபாடு பெறுவது என்னும் பொதுவான கருத்தாக்கம் அனந்தாயி கதைக்கும் பொருந்தும். வாரியூர் அருகே ஒரு குக்கிராமத்தில் இசக்கி அம்மன் கோயிலில் வெள்ளமாரி என்னும் பெயரில் துணை தெய்வமாக கொடை விழாவிற்கு மட்டுமே வழிபாடு பெறும் ஒரு தெய்வத்தைப் பற்றிய விவரத்தை கேட்ட போது அது அனந்தாயி என்பதை அறிந்தேன். அந்தக் கோவிலைச் சார்ந்தவர்களுக்கு அந்த தெய்வத்தைப் பற்றிய விவரங்கள் தெரியவில்லை. ஆனால் பதிவாக அங்கு வில்லுப் பாட்டு பாட வரும் கலைஞருக்கு அந்தக் கதை தெரிந்திருக்கிறது.

**அனந்தாயி கதைச் சுருக்கம் வருமாறு**

அனந்தாயி கதையை எனக்கு முதலில் சுயம்பு ராசன் சுருக்கமாக சொன்னார். அதன் பிறகு ஆறுமுகம் பெருமாள் நாடார் தந்த தாள் பிரதியைப் படித்து கதையை விரிவாக அறிந்து கொண்டேன். மறுபடியும் இந்தக் கட்டுரை எழுதுவதற்காக ஏட்டுப் பிரதியையும் தாள் பிரதியையும் ஒப்புநோக்கி ஒரு புதிய பிரதியை தயாரித்துக் கொண்டேன்.

காப்பு பாடலில் ஸ்ரீவைகுண்டம் ஊரில் பிறந்த பெண் அனந்தாயி என்பவரின் கதையைப் பாட கணபதியை நான் சரணடைகிறேன் என்று நூல் தொடங்குகிறது. உண்மையில் ஸ்ரீவைகுண்டம் அருகே தாமிரபரணிக்கரையில் உள்ள ஒரு குக்கிராமத்தில் இக்கதை நடக்கிறது.

ஸ்ரீவைகுண்டம் பக்தி சார்ந்த மக்கள் வாழும் ஒரு ஊர். பழமையானது. ஆழ்வார்கள் மங்களா சாசனம் செய்த 108 திருப்பதிகளில் ஒன்று. அற்புதமான சிற்பங்களுக்குப் பேர் போன யாளி மண்டபம் இங்கே இருக்கின்றது.

இந்த ஊரில் 60 பிராமண குடும்பங்கள் வாழ்ந்தன. அவர்களில் ஹரி கிருஷ்ணன் என்பவனும் ஒருவன். அவனது மனைவி அனந்தாயி. அவர்களுக்குத் திருமணம் ஆகி நாட்கள் பல ஆயின. குழந்தை இல்லை, அனந்தாயிக்கு 32 வயதானது. குழந்தை இல்லை என்ற ஏக்கம் அவளைத் துன்புறுத்தியது. அவள் கோவில் கோவிலாக சென்றாள். குலதெய்வங்களுக்கு விளக்கேற்றினாள்.

அவளது கண்ணீருக்கு குலதெய்வம் இரங்கியது. அவள் கர்ப்பமுற்றாள். மாதம் பத்தானது. அரிகிருஷ்ணன் மனைவிக்கு மகப்பேறு பார்க்க மருத்துவச்சி ஒருத்தியை அழைக்க ஆலோசனை செய்தான். வள்ளியூரில் மணிமாலை என்ற பெண் நன்றாக மகப்பேறு பார்ப்பாள் என்பதை அறிந்தான். அவளை அழைக்க அழகப்பன் என்ற ஓட்டனை அனுப்பினான்.

ஓட்டன் வள்ளியூருக்குப் போனான். மணிமாலை முதலில் ஸ்ரீவைகுண்டத்திற்கு வர மறுத்தாள்.

ஓட்டன் அவளுக்கு நிறைய பொன் கொடுப்பதாக சொல்லி ஆசை காட்டி அவளை அழைத்தான். அவள் ஸ்ரீவைகுண்டம் வந்தாள். மகப்பேறுக்கு உரிய மருந்துகளையும் எண்ணையையும் கூடவே கொண்டு வந்தாள். அனந்தாயியிக்கு மகப்பேறு பார்த்தாள். குழந்தை பிறந்தது. அதைத் தொட்டிலிலிட்டு தாலாட்டினாள் அனந்தாயி. மருத்துவச்சிக்கு நிறைய பொருளும் கொடுத்து வள்ளியூருக்கு அனுப்பி வைத்தான் அரிகிருஷ்ணன்.

குலதெய்வத்தின் அருளால் பிறந்த குழந்தைக்குக் கிருட்டிணத்தம்மை என்று பெயரிட்டான் அரிகிருஷ்ணன். திருநெல்வேலி பகுயிலிருந்து ஒரு ஜோதிடனை வரவழைத்து குழந்தையின் எதிர்காலம் பற்றி கேட்டான். ஜோதிடன் குழந்தையின் பிறந்தநாளை கணித்தான். ரொம்ப நேரம் கணக்கு போட்டான். பின் பேச ஆரம்பித்தான். இந்தக் குழந்தைக்கு சர்ப்ப தோஷம் இருக்கிறது. அதற்குப் பரிகாரம் செய்ய வேண்டும். அப்படியானால் குழந்தை நீண்ட ஆயுளோடு வாழும் என்று சொன்னான்.

அரி கிருஷ்ணன் ஜோதிடரிடம் பரிகாரத்தைச் சொல்லு உடனே செய்கிறேன் என்றான். ஜோதிடன் பரிகாரம் அவளுக்கல்ல, உனக்கும் அல்ல. கோவில்களிலும் செய்ய வேண்டாம், தெய்வங்களை வாழ்த்தி செய்ய வேண்டாம், உன் வீட்டிலே ஒரு கீரிப்பிள்ளை வளர்க்க வேண்டும். அப்படியானால் சர்ப்ப தோஷம் நிவர்த்தி ஆகும். அந்தக் கீரிப்பிள்ளையைக் கவனமாக உன் பிள்ளையைப் போல கவனித்து வளர்க்க வேண்டும் அதற்கு எதாவது நேர்ந்தால் உன் குடும்பமே அழிந்துவிடும் என்று சொன்னான்.

அரிகிருஷ்ணனுக்கு ஜோதிடர் சொன்ன பரிகாரம் சாதாரணமாகத் தோன்றியது. தன் நண்பர்களிடம் ஆலோசித்தான். அவர்கள் நம் ஊரில் இருந்து சற்று தொலைவில் உள்ள அருணகிரி மலையில் கீரிப்பிள்ளை இருப்பதாக கேள்விப்பட்டிருக்கிறோம். நாமே போய் பிடித்து வரலாம் என்று சொன்னார்கள்.

அரி கிருஷ்ணன் நண்பர்களுடன் அருணகிரி மலைக்குப் போனான். ஒரு குட்டிக் கீரியைத் தேடிக் கண்டுபிடித்தான். அதை ஒரு கூட்டிலே அடைத்து வீட்டுக்குக் கொண்டு வந்தான். மனைவி-யிடம் கொடுத்தான். அவளும் அதை அன்போடு வளர்த்தாள். கீரிப்பிள்ளை அவளுக்கு இரண்டாவது ஆண் குழந்தையைப் போன்று வளர்ந்தது. அதனுடன் கொஞ்சிப் பேசி விருப்பம் போல் அலையவிட்டு வளர்த்தாள்.

ஒரு நாள் அனந்தாயி தன் வீட்டிற்குத் தேவையான காய்கறிகளையும் கீரையையும் பறிப்பதற்கு தன் தோட்டத்திற்கு புறப்பட்டாள். கையிலே ஒரு கத்தியையும் கூடையையும் எடுத்துக் கொண்டாள். கீரி அவளுடன் புறப்பட்டது. அனந்தாயி "நீ குழந்தைக்கு காவலாக இருப்பாய். நான் தோட்டத்திற்குச் சென்று வருகிறேன் "என்று சொன்னாள். கீரி அவள் சொன்னபடி கேட்டது.

வீட்டை விட்டு அவள் கிளம்பினாள். அப்போது பல்லி அபசகுனமாய் ஒலியை எழுப்பியது. அவளுக்கு சகுனம் சரியில்லையோ என்று மனதில்பட்டது. ஆனால் அதைப் பெரிதாக எடுக்கவில்லை, அவள் தோட்டத்திற்குச் சென்று விட்டாள். பச்சைக் கீரைகளை கூடையிலே பறித்துப் போட்டாள். கத்திரிக்காய், வெண்டைக்காய் என காய்கறிகளையும் பறித்தாள். கொஞ்சம் இளைப்பாறி விட்டு வீட்டுக்குப் புறப்பட்டாள். அங்கே வீட்டில் நடந்த நிகழ்ச்சி என்ன அதையும் பார்ப்போம்.

அனந்தாயி தோட்டத்துக்குக் கீரை பறிக்கச் சென்ற கொஞ்ச நேரத்தில் நல்ல பாம்பு ஒன்று வீட்டுக்குள் நுழைந்தது. மெதுவாக தொட்டிலின் பக்கம் வந்தது. இதைக் கீரிப்பிள்ளை கவனித்தது. உடனே பாம்பின் மேல் பாய்ந்து இரண்டு துண்டாக வெட்டியது. அதற்கு சந்தோஷம். இந்த நல்ல செய்தியைச் சொல்வதற்காக வீட்டுக்கு வெளியே வாசலில் காத்திருந்தது. அப்போதுதான் கூடையுடன் அனந்தாயி வந்தாள்.

அவள் கீரிப்பிள்ளையை பார்த்தாள். அதன் வாயிலிருந்து ரத்தம் கொட்டியது. கொஞ்சமும் யோசிக்கவில்லை தன் குழந்தையை அது கடித்துக் குதறிவிட்டது என்று நினைத்தாள். அன்போடு அவளது காலை வருடிக் கொண்டு நின்ற கீரிப்பிள்ளையைக் கொஞ்சமும் கருணை இல்லாமல் முன் யோசனை இல்லாமல் பின் வருவது அறியாமல் கூடையிலிருந்த கத்தியால் வெட்டி விட்டாள். உடனே கீரி செத்து மடிந்தது. அவள் பதைபதைத்துக் கொண்டு வீட்டுக்குள் ஓடினாள்.

அங்கே தொட்டிலில் குழந்தை நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தது. தொட்டிலின் அருகே நல்ல பாம்பு ஒன்று இரண்டு துண்டுகளாகக் கிடந்தது. எங்கும் ரத்தம். அனந்தாயிக்குப் புரிந்து விட்டது. பெரும் பாவம் செய்து விட்டேனே! ஜோதிடர் சொன்னது சரியாகி விட்டதே. உன் பிள்ளையைப் போல் கீரிப்பிள்ளையைக் கவனிப்பாய் என்று சொன்னானே, மறந்து விட்டேனே என்று சொல்லிச் சொல்லி அழுதாள். தலையிலே அடித்துக்கொண்டாள்.

கொஞ்ச நேரத்தில் அனந்தாயியின் கணவன் வந்தான். மனைவி ஓலக்குரல் எடுத்து அழுத காரணம்



அனந்தாயி அம்மன் (சந்தனமாரி அம்மன்) கோயில் ஸ்ரீவைகுண்டம்

கேட்டான். அவள் நடந்ததைச் சொன்னாள். அவன் துண்டு துண்டாகக் கிடக்கும் பாம்பைப் பார்த்தான். வெட்டுப்பட்டு கிடந்த கீரியைப் பார்த்தான். இரண்டையும் எடுத்து வீட்டுப் பின் தோட்டத்திலே குழி தோண்டிப் புதைத்தான் .

கணவன் மனைவியிடம் "உன்னைப் பெரும் பாவம் பிடித்துக் கொண்டது. இதை எப்படித் தீர்ப்பது என்று யோசித்தான். அவள் நான் பாபநாசம் சென்று சுனையிலே குளித்து பாவத்தைப் போக்கி வருகிறேன். இன்னொரு கீரிப்பிள்ளையைப் பிடித்து வளர்க்கலாம். "என் பாவத்தைத் தீர்க்க எங்கு வேண்டுமானாலும் போவேன்" என்றாள். அவன் "நீ பாவம் தீர்க்க பாபநாசம் செல்வது சரிதான். ஆனால் நீ போக வேண்டாம். பெண்ணாய் பிறந்தவளுக்கு பாவம் சேராது என்று சொல்லுவார்கள். பெண் தனியாக தீர்த்தம் ஆடச் செல்லும் வழக்கமும் இல்லை. நம் குல வழக்கம் அதற்கு எதிரானது. அனந்தாயி நாம் இருவரும் பாபநாசம் செல்லவும் முடியாது. நானே செல்லுகிறேன். பாவம் தீர்க்க பாபநாசம் செல்லுவேன். உன் பாவத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். போகிறேன் நான் " என்றான்.

அரிகிருஷ்ணன் தன் நண்பர்களிடம் ஆலோசித்தான். ஒருவன் சொன்னான். ஏழு பேர்கள் சேர்ந்து போனால் பாவத்தின் கனம் குறையும் என்றான். ஏழு பேர்களுக்கும் அரிசி, பலசரக்கு, பாத்திரங்கள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டார்கள். வேலையாட்கள் பாத்திர பண்டங்களைத் தலையிலே சுமந்து வந்தார்கள். அரிகிருஷ்ணன் நண்பர்களுடன் நடந்து காட்டு வழி நடந்தான்.

ஏழு பேரும் வழியில் கண்ட கோவில்களை வழிபட்டனர். புனித ஆறுகளிலே நீராடினர். சுனைகளில் நீராடினர். காட்டில் ஒரு இடத்தில் தங்கி பொங்கி சாப்பிட்டனர். பாபநாசம் சாஸ்தாவை வழிபட்டனர். அவரிடம் என்னவென்று தெரியாமல் செய்த குற்றத்தை பொறுப்பீர் என இரந்து வேண்டிக் கொண்டான், பின் வீட்டுக்குப் புறப்பட்டனர். அப்போது இருட்டிவிட்டது.

நண்பர்களில் மூத்தவன் சொன்னான். இருள் கவிழ்ந்து விட்டது. காட்டிலே இருட்டில் நடப்பதற்கு வழி தெரியாது. பயணம் செல்வதும் நல்லதல்ல. இந்தக் காடு கொடிய விலங்குகள் உடையது. இந்தச் சுனையின் அருகே இருக்கும் கல் மண்டபத்தில் நாம் இரவு தங்கிக் கொள்ளலாம். மழை வந்தாலும் பயமில்லை, பாதுகாப்பாக இருக்கும். நாளை காலையில் உறங்கி விழித்து சோர்வைப் போக்கிக் கொண்டு எழுந்து நடக்கலாம் என்றான்.

அவன் சொன்னதை எல்லோரும் ஒத்துக் கொண்டார்கள். அவன் வழிகாட்ட அந்த மடத்திற்கு எல்லோரும் சென்றார்கள். அரிகிருஷ்ணன் மடத்தின் முன் மண்டபத்தில் படுத்துக் கொண்டான். அவனுக்குக் காவலாக நண்பர்கள் படுத்துக் கொண்டார்கள். வேலைக்காரர்கள் வேறு மண்டபத்தில் படுத்துக் கொண்டார்கள். இரவு நன்றாக உறங்கினார்கள்.

நடு இரவு காலனின் உருவில் ஒரு பாம்பு வந்தது. கருப்பு நிறத்தில் இருந்த அந்தப் பாம்பு ஆகாயத்தில் பறந்து வந்தது. ஏழு பேர்களையும் தொடாமல் அரிகிருஷ்ணனின் அருகிலே வந்தது. ஆகாயத்தில் பறந்து இருந்தபடி பாம்பு அவனைத் தீண்டியது. பின் ஆகாயம் வழி பறந்து சென்று விட்டது.

பாம்பின் விஷம் அரி கிருஷ்ணனின் உடம்பில் பட்டதும் மயக்கம் அடைந்தான். விஷம் தலைக்கேறியது. அவன் மயங்கியே கிடந்தான். நேரம் விடிந்தது. நண்பர்கள் எழுந்தார்கள். அவன் உறங்குகிறான் என்று நினைத்து அவனை எழுப்பவில்லை. நன்றாக உறங்கட்டும். கொஞ்சம் நாழியாகட்டும். பிறகு அவனை எழுப்பலாம் என்றான் ஒருவன்.

நண்பர்கள் காலைக்கடனை முடித்துக் கொண்டார்கள். காலை உணவைத் தயாரித்தனர். வேலைக்காரர்கள் அவன் எழுந்து வரவில்லை என்றனர். நண்பர்களுக்குக் சந்தேகம். அவனைத் தட்டினார்கள். சப்தமிட்டு அழைத்தார்கள். அவர்களுக்குச் சந்தேகம் வந்தது. அவனை தூக்கி நிறுத்திப் பார்த்தார்கள். அப்போதுதான் அவன் உடம்பு முழுக்க நீல நிற விஷம் பரந்து கிடப்பதைப் பார்த்தார்கள். அவன் இறந்து வெகு நேரம் ஆகிவிட்டது என்பதை அறிந்து கொண்டார்கள். கிடைத்த பச்சிலைகளை கசக்கி அவன் வாயிலே விட்டார்கள். ஆனால் அவன் இறந்து விட்டது உறுதியாகிவிட்டது.

நண்பர்கள் சுற்றி நின்று அழுதார்கள். அவர்களில் மூத்தவன் ஒருவன் "தோழர்களே நாம் இனி இந்த உடலை ஸ்ரீவைகுண்டத்திற்கு எடுத்துச் செல்ல முடியாது. உடல் பாழாகிவிடும். இங்கே இதை எரித்து விடுவோம்" என்று சொன்னான். மற்றவர்களும் அதற்கு இணங்கினர்.

எல்லோரும் சேர்ந்து காட்டு விறகை அடுக்கினார்கள். அரி கிருஷ்ணனின் பிணத்தை விறகின் மேல் வைத்து சில சடங்குகள் செய்தார்கள். பிணம் எரிந்த அடுத்த நாள் சாம்பலை ஆற்றிலே கரைத்தனர். பின் ஸ்ரீ வைகுண்டம் சென்றனர். நண்பர்களைப் பார்த்த அனந்தாயி கணவன் எங்கே என்று கேட்டாள். ஒருவன் நடந்த நிகழ்ச்சியைச் சொன்னான்.

அனந்தாயி தரையில் புரண்டு அழுதாள், தன் குழந்தையை மடியிலே வைத்துக் கொண்டு அழுதாள். அதன் முகம் பார்த்துக் கொண்டு அழுதாள். அவளது அழுகுரல் கேட்டு பக்கத்து வீட்டுக்காரர்கள் வந்தார்கள். உறவினர்கள் வந்தார்கள். அவளுக்கு உரிமை உடைய சொக்காரர்கள் வந்தார்கள். சில நாட்கள் சென்றன.

அரிகிருஷ்ணனின் உறவினர்கள் அளந்தாயியின் வீட்டிற்கு வந்தனர். அவளிடம் பேச ஆரம்பித்தனர் அவர்களில் மூத்தவன், "பெண்ணே உனக்கு ஆண் குழந்தை இல்லை. அதனால் உன் கணவனின் சொத்தில் உனக்கு உரிமை இல்லை. இந்த வீடு தோட்டம் எல்லாம் எங்களுக்குதான். நீ வீட்டை விட்டு வெளியே போய்விடு " என்றான்.

அனந்தாயி அவர்களிடம் பேசினாள் "ஐயா உங்களுக்கு கொஞ்சம் கூட கருணை இல்லையா? இந்தப் பெண் குழந்தையை வைத்துக்கொண்டு நான் எப்படி வாழ்வேன்? எங்கே போவேன் என் அம்மா அப்பா சிறுவயதில் இறந்து விட்டார்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா, என் உறவினர்கள் எல்லோருமே ஏழைகள். என்னை வைத்து அவர்களால் பாதுகாக்கும் அளவுக்கு வசதி கிடையாது. எனக்கு யார் கதி?" என்றாள்.

உறவினர்கள் அசையவில்லை. நாங்கள் சட்டப்படி பேசுகிறோம். பெண்ணுக்குச் சொத்துரிமை இல்லை. இது நியாயமானது என்று சொன்னார்கள். அவள் அந்த ஊர் மணியக்காரன் முத்தையாவின் வீட்டுக்கு சென்றாள். தன் நிலைமையைச் சொன்னாள். உறவினர்கள் தன்னை வீட்டை விட்டு வெளியேறச் சொன்னதைச் சொன்னாள்.

அப்போது அனந்தாயியின் சொந்தக்காரர்களும் மணியக்காரனின் வீட்டுக்கு வந்தார்கள். தங்கள் கோரிக்கையை முறையிட்டார்கள். மணியங்காரன் இரண்டையும் கேட்டான். "எனக்கு ஒரே மகள் இருக்கிறாள். அவளையும் நினைத்துப் பார்க்கிறேன். அவளுக்குத் திருமணம் நிச்சயமாகிவிட்டது. அடுத்த வாரம் என் மகளுக்கு திருமணம் நான் அநியாய வழக்கு உரைக்க மாட்டேன். சூரியன் தெற்கே உதித்தாலும் மாற மாட்டேன். நியாயமாக பேசுகிறேன். இந்த விதவையை நீங்கள் வீட்டை விட்டு வெளியே போகச் சொன்னால் எங்கே போவாள். யோசித்துப் பாருங்கள். மாடும் வீடும் தோட்டமும் அவளுக்கே உரியது. இது என் தீர்ப்பு " என்று சொல்லிவிட்டான்.

உறவினர்களுக்கு பேச முடியவில்லை மௌனமாக சென்று விட்டார்கள். அனந்தாயி வீட்டுக்கு போனாள். அன்று இரவு உறவினர்கள் எல்லோரும் கூடினார்கள். கணிசமான அளவுக்கு பணம் சேகரித்தார்கள். மூட்டையாக கட்டிக்கொண்டு மணியக்காரர் வீட்டிற்கு போனார்கள். அவன் முன்னே அதை வைத்து தீர்ப்பை நீ மாத்தி சொல்லு. இந்தப் பணத்தை எடுத்துக் கொள்ளுங்கள் என்றார்கள்.

மணியங்காரன் மனம் மாறினான். அனந்தாயியை வீட்டிற்கு அழைத்தான். பெண்ணே நான் நேற்று

சொன்ன தீர்ப்பு சரியானது அல்ல. பெண்ணுக்குச் சொத்தில் உரிமை இல்லை என்பது நம் ஊர் வழக்கம் அல்லவா. உனக்கு ஆண் குழந்தை இருந்தால் நான் உன் பக்கம் பேசி இருப்பேன். சட்டப்படி உனக்கு சொத்து கிடையாது. நீ வீட்டை விட்டு வெளியேற வேண்டியதுதான். கருணையோடு உனக்கு ஸ்ரீவைகுண்டம் ஊர் கோவிலில் வேலை போட்டுத் தருகிறேன். நீ கோயில் மண்டபத்தில் இருந்து கொண்டு கட்டு சாதத்தைச் சாப்பிட்டுக் கொண்டு உயிர் வாழலாம் என்று சொன்னான்.

அனந்தாயி "ஐயா நீர் அநியாயம் பேசுகிறீர். நேற்று இரவு நியாயமாகப் பேசினீர். இப்போது கள்ள வழக்கு உரைத்து விட்டீர். பணத்துக்கு ஆசைப்பட்டு இப்படி சொல்லி விட்டீர். என் கணவன் இதே ஊரிலேயே கோவில் தர்மகர்த்தாவாக அல்லவா இருந்தார். அந்தக் கோவிலில் நான் புழுக்க வேலை செய்ய வேண்டுமா. கொஞ்சமும் கருணை இல்லாமல் இப்படிச் சொல்லுகிறீரே.

பெண்ணுக்குக் கணவனின் சொத்தில் உரிமை இல்லை என்றால் அவள் எப்படி உயிர் வாழ முடியும்? அதற்கு உங்கள் நியாயம் என்ன? உங்கள் மகளுக்கு இப்படி ஒரு நிலை வந்தால் என்ன நியாயம் பேசுவீர்? உங்கள் மகள் இப்போது திருமணமாகாத கன்னி. நான் உங்களுக்குச் சாபம் விடுகிறேன். வயிறு எரிந்து பேசுகிறேன். மனம் நொந்து நெருப்பை அள்ளிக் கொட்டுகிறேன். உங்கள் மகள் உங்கள் இனம் கணவனின் உறவினர் யாரும் நன்றாக வாழ மாட்டார்கள். போகிறேன் போகிறேன் என்று சொல்லிவிட்டுப் போனாள்.

போகின்ற வழியில் அவளுடைய கணவனின் உறவினர்கள் கூடி இருந்த இடத்துக்குச் சென்றாள். அங்கே ஊர் மக்கள் சிலரும் நின்றார்கள். ஊர் பெருமக்களே எனக்காக நியாயம் பேச இங்கு யாரும் இல்லையா? இந்த ஊர் கள்ளபிரானும் மணியக்காரனுடன் சேர்ந்து விட்டானே! பெண்ணுக்கு சொத்து இல்லை என்று சொல்லி என்னை வெளியேற்றி விட்டானே! இந்த ஊர் அழிந்து போகும் என்றாள்.

பின்னர் அங்கிருந்து புறப்பட்டாள். அவள் தோளிலே தூங்கிக் கொண்டிருந்த மகளுக்கு என்ன நடக்கிறது என்றே தெரியவில்லை. அந்த ஊர் எல்லையில் இருந்த காட்டுவழிச் சென்றாள். வழியிலே பாம்புகள் குறுக்கிட்டன. கரடி ஒன்று வந்தது. அவளைப் பார்த்துவிட்டு ஒதுங்கிச் சென்றது. காட்டில் பெரிய சுனையின் கரையில் நின்றாள். சூரியனைப் பார்த்து ஆவேசத்தோடு பேசினாள். எனக்கு நீதி வேண்டும். அநியாயம் செய்தவர்கள் அழிய வேண்டும் என்று சொன்னாள்.

இந்த நேரத்தில் மணியக்காரனின் வீட்டு கல்யாண வேலை நடந்து கொண்டிருந்தது மணப்பெண்ணை அலங்கரித்து மணமேடைக்கு அழைத்துக் கொண்டு வந்தார்கள். உறவினர்கள் எல்லோரும் கூடியிருந்தனர். அனந்தாயியின் கணவனின் உறவினர்கள் தங்களுக்குப் பரிந்து பேசிய மணியக்காரனின் கல்யாணத்தில் முன்னே நின்று நடத்த வந்திருந்தார்கள்.

அப்போது மேகம் மூண்டது. எங்கும் இருள் சூழ்ந்தது. பெரும் மழை பெய்தது கல்மாரி பெய்தது. தாமிரபரணி ஆற்றில் தண்ணீர் புரண்டு ஓடியது. திருமண வீட்டிற்குள் ஆறு உள்ளேயே பெருக்கெடுத்து ஓடியது. திருமணப் பந்தலை அப்படியே கவிழ்த்தது. மண மேடையை உடைத்தது. பெரிய அரசமரம் ஒன்று மணியக்காரனின் வீட்டின் மேல் விழுந்தது. அந்தச் சிறு கிராமத்தில் வாழ்ந்த எல்லோரையும் ஆறு அடித்துச் சென்றது.

இந்த நேரத்தில் அனந்தாயி குழந்தையை அணைத்துக் கொண்டு சுனையிலே சாடினாள். இருவரும் பிணமாக ஆற்றிலே மிதந்தார்கள். இருவரின் உயிரும் கைலாயம் சென்றது. சிவன் அனந்தாயியிடம் "நீ வெள்ளத்தில் விழுந்து இறந்து தெய்வமானதால் வெள்ளமாரி என பெயர் பெறுவாய். உன்னைப் புதுமாரி வேப்பம் குழைக்காரி மஞ்சள் மாரி என்றெல்லாம் அழைப்பார்கள்." உனக்கு வெல்ல வரம் கொல்ல வரம். வெப்புநோயைக் கொடுக்கும் வரம் என வரம் தருகிறேன்" என்று சொன்னார்.


அப்போது அனந்தாயி சிவனிடம் " கள்ள வழக்கு சொல்லி என்னை இந்த நிலைக்கு ஆளாக்கின மணியக்காரனின் வம்சம் இல்லாமல் ஆக வேண்டும். அவனது வீடும் வாசலும் அழிய வேண்டும். என் கணவனின் உறவினர்கள் எல்லோரும் அழிய வேண்டும். அவர்களின் சொத்துக்கள் மண் முதல் போக வேண்டும். அந்த ஊரே அழிந்து போக வேண்டும் என்று வரம் வேண்டும்" என்று கேட்டாள். சிவன் அப்படியே தந்தேன் என்றார்.

அனந்தாயி ஆன வெள்ளை மாரி நான் என் சொந்த ஊரில் கோவில் கொள்ள மாட்டேன். சந்தனமாரி ஆக வழிபாடு பெறுவேன் என்று சொல்லிக்கொண்டு பல்வேறு இடங்களில் வழிபாடு பெற்றாள்.


●

கட்டுரையாளர், ஓய்வுபெற்ற பேராசிரியர். நாட்டார் வழக்காற்றியல் மற்றும் சமூகப் பண்பாட்டு ஆய்வாளர்.


# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்




₹ 55/-




₹ 290/-





₹ 185/-




₹ 350/-




₹ 525/-




₹ 100/-

## நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410, 48601884 www.ncbhpublisher.in | email: info@ncbh.in


**கிளைகள்**

அம்பத்தூர் 044 - 2635 9906, ஸ்பென்ஸர் பிளாசா 044-28490027, மதுரை 0452 - 2344106, 4374106, திருநெல்வேலி 0462 - 2323990, 4210990, திண்டுக்கல் 0451-2432172, கோயம்புத்தூர் 0422 2380554, சேலம் 0427-2450817, ஈரோடு 0424-2256667, கிருஷ்ணகிரி 04343-234387, ஒசூர் 04344 - 245726, ஊட்டி 0423 - 2441743 திருச்சி 0431 - 2700885, தஞ்சாவூர் 04362-231371, புதுக்கோட்டை 04322-227773, விழுப்புரம் 04146-227800, பாண்டிச்சேரி 0413 2280101, வேலூர் 0416-2234495, நாகர்கோவில் 04652 -234990.

திறனாய்வு

# பாணர் குடிலின் கதை

**வீ. அரசு**




அறச்செல்வி சித்ரா | அரச.முருகுபாண்டியன்
புலம் வெளியீடு | விலை: ரூ.300/-
சென்னை - 600 092 / தொடர்பு எண்: 6374949639

*“எங்களோடு உறவாடிய ஒரு சமூகத்தின் வாழ்வு இதில் பின்னிப்பிணைந்து கிடக்கிறது. என் இணையரைப் பற்றிய பதிவுதான் இது. அதில் நானும் நீங்களும் இருக்கிறீர்கள், அதனால் இது நம் வரலாறு. அவரைப் பற்றி வாசிப்பது நம் வாழ்வை மேலும் அர்த்தப்படுத்தும்.”*

பேராசிரியர் அரச.முருகுபாண்டியன், “அறம் சார்ந்து வாழ்ந்த ஒரு பெண் பேராசிரியரின் வாழ்க்கைக் குறிப்புகள்” எனும் பொருளில் ‘அறச்செல்வி சித்ரா’ எனும் நூலை உருவாக்கியுள்ளார். அந்தப் பின்புலத்தில் அவரது சொற்களே மேலே உள்ளவை. இந்த அரிய ஆவணத்தை வாசித்து முடியும் தருணத்தில், நமது மனசு கனத்துப் போகிறது. இனம் புரியாத சுமை அழுத்துகிறது; ஆனால் படிக்கத் தொடங்கும்போது, ‘சித்ரா’ என்ற அன்புள்ளத்தின் வாழ்க்கை என்றுதான் நூல் தொடருகிறது. அவரது அகால மரணத்தை ஏற்றுக்கொள்ள முடியாத மனநிலைக்கு நாம் தள்ளப்படுகிறோம். இந்த நூலை வாசித்து முடித்த தருணத்தில் என்னுள் உருவான மனப் பதிவுகளை பதிவுசெய்ய முயற்சி செய்கிறேன். அதனை வசதி கருதி கீழே காணும் வகையில் பகுத்துக் கொள்கிறேன்.

- அம்பேத்கரிய வாழ்முறையைப் பேணிய இணையர்
- பெண்மையைக் கொண்டாடிய ஓர் ஆண்மகனின் பதிவுகள்
- கூட்டுக் குடும்ப வாழ்முறை எனும் அரிய நிகழ்வு
- ‘பாணர்குடில்’ எனும் பொதுவெளி

இந்த நூல் முழுவதும் அம்பேத்கர் ஊடுபாவாய் இருக்கிறார். திருமதி சித்ரா அவர்கள் அம்பேத்கர் குறித்தப் புரிதலோடு வாழ்ந்த முறையை அவரது இணையர் பதிவு செய்திருக்கும் முறைகள் மூலம் அவர்கள் வாழ்க்கையில் அம்பேத்கர் குறித்தப் புரிதலை அறிய முடிகிறது.

அம்பேத்கர் என்ற மனிதர் இந்தியச் சமூகம் பற்றிய புரிதல் சார்ந்து செயல்பட்டவர். பொருளாதாரத் துறை, சட்டவியல் துறை ஆகியவற்றில் புலமைத்துவம் மிக்க அறிஞரான அம்பேத்கர், அந்தப் புலமைத்துவத்தின் மூலம் இந்தியச் சாதி அமைப்பும் அது இந்து மதம் எனும் நிறுவனத்தின் மூலம் செயல்படும் முறைகளையும் ஆழ்ந்த புலமைத்துவத்துடன் ஆய்வு செய்து வெளிப்படுத்தினார். அவர் அடிமட்டத்தில், நசுக்கப்படும், ஒடுக்கப்பட்ட, தீண்டாமை அனுபவிக்கும் மக்களின் விடுதலைக்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்தார். அவரது போராட்டம்தான், இந்தியாவில் வாழும் இன்றைய பட்டியல் இன மக்களின் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றுக்கு அடிப்படையாக அமைந்தது.

அம்பேத்கரின் மேற்குறித்த தியாகச் செயல்தான், சித்ரா-பாண்டியன் போன்றவர்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றத்தைப் பெறுவதற்கு வாய்ப்பாக அமைந்தது. இவர்கள் எவ்வாறெல்லாம் அம்பேத்கரை அறிந்து செயல்பட்டிருக்கிறார்கள் என்பதை நூல் முழுவதிலும், பதிவாகியிருப்பதைக் காண்கிறோம். தங்கள் வாழ்முறைக்கு அடிப்படையாக அமைந்த அம்பேத்கரியத்தைச் சொல்லும் நூலாகவும் இதனை வாசிக்க முடிகிறது. இதனை நடைமுறைப்படுத்திய அமைப்பாக, சித்ரா அவர்களின் முழுமையான ஈடுபாட்டில், இருவரும் இணைந்து நடத்திய 'போதி' செயல்பாடுகள் நிகழ்ந்துள்ளன.

பாணர்குடிலில் நடந்த 'போதி' அமைப்பின் கூட்டம் பின்னர் பிறிதொரு இடத்திற்கு மாறியது. இந்த அமைப்பை சித்ரா அவர்கள் நடத்திய முறை, அதில் அவருடைய இணையரின் பங்களிப்பு குறித்த விரிவான பதிவுகளை இந்நூலில் காண்கிறோம். சுமார் நாற்பது ஆண்டுகள், தமிழ்ச் சமூக அரசியல் செயல்பாடுகளின் மாதிரியாக போதி இருந்திருக்கிறது. தலித்திய செயற்பாட்டாளர்கள், பெண்ணிய செயற்பாட்டாளர்கள், பெரியாரிய செயற்பாட்டாளர்கள், பல்வேறு இடதுசாரி கருத்துநிலை சார்ந்த அமைப்புகளில் செயல்பட்டவர்கள் என பல்பரிமாணத்தோடு, சனநாயக மரபு சார்ந்த அரசியல் மரபை 'போதி' நடைமுறைப்படுத்தியிருக்கிறது. இம்மரபை உருவாக்கிய சித்ரா - பாண்டியன் என்ற இணையர்களின் செயல்பாடுகள் விதந்து பேச வேண்டிய அருஞ்செயல்கள். இவர்கள் இப்படிச் செயல்பட வேண்டும் என்னும் உந்துதல், இவர்கள்



உள்வாங்கியிருந்த அம்பேத்கரியம், பெரியாரியம், மார்க்சியம் ஆகிய கருத்துநிலைகள் தான் காரணமாக அமைந்திருக்கிறது.

சித்ரா - பாண்டியன் என்ற இணையர் வாழ்முறை என்பது நடுத்தரக் குடும்பம் எனும் பொருளாதார அலகுகளைக் கொண்டது. இவ்வகையான குடும்பங்களில் ஆண்கள் பெரும்பாலும் ஆணாதிக்க நிலவுடைமைப் பண்பு சார்ந்தவர்களாக இருப்பதே இன்றைய எதார்த்தம். இவ்வகையான குடும்பங்களில் ஆண்கள், தமது இணையரைப் பற்றிப் பேசுவது என்பதே அரிய நிகழ்வு. இந்தப் பதிவில் பாண்டியன் அவர்கள் தமது இணையரை 'குலதெய்வமாகக்' கொண்டாடுகிறார். சித்ரா அவர்களின் ஒவ்வொரு அசைவு, ஒவ்வொரு மூச்சு, பல்வேறு இருப்புகள், அவரது கருணை - அன்பு சார்ந்த செயல்கள், அவரது விருப்பம், அவருடைய தேர்வுகள் என ஓர் உயிரியின் இயங்குமுறையை நுண்ணியதாய், ஆழமாய்ப் புரிந்து, தெரிந்து கொண்டாடிய பாங்கு இந்நூலில் முதன்மையாகக் காண்கிறோம். ஆணாதிக்க மனநிலையை இயல்பாகப் பெற்றிருக்கும் ஒவ்வொரு ஆண்மகனும் குறுகி, வெட்கமடைந்து, தன்னையே நொந்து கொள்ளும் மனநிலைக்கு பாண்டியன் அவர்களுடைய பதிவு அமைந்திருக்கிறது.

பெண்ணைப் பற்றிய பதிவு என்பது பெண்மையைக் கொண்டாடும் பதிவாக அமைய வேண்டும். அது நிலவுடைமைப் பண்பு என்ற நிலையை மீறி அன்பெனும் அரிய மரபில் அது திளைக்க வேண்டும். இது ஆண் - பெண் எனும் உயிரிகளின் சமத்துவத்தையும், அன்பையும் கொண்டு கொடுத்தலையும் அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். இந்தப் பதிவில் பாண்டியன் எனும் ஆண் அப்படியான உயிரியாக இருப்பதை உணர்கிறோம்.

ஆணாதிக்க சமூக ஒழுங்கில், ஆதிக்கத்தை நியாயப்படுத்தும் ஆண்கள் நிறைந்த இந்தச் சமூக வெளியில், பாண்டியன் அந்த மனநிலை இல்லாதவராக வாழும் சூழலை உருவாக்கியவராக திருமதி சித்ரா அவர்கள் இருந்து, மறைந்திருக்கிறார்கள்.

பாண்டியன் இப்படி வாழ்ந்தார் என்பதை சித்ரா என்ற உயிரியிலிருந்துதான் நாம் புரிந்துகொள்கிறோம். ஓர் ஆணின் ஆணாதிக்க மனநிலையை அழிக்கும் பண்புடையவராக சித்ரா இருந்திருக்கிறார் என்பதை இந்நூல் பல பரிமாணங்களில் நமக்குச் சொல்கிறது; இப்படியும் ஓர் இணையர்களா! எனும் வியப்பை சாதாரணமான மனிதர்களிடத்தில் உருவாக்குகிறது. இதனால்தான் பாண்டியன் அவர்கள் இப்படியான பதிவைச் செய்ய முடிந்திருக்கிறது. ஆணாதிக்க, நிலவுடைமைப் பண்பு சார்ந்த சமூகத்தில் சித்ரா-பாண்டியன் வாழ்முறை தனித்திருப்பதை இந்நூல் விரிவாகப் பதிவு செய்கிறது.

இந்த நூல் முழுவதும் குடும்ப உறவுகளின் பல்வேறு நிகழ்வுகள் காட்சிப்படுத்தப்படுகின்றன. சித்ரா-பாண்டியன் இணையர் குடும்பம் என்பது முதல் அல்லது இரண்டாம் தலைமுறை கல்வியறிவு பெற்றவர்கள். இன்றைய சமூக நெருக்கடி சார்ந்து இவ்வகையான குடும்ப உறவுகளில் நெகிழ்வுத் தன்மை அற்ற இறுக்கமான சூழலையே இச்சமூக அமைப்பு உருவாக்குகிறது. நுகர்வுப் பண்பாட்டிற்கு மிகுதியாக ஆளாகும் குடும்பங்கள் இவ்வகையானவை. ஆனால், சித்ரா-பாண்டியன் இணையர் குடும்பம் இன்றைய நெருக்கடிச் சூழலிலிருந்து முற்றிலும் வேறுபட்டு, கூட்டுக்குடும்ப வாழ்முறையைப் பேணுவதாக அமைகிறது. குறிப்பாக, சித்ரா அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் பேணும் குடும்ப உறவுகள் நூல் முழுவதும் விரிந்து கிடக்கிறது. அன்பும் ஆதரவும் தான் மனித வாழ்க்கை என்பதை நடைமுறைப்படுத்தும் நிகழ்வுகள், இந்த இணையர் குடும்பத்தினரிடையே நிலவுவதை பாண்டியன் அவர்களின் பதிவுகள் வெளிப்படுத்துகின்றன. இத்தன்மை எப்படிச் சாத்தியமாயிற்று? என்பதைத் தேடும்போது, திருமதி சித்ரா அவர்களே அதற்கு மூலகாரணமாக அமைந்திருக்கிறார். மனிதர்கள் மீது உள்ள அன்பு என்பது, அவர்கள் குடும்பத்தின் மீது வலுவான பிணைப்பாக உருப்பெறுகிறது. அன்பு எனும் பண்புதான் இப்படியான வாழ்முறைகளைத் தீர்மானிக்கிறது என்பது இந்த இணையரின் வாழ்க்கை உலகத்துக்குச் சொல்கிறது.

இந்த இணையர் உருவாக்கிய பாணர் குடில், சமூக இயங்குதளத்தில் பல்வேறு முன்னுதாரணங்களுக்கு அடிப்படையாக அமைகிறது. வீட்டையே பொதுவெளியாகக் கட்டமைப்பது என்பது சாத்தியமாகிறது. போதி என்ற நிகழ்வு மூலம், இவர்களுக்கு மட்டுமான வெளியாக இவர்களது பாணர் குடில் அமையவில்லை. அது பொதுநிகழ்வுகளுக்கான சமூக வெளியாகச் செயல்பட்டுள்ளது. போதி மூலம் நடந்த நிகழ்வுகள் என்பவை, இன்றைய தமிழ்ச் சமூகத்தின் அரசியல் புரிதல் சார்ந்தவை. தமிழகம் முழுவதும் செயல்படும் சமூகச் செயற்பாட்டாளர்களின் ஒன்று கூடல் நிகழ்த்தப்பட்டுள்ளது. தலித்தியம், பெண்ணியம், தமிழ் தேசியம், மார்க்சியம் எனும் பல்வேறு சமூகக் கருத்துநிலைகள் குறித்த உரையாடல்களின் களமாக போதி நிகழ்வுகள் நடந்திருப்பதை அறிகிறோம். இதற்கான நிகழ்விடமாகவே பாணர் குடில் செயல்பட்டிருக்கிறது. திருமதி சித்ரா அவர்கள், இவ்வகையான நிகழ்வுகளில் விருந்தினர்களை அன்பு பாராட்டும் பல்வேறு பதிவுகள் நூல் முழுவதும் விரவிக் கிடக்கிறது. உணவு, உடை, மகிழ்வாக தங்கியிருந்து செல்லுதல் ஆகிய அனைத்திற்கும் களம் அமைத்துத் தந்திருக்கிறது பாணர் குடில்.


தோழர் அரச. முருகுபாண்டியன் படைத்திருக்கும் ‘அறச்செல்வி சித்ரா’ எனும் அரிய ஆக்கம் என்பது, தமிழ்ச் சமூகத்தின் அரசியல் கருத்துநிலை சார்ந்து வாழ்ந்த இணையர்கள் இருவரின் பதிவு மட்டுமல்ல; தமிழ் சமூக அரசியல் இயங்குதளம் பற்றிய புரிதலாகவும் இருக்கிறது. அம்பேத்கரின் பல்வேறு கருத்துநிலைகளை நடைமுறையாக்கிய வாழ்முறையை இவர்களிடம் கண்டறிய முடிகிறது. இந்நூலை வாசிக்க வாய்ப்பளித்த தோழர் அரச. முருகுபாண்டியன் அவர்களுக்கு வணக்கங்களும் நன்றியும்.

●

கட்டுரையாளர், ஓய்வுபெற்ற பேராசிரியர்

புத்தகங்கள் அச்சிட
அற்புதத் தீர்வு
குறைந்த செலவு
அதிகபட்ச தரம்
அதிகபட்ச தரத்தில் மிகக்குறைந்த செலவில் புத்தகங்கள் அச்சிடுவதற்கு ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் (PRINT ON DEMAND) முறை ஒரு வரப்பிரசாதமாகும். ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் முறையில் நேர்த்தியான தாள், அச்சு மற்றும் பைண்டிங்குடன் மிகக்குறைந்த விலையில், தரமாக அச்சிட்டுத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.
REAL IMPACT SOLUTIONS, CHENNAI
தொடர்பு கொள்ள
98412 93503


# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்





₹ 400/-





₹ 120/-





₹ 170/-




₹ 140/-




₹ 230/-





₹ 300/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎ 044 - 26251968, 26258410, 48601884 www.ncbhpublisher.in | email: info@ncbh.in



# கவிஞர் தமிழ் ஒளியின் சிறார் இலக்கியப் பங்களிப்பு

முனைவர் ஜெ. மதிவேந்தன்

இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கப் பங்களிப்பினைச் செய்தவர் கவிஞர் தமிழ் ஒளி ஆவார். பொதுவுடைமைச் சிந்தனைகளில் மூழ்கியவர். உழைக்கும் மக்களின் வலிகளை, பாடுகளை எழுத்தில் வார்த்தவர். இடதுசாரி சிந்தனையாளர்களுள் தனித்த பார்வை கொண்டவர். ஒடுக்கப்பட்ட மக்களின் இழிநிலையைக் கண்டு கொதித்தெழுந்தவர். சமூக முரண்களைக் கண்டித்தவர். இப்படிப் பல சிறப்புகள் பெற்றிருப்பவர். தமிழ் இலக்கிய உலகில் கவிதை, மரபுக்கவிதை என்னும் இரண்டிலும் ஆழமாகக் கால் பதித்தவர். அந்த வரிசையில், தமிழில் சிறார் (குழந்தை) இலக்கிய மரபு என்பது தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதாவது, “இன்றைய சிறுவர்கள்; நாளைய இளைஞர்கள்” என்ற பாவலரேறு பெருஞ் சித்திரனாரின் வாக்கிற்கேற்ப சிறுவர்களை மையமிட்டு பாடல்கள், கதைகள், நாடகங்கள், இதழ்கள் எனப் பலவும் தொடர்ந்து வந்தன. அவர்களிடையே ஒழுக்க உணர்வும் சமுதாய உணர்வும் நாளைய மக்களின் எதிர்காலச் சிந்தனைகளும் இயற்கை சார்ந்த புரிதல்களையும் உண்டாக்க கவிதைகள் / பாடல்கள் பலராலும் எழுதப்பட்டது. அவர்களுள் கவிஞர் தமிழ் ஒளியும் தன்னுடைய காலத்தில் தனக்குத் தோன்றிய சிந்தனைகளைக் குழந்தைப் பாடல்களாக வடித்துச் சென்றுள்ளார். அவை, இளம்பருவத்தில் குழந்தைகள் மனதில் நல்ல எண்ணங்களை வளர்க்கும் விதமாகவும் வழிபடுத்துபவையாகவும் அப்பாடல்கள் அமைந்துள்ளன.

**தமிழ் ஒளி என்னும் விசயரங்கம்**

தமிழ் ஒளி என்னும் புனைப்பெயர் விசயரங்கம். இவர் 21.09.1924 அன்று பிறக்கின்றார். 29.03.1965 அன்று 41 வயதில் இவ்வுலக வாழ்வினை விட்டு நீங்கிச் செல்கிறார். புதுவை மண்ணில் பிறந்த தமிழ் ஒளி பாரதி, பாரதிதாசனின் வழித் தோன்றலாக, அவர்களின் படைப்புகள் வழி ஆட்கொள்ளப்படுகிறார். தமிழ் இலக்கியப் பங்களிப்பில் கவிதைகள், கதைகள், கட்டுரைகள், திறனாய்வு உரைகள், நாடகங்கள், குழந்தைப் பாடல்கள் எனப் பன்முகத் திறன் கொண்டவராக விளங்குகிறார்.

தமிழ் ஒளி, விஜயரங்கம், விஜயன் சி.வி.ர. போன்ற புனைப்பெயர்களில் தமிழ் இதழ்களில் தொடர்ந்து எழுதியுள்ளார். திராவிடர் கழகத்தில் தொடங்கிய இவரது அரசியல் பயணம், வளர்ச்சியுற்று பொதுவுடைமைச் சிந்தனைகளில் ஈர்க்கப்பட்டு வாழலானார். தமிழ்ச் சமூகத்தில் நிலவிய சாதியக் கொடுமைகளையும் உழைப்புச் சுரண்டலையும் சாடி தம் படைப்புகளைப் படைக்கலானார்.

**தமிழ் ஒளியின் நூல்கள்**

"நிலை பெற்ற சிலை -1947, வீராயி - 1947, மே தின ரோசா -, விதியோ வீணையோ -1961, கண்ணப்பன் கிளிகள் - 1966, புத்தர் பிறந்தார் (முற்றுப் பெறாத காவியம்), கோசலக் குமாரி - 1966, மாதவிக் காவியம் - 1995, சிலப்பதிகாரம் காவியமா நாடகமா, திருக்குறளும் கடவுளும், தமிழர் சமுதாயம்" போன்ற நூல்களைப் படைத்துள்ளார். (இப்பட்டியல் முழுமையானவை அல்ல.)

**சிறார் / குழந்தை இலக்கியம்**

தமிழில் சிறார் / குழந்தை இலக்கியம் என்பது பல்வேறு ஆளுமைகளால் இயக்கமாக முன்னெடுக்கப்பட்டது என்பது வரலாறு. என்றாலும் பல்வேறு சூழல்களில் பல ஆளுமைகள் தங்களின் எண்ணவோட்டங்களைச் சிறார்களுக்காக எழுத்து இலக்கியமாக்கினர். அழ. வள்ளியப்பா, வாணிதாசன், பெ. தூரன் போன்றவர்கள் சிறார் இலக்கியத்தில் பட்டொளி வீசினர். ஆனால், அங்கொன்றும் இங்கொன்றுமாக தரமான குழந்தைப் பாடல்கள் படைத்து வெளி உலகில் அடையாளப்படுத்த முடியாமல் போனவர்கள் பலர். அவர்களுள் கவிஞர் தமிழ் ஒளியும் முதன்மையர்.

இயற்கையை, குடும்பத்தை, தாய்நாட்டினை, தமிழ் ஆளுமைகளை, தமிழரின் விழாக்களைக் கொண்டாடிய கவிஞர் தமிழ் ஒளி. இவற்றினைக் குழந்தைகளுக்கு ஏற்ற வடிவத்தில் சொற்கட்டுகளுடன் ஓசைநயத்துடன் கருத்துச் செறிவு மிக்க பாடல்களைப் படைத்துள்ளார். சிறார் இலக்கியம் என்றவுடன் அதற்கான மெனக்கெடல்கள், உழைப்பு என்பது அளவிடற்கரியது. சொற்கள் மிக எளிமையாக இருக்க வேண்டும். நீண்ட அல்லது கடுமையான உச்சரிப்பு சொற்கள் இருக்கக் கூடாது, எதுகை, மோனை, இயைபு போன்ற தொடை நலன்கள் மிளிர்ந்து காணப்பட வேண்டும். அந்த ஒழுங்கமைவில் தான் கொண்ட கொள்கைகளைக் குழந்தைகளுக்கு ஏற்றார் போல் கவிஞர் தமிழ் ஒளி படைத்துச் சென்றுள்ளார்.

தமிழர்கள் இயற்கையோடு ஒன்றி வாழ்ந்த மரபினர். அம்மக்கள் இயற்கையின் மடிகளில் என்ன இருக்கின்றனவோ அவற்றையே தங்களின் வாழ்வாதாரமாக ஆக்கிக் கொண்டவர்கள். அப்படி ஆறு, மலை, காடு, ஓடை, மரம், செடி, கொடி, பறவை, விலங்குகள் போன்றவற்றோடு ஒன்றியைந்த வாழ்வியல் வளமையானதாகத் தமிழர்களை அமைத்துக் கொண்டனர். தங்களின் அடுத்த தலைமுறை-யினருக்கும் இயற்கையின் கொடையினையும் அதன் தன்மைகளையும் விளக்கிச் சென்றுள்ளனர். கவிஞர் அவர்களும் தம் பாடலில் அவற்றினைப் பதிவாக்குகிறார்.

"ஆற்றில் தண்ணீர் சலசல வென்றே ஓடும்
அதுதான் நன்றாய் அழகாய் நாளும் பாடும்;
காற்றும் நன்றாய்க் கலகல வென்றே வீசும்
காதுகள் மகிழப் பறவைகள் கூடிப் பேசும்"

(செ.து. சஞ்சீவி; 2010; 137.)

'இயற்கை அழகு' என்னும் தலைப்பிலான பாடலில் ஆறும் காற்றும் அதன் இயல்பில் என்னென்ன செய்யும் என்பதனை மிக எளிமையாகக் காட்சிப்படுத்துகிறார்.

மனிதர்கள் என்றும் இயற்கையோடு இணைந்தே வாழ தலைப்பட்டனர். ஆனால், நவீன யுகமானது அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிகள் மனிதர்களை இயற்கையிலிருந்து அந்நியப்படுத்தி விட்டது. காலந்தோறும் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டே வருகின்றது. என்றாலும் இயற்கை தன்னால் முடிந்தளவு இன்னும் மனிதர்களுக்கு நன்மையை அளித்துக் கொண்டுதான் வருகின்றது. இந்த வரலாற்றினைக் குழந்தைகளுக்கு மனதில் பதிய வைக்க வேண்டும் என்ற எண்ணத்தில்,

"நல்ல இயற்கை தன்னையே என்றும் நாடு
நண்பர்களாவோம் இன்றே நாமதனோடு"

(மேலது,)

இயற்கையோடு நண்பர்களாக மனிதர்கள் மாறிட வேண்டும் என்கிற கூற்று அவற்றிலிருந்து மனிதர்கள் விலகிய எதிர்நிலைப்பட்ட பாங்கினை முன்வைக்கின்றது. இயற்கையும் மனிதனும் நண்பர்களாக இருந்தவரை, இந்தப் பூமி எவ்வித இடர்களுக்கும் ஆட்படாமல் இருந்தது. இயற்கையிலிருந்து பிரிந்த மனிதன் இன்று பல்வேறு நோய்களாலும் துன்பங்களாலும் அவதிக்குள்ளாகின்றனர்.

இயற்கையோடு அன்புடன் வாழ்வேன் என்ற தன்னுடைய கருத்தினை ஆழமாக எடுத்துரைக்கின்றார்.

"நெஞ்சு மணக்கும் மலர்கள் பறித்துத்தாரும்!
அல்லும் பகலும் இயற்கை அன்னை அருளால் நாம்
அன்புடன் வாழ்வோம் அழகென்கின்ற பொருளால்"

(மேலது,)

இரவும் பகலும் இந்த உலகமானது இயற்கையின் கையில் தான் வளர்ந்து வருகின்றது. அப்படியான

உலகில் இயற்கையின் மீது அன்பு கொண்டவர்களாக வாழலாம். அதுவே சிறந்த வாழ்வியலைத் தரும் என்கிற உண்மையைச் சிறார்களுக்கு எடுத்துக் காட்டுகிறார்.

குடும்ப உறவுகளை அடையாளம் காண்பதும் பேணுவதும் இன்றைய சூழலில் முதன்மையானதாக இருக்கின்றது. கூட்டுக் குடும்ப வாழ்வு சிதைந்த நிலை இன்றுள்ளது. ஆயினும் அனைவரும் ஒன்றாய் வாழ்ந்தபோது நல்லது, கெட்டதை, இன்ப துன்பங்களைப் பகிர்ந்துகொண்ட வாழ்வியல் இனிமை மிகுந்ததாக இருந்தது. இதனை எடுத்துக்கூறும் கவிஞர்,

“அப்பா அம்மா அண்ணனுடன்
அக்கா தம்பி சிறுகுழந்தை
எல்லோருக்கும் ஒரு வீடு”

(மேலது, 138)

என்கிற குடும்ப ஒற்றுமையைக் குழந்தைகளுக்கு எடுத்து விளக்குகின்றார். அதோடு நாட்டையும் உலகினையும் நேசியுங்கள் என்றும் நல்லவர்கள் அனைவரையும் ஒரு குடும்ப உறுப்பினர்களாகப் பார்க்கின்றார்.

உலகினை, நாட்டினை நேசிக்கும் தமிழ் ஒளி தாய்நாட்டுப் பற்று கொண்டவராகத் திகழ்கிறார். தமிழ் மண்ணின் மீதும் தமிழ் மொழியின் மீதும் தீராக் காதல் கொண்டுள்ளார்.

“அம்மா அப்பா வளர்ந்த இடம்
அவர்கள் நம்மைப் பெற்ற இடம்
.......... ............ ...........
அழகிய இடமே தமிழ்நாடு
அதுவே நமது தாய்நாடு”


(மேலது, 139)

தந்தையும் தாயும் வளர்ந்த இடமாகவும் அழகிய இடமாகவும் விளங்குவது தமிழ்நாடு என்ற ஒற்றைச் சிந்தனை மேலோங்கியவராக, குழந்தைகளுக்கு நாட்டுவுணர்வினையும் மொழிப் பற்றினையும் ஊட்டுகிறார்.

தமிழ்நாட்டின் எல்லைப் பகுப்பினையும் குழந்தைகளுக்குத் தெளிவுபடுத்துகின்றார். அதாவது, தொல்காப்பியம் சுட்டிய, ‘வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்க்கூறும் நல்லுலகம்’ என்னும் நிலப்பரப்பினை ஒட்டிய எல்லைப் பகுப்பு செய்தளிக்கின்றார்.





“கிழக்கே பெரிய கடல்
மேற்கே பெரிய மலை
தெற்கே குமரி முனை
வடக்கே திருப் பதியாம்”

(மேலது, 140)

கடலும் மலையும் இயற்கை சூழ்ந்த தமிழ்நிலப் பகுதிகள் எல்லைகளாக விளங்குகின்றன.

தமிழின் இருபெரும் ஆளுமைகளாகத் திகழும், ‘தமிழ்த் தலைவன்’ திருவள்ளுவரையும் ‘தமிழ்த்தாய்’ ஔவையினையும் கவிஞர் தமிழ் ஒளி புகழ்கின்றார். இரண்டடியில் உலகத்தின் அனைத்து அறங்களைப் புகட்டியவர் திருவள்ளுவர். அவர் குறித்து,

“ஒரு வள்ளுவர் பிறந்த தாலே
நமக்குப் பெருமையாம்!
உலகினிலே அவரைப் போலப்
பிறப்ப தருமையாம்” (மேலது, 141)

குறட்பாக்களைத் தேடிக் கற்க வேண்டும். அது உலகிற்குச் செய்யும் சேவையாகும் என்கிறார். இப்படியாக, திருவள்ளுவரின் சிறப்புகளை விதந்தோதுகிறார்.

“அவ்வைப் பாட்டி மூதாட்டி
அவளே நமக்கு வழிகாட்டி
செவ்வையாக அவள் சொல்லை
சேர்ந்து கற்றால் இடர் இல்லை”

(மேலது, 140)

ஔவையாரின் பாடல்களைத் தமிழ்ச் சமூகம் அறிவுக்கு ஏற்றவகையில் அமைந்துள்ளன. அவரின் கருத்துக்கள் மனித இனம் அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கவிஞர் தமிழ் ஒளி, ஔவையினைத் தாய் போன்ற வழிகாட்டியாகக் கொள்கிறார். துன்பம் இல்லாத வாழ்வுக்கு அவரின் பாடல்கள் நமக்குத் துணையாக வரும் என்கிறார்.

இன்று பலரும் நேரத்தை இழந்து வருகின்றனர். காலமும் நேரமும் யாருக்கும் எதற்கும் நிற்காது. அப்படியான காலத்தில் கல்வி கற்று, வாழ்வினைத் தேர்ச்சிகொள்ள வேண்டும் என்பது அனைவரின் இலக்காகும்.

“நீதி தருகின்ற
கல்வியைக் கற்றிட கண்விழி
நீயும் உலகில்
பெரியவன் ஆகவே கண்விழி”

(மேலது, 141)

என்று உறங்குகின்றவர்களை உயர்த்திட கண்விழி என்று கவிஞர் அறிவுறுத்துகிறார்.

குழந்தைப் பாடல்களுக்கு எதுகை, மோனை, இயைபுத் தொடைகள் மிளிர பாடல்கள் அமைவது தான் நினைவில் பதிந்திட வழிவகுக்கும். அந்தவகையில், ‘நகை வேண்டாம் பாப்பா’ என்ற தலைப்பில் எழுதியுள்ள பாடல் பின்வருமாறு,

“பச்சைக் கிளிக்கு நகையில்லை
பாடுங் குயிலுக் கணியில்லை
இச்சை மைனாப் பறவைக்கும்
ஏதும் கழுத்தில் நகையில்லை
கச்சை சதங்கை யில்லாமல்
காட்டில் ஆடும் மயிலுக்கும்
உச்சிக் கொண்ட நகையில்லை
உனக்கேன் பாப்பா நகையெல்லாம்”

(மேலது, 142)

‘நகை’ என்னும் அணிகலன் மனிதர்க்கு அழகு என்று நினைத்துக் கொள்ளும் சமூகத்தில் அவை உண்மையான அணிகலன் இல்லை என்று உரக்கச் சொல்கிறார். கிளி, மைனா, மயில் போன்ற பறவையினங்கள் இயற்கையோடு இயற்கையாகவே இருக்கின்றன. ஆனால், மனித இனம் மட்டும் தான் செயற்கையாக ஏதேதோ பூச்சிகளோடு உருமாறி வாழ்வதை எண்ணி நகையாடுகின்றார்.

தமிழ் நிலத்தில் காவிரி என்னும் ஆறு குறித்தும் அதன் நீர்ப் பங்கீடு குறித்தும் தொடர்ந்து விவாதிக்கப்பட்டு வருகின்றது. இன்றும் அந்தப் பிரச்சினைகள் தீர்ந்தபாடில்லை. இதனைக் குழந்தைகளுக்கு எடுத்துரைக்கும் கவிஞர் ‘காவிரி’, ‘காவிரியே வா’ என்னும் தலைப்பிலான இரண்டு பாடல்களைப் பாடியுள்ளார்.

குடகு மலையில் குதித்து வந்த காவிரி
கொண்டு வந்த பொருளும் எங்கே? கைவிரி

.................... .................. ................. ............

யார்க்கும் அஞ்சா வீரம்கொண்ட காவிரி
அள்ளி வந்த பொருளும் எங்கே? கைவிரி”

(மேலது, 142)

என்று ‘அரசியல்’ சொல்லாடல்களோடு குழந்தைகளுக்கு வரலாற்றுப் பின்புலத்தை காட்டுகின்றார்.

தமிழர்களின் வாழ்வியலில் மிக இன்றியமையாத விழாவாகத் திகழ்வது பொங்கல். இது உழைப்போடு தொடர்புடைய பெருவிழாவாகும். மனிதர்கள் தங்களின் எண்ணங்களைக் கொண்டாட்ட உணர்வோடு இணைத்து வெளிப்படுத்தினர்.

“பூசணிப் பூ பூத்தது
பொங்கல் மாசம் வந்தது!

......... ........... ...........

நெல் விளைத்த உழவனே
நேர்த்தியான பொங்கலின்
திருவிழாவைச் செய்பவன்
தேசத் தொண்டு செய்பவன்!
விருந்து வைக்கக் கூடுவோம்
வெற்றிப் பாட்டுப் பாடுவோம்!”

(மேலது, 144)

அதாவது, தமிழர்கள் மார்கழி முடிந்து, தை மாதத்தில் நிகழும் பொங்கல் விழா வளமையின் நிகழ்வாகக் கொண்டாடி வந்தனர். பூசணிப் பூக்களால் கோலங்களை அழகுபடுத்திக் கொள்வர். நெல் விளைச்சலின் நற்பயனைப் பொங்கல் உலையில் இட்டு மகிழ்வர். அது பலருக்கு விருந்து வைக்கும் ஒரு வெற்றிக் கூடலாக அமைகிறது என்கிற தமிழர் பண்பாட்டின் பெருமையைக் குழந்தைகளுக்கு ஊட்டுகிறார்.

இப்படியாக, தமிழ்ப் படைப்பாளர்களுள் கவிஞர் தமிழ் ஒளி தனித்து ஒளிரும் நிலவாக தம் குழந்தைப் பாடல்களின் வழி தெரிகின்றார். ஆனாலும் பாரதியாரைப் போலவே தமிழ் ஒளியும் அவர் வாழும் காலத்தில் கொண்டாடப்படவில்லை என்பது கசப்பான உண்மை. தமிழ் ஒளி பற்றி, பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் குறிப்பிடுகையில், ‘‘என்னுடைய காலத்தில், என் அருகில் இப்படி ஒரு மகத்தான கவிஞர் இருந்திருக்கிறார் என்பதை என்னால் தெரிந்துகொள்ள முடியாமல் போய்விட்டதே! என்றார்’’. அது எவ்வளவு உண்மை பொதிந்தது என்பதை இக்கட்டுரை மேலும் தெளிவுபடுத்தும்.

நூற்றாண்டினைக் கடக்கும் வேளையிலும் தமிழ் ஒளி சில சட்ட வட்டங்களுக்குள் சிக்கிக் கொள்கிறார். அவற்றை விடுத்து ஒரு எளிய மனிதனின் ஆழமான, அழுத்தமான சிந்தனை எப்படிப் பட்டவையாக இருந்திருக்கின்றன என்பதைத் தெளிவு கண்டு அவரையும் அவர்தம் எழுத்துக்களைப் பரவலாக்கம் செய்ய வேண்டும். அவரின் கருத்துக்களைப் பின்பற்றி வாழவும் வழிவகை செய்ய வேண்டும். குறிப்பாக, பள்ளி, கல்லூரிப் பாடத் திட்டங்களில், தமிழ் ஒளி குறித்து அதிகம் பேசப்பட வேண்டும். அடுத்த தலைமுறையினராவது தமிழ் ஒளியினை, அவரின் கருத்துப் புகழ் ஒளியில் நின்று காணட்டும்.

**துணை நின்றவை**



1. பூவண்ணன். சிறுவர் இலக்கிய வரலாறு, வானதி பதிப்பகம் சென்னை, 1980
2. கவிஞர் தமிழ் ஒளி, மே தினமே வருக, பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை,2008.
3. செ. து. சஞ்சீவி., தமிழ் ஒளியின் சிறந்த கவிதைகள், சாகித்திய அகாதெமி, புது தில்லி, 2010.
4. தொல்காப்பியர்., - தொல்காப்பியம், இளம்பூரணர் உரை, சாரதா பதிப்பகம், சென்னை பதிப்பு - 2011.
5. பொழிலன்., பாவலரேறு பெருஞ்சித்திரனார் வாழ்க்கைச் சுவடுகள், மன்பதைப் பதிப்பகம், சென்னை, 2016.
6. தமிழ் இணையம், தமிழ் ஒளி, தமிழ் விக்கிபீடியா.



●


கட்டுரையாளர், கௌரவ விரிவுரையாளர்,
தமிழ்த் துறை, அறிஞர் அண்ணா அரசுக்
கலைக்கல்லூரி, செய்யாறு - 604 407.










# நான்கு ஆளுமைகள்

முனைவர் ந.அருள்மொழி

திருநெல்வேலி மண் வீர உணர்விற்கும் மொழி உணர்விற்கும் பெயர் பெற்றது. திருநெல்வேலி மாவட்டம் பல இலக்கிய ஆளுமைகளை ஈந்துள்ளது. ஒரே மண் சார்ந்த மூன்று இலக்கிய ஆளுமைகளுக்கும் (தொ.மு.சி, கு.அழகிரிசாமி, கி.ராஜநாராயணன்) நூற்றாண்டு. சமூகத்தை மனிதத்தால் புதுப்பித்த வள்ளலார் தோன்றிய கடலூர் மாவட்ட மண்ணில் உதித்த பொதுவுடைமைக் கவிஞர் தமிழ் ஒளிக்கும் நூற்றாண்டு. நூற்றாண்டு காணும் மருதநிலப் படைப்பாளர்களையும் நெய்தல் நிலப் படைப்பாளர்களையும் தனது எழுத்து அறத்தால் நிலைநிறுத்துகின்றார் மருத்துவர் அறம்...

**தொ.மு.சி**

அறுபது ஆண்டு காலத் தொடர் இலக்கியப் பணி. இலக்கியம் என்பது முழுநேரப் பணி. பணம், விருது, பதவி, அங்கீகாரத்திற்காக அல்ல என வாழ்ந்தவர் தொ.மு.சி. தொ.மு.சி. ரகுநாதன் அவர்களை, 'இலக்கியத்தை தனது முழுநேரப் பணியாக ஏற்று, எந்தவித சமரசமும் இன்றிப் பணத்திற்காகவோ விருதுக்காகவோ, பதவிக்காகவோ, அங்கீகாரத்திற்காகவோ எந்தக் காரியமும் செய்யாதவர்' என அறிமுகப்படுத்தும் பொழுதே தொ.மு.சி. மீதான மதிப்பு உயர்ந்து விடுகின்றது. ஓகாரமிட்டு (பணத்திற்காகவோ...) எழுத எழுத 'ஓ' என்று நம்முள்ளும் வியப்பு ஏற்படுகின்றது. 'வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன், மெய் கூறுவல்' எனும் சங்கப் புலவர் மருதனிளநாகனாரின் கூற்று தொ.மு.சியால் உயிர்பெறுவதைக் காணமுடிகின்றது. தொ.மு.சி.யின் தாத்தா,



நூற்றாண்டு கண்ட ஆளுமைகள்
மருத்துவர் த.அறம் | விலை: ரூ.110/-
வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்

அப்பா முதலானோரின் இலக்கியப் பணிகள் குறித்து அறியும் பொழுது 'தந்தையர் ஒப்பர் மக்கள்' எனும் தொல்காப்பியரின் கருத்தும் நினைவிற்கு வருகின்றது. தொ.மு.சி.யின் இளமை வாழ்வு, நூல் வாசிப்பு, சிறை வாழ்வு, சிறைவாழ்வில் பூத்த சிறுகதை, பத்திரிகைப்பணி முதலான செய்திகளோடு விரியும் இந்நூல் தொ.மு.சி.யின் முதல் நாவல் 'புயல்' குறித்தும் அதன் கதைக்கரு குறித்தும் சுருக்கமாக விளக்கி நிற்கின்றது. இதன்பின் வெளிவந்த தொ.மு.சி.யின் முதல் இரவு, கன்னிகா, நீயும் நானும் முதலான நாவல்களின் கதைச் சுருக்கத்தை நூலாசிரியர் விளக்குவது படிக்க வேண்டும் எனும் உணர்வை விதைக்கின்றது. தொ.மு.சி.யின் புகழ்பெற்ற முதல் சோசலிச எதார்த்த நாவல் எனச் சுட்டப் பெறும் 'பஞ்சும் பசியும்' தோற்றம் பெற்ற சூழல், செக் மொழியில் மொழிபெயர்க்கப் பெற்ற சூழல் முதலான செய்திகளை அறிய இந்நூல் உதவுகிறது. மேலும் 'பஞ்சும் பசியும்' நாவலுக்குப் பின் நாவல் படைப்பதை விட்டுவிட்டு ஆய்வாளர் விமர்சகர் மொழிபெயர்ப்பாளர் முதலான பரிமாணங்கள் வாயிலாக ஆற்றிய பணிகளையும் இந்நூலாசிரியர் தெளிவாக விளக்குகின்றார். தொ.மு.சி.யின் ஆய்வுப்பணி பாரதி குறித்தது; சிலப்பதிகாரம் குறித்தது புதுமைப்பித்தன் குறித்தது, திருக்குறள் குறித்தது, என அறிய முடிகின்றது. இப்பணிகள் இன்றைய தலைமுறையினருக்கும் ஆய்வு வழிகாட்டியாகத் துணை நிற்கும் என்பதில் ஐயமில்லை. தனது தந்தை சொத்தில் பாகப் பிரிவினையாகக் கிடைத்த பணத்தைக் கொண்டு 'சாந்தி' எனும் இலக்கிய இதழைத் தொடங்கியமை தொ.மு.சி.யின் ஆர்வம் குறையா இலக்கியப் பணிக்கும் பணப்பற்றில்லா மனத் தூய்மைக்கும் சான்று.

**திசைகாட்டி கு.அழகிரிசாமி**

குறைந்த வயதே வாழ்ந்தாலும் படைப்பாளியின் வாழ்வு பல எதிர்கொள்ளல்களையும் சவால்களையும் கடினங்களையும் தாங்கியது என்பதற்கு கு.அழகிரிசாமியின் வாழ்வே சான்று. இடைச்செவல் வாழ்வு - சென்னை வாழ்வு - அயலக வாழ்வு என முத்தளங்களில் இயங்கியது இவரது வாழ்வு. இடைச்செவல் கிராமத்தில் 'எஸ் எஸ் எல் சி வரை படித்தவர்' என்ற பெருமையை முதன் முதலில் பெற்றவர் கு.அழகிரிசாமி என வாசிக்கும் பொழுது கிராமத்தின் ஒளிக்கீற்றாய் நம் கண்முன் தோன்றுகின்றார். கு.அழகிரிசாமி இடைச்செவல் வாழ்வு - அரசு வேலை ராஜினாமா - சென்னை வாழ்வு - மலேசிய வாழ்வு என மாறி மாறி அமைந்த வாழ்க்கைப் பயணத்தில் படைப்பாளர்களும் வாசகர்களும் கற்றுக் கொள்ள வேண்டிய செய்திகள் பல உள்ளன. கு.அழகிரிசாமி கி.ரா.விற்குச் சென்னை வாழ்க்கை குறித்து எழுதிய கடிதங்களில் போதிய வருமானமின்மை, பணத்திற்காகப் படைப்பை எழுதாமை, குறுக்கு வழியில் வாழாமை, சுதந்திரத்தோடு வாழ்வது முதலான செய்திப் பதிவுகளை அறியமுடிகின்றது.

படைப்பாளர் கு.அழகிரிசாமி ஓவியராகவும் இசை ஞானம் கொண்டவராகவும் திகழ்ந்தார் என அவரது திறன்களையும் இந்நூல் சுட்டிச் செல்கின்றது. மலேசியாவில் எழுத்தாளர் கு.அழகிரிசாமி - சீதாலட்சுமி அம்மையார் சந்திப்பு, இருவரின் இசை ஞான உணர்வு, இசை ஞான அறிவு, இருவரின் வாழ்க்கைப் பயண உறவு உருவாக்கமாக மாறிய சூழல்களை ஆசிரியர் அறம் சுவைபட விளக்குகின்றார். கு.அழகிரிசாமி அவர்கள் 'பட்டினி கிடந்தாவது படைப்பாளியாக வாழ்வது' எனும் தீர்மானத்துடன் வாழ்ந்ததால் தனக்கு வந்த இடர்பாடுகளைப் பொருட்படுத்தவில்லை எனும் பதிவு கு.அழகிரிசாமியின் இலக்கிய மனதினை அறியத் துணை நிற்கின்றது.

**தமிழ்ஒளி**

பொதுவுடைமைக் கவிஞர் தமிழ்ஒளி குறித்த கட்டுரை நம்முள் உள்ளொளி பாய்ச்சுகின்றது. எழுத்தாளனின் கடமை எது? என்பதற்கு 'நம் கண் எதிரே நம்முடன் பிறந்தான், மாடாக உழைத்து ஓடாகத் தேய்ந்து போகிறான்; அவன் குடும்பம் வறுமைப் படுகுழியில் வீழ்ந்து கதறுகிறது. இதைக் கண்டு மனம் இரங்காமல் மரத்துப்போன நெஞ்சுடன் உலாவரும்

மானிடப் பிண்டங்களின் உடலில் 'சுரீர்' 'சுரீர்' என்று தைக்கும்படி எழுதுவதுதான் உண்மையான எழுத்தாளனின் கடமையும் நோக்கமும் ஆகும்' எனப் பதிலளிக்கும் தமிழ்ஒளியின் உள்ளக்கிடக்கை நம்மை ஈர்க்கின்றது.

பாரதிதாசனின் 'பாண்டியன் பரிசு' படைப்பினை நகலெடுக்கும் பணி முதலாகக் கவிபடைத்தல், நாடகம் காவியம் படைத்தல், சிறுகதை, இதழ்ப்பணி என நீண்டு செல்லும் தமிழ்ஒளியின் இலக்கியப் பயணம் நெடியது. 'கம்யூனிஸ்ட் கவிஞர்' என்றழைக்கப்பட்ட தமிழ்ஒளி 'நிலைபெற்ற சிலை' 'வீராயி' முதலான காவியங்கள் வாயிலாக சாதியத்திற்கு எதிராகவும் தொழிலாளர்களுக்கு ஆதரவாகவும் தனது கருத்தைப் பதிவு செய்துள்ளார்.

**'சிந்தின ரத்தம் உலரவில்லை எங்கள்**
**செந்தமிழ் வாழ்வு மலரவில்லை'**
**இந்தியை இங்கே அழைக்கின்றீர்கள்! - கூர்**
**ஈட்டியை நெஞ்சில் நுழைக்கின்றீர்கள்.**

என மொழிக்குக் குரல்தரும் தமிழ்ஒளியின் கவியும் நம் மனதில் உயர்ந்து நிற்கின்றது.

**கி.ராஜநாராயணன்**

கி.ரா.வைக் குறித்தும் அவரது படைப்புகள் குறித்தும் எப்பொழுது படித்தாலும் வாசிப்பு ஆவல் எழுந்து கொண்டே இருக்கும். கி.ரா. குறித்த அறம் அவர்களின் எழுத்தும் வாசிப்பு ஆர்வத்ததை மிகுதிப்படுத்திக் கொண்டே செல்கின்றது. கி.ரா.வின் பள்ளி வாழ்க்கை குறித்தும் கரிசல்காட்டு மக்கள் குறித்தும் கி.ரா.வின் மொழியிலேயே பதிவு செய்திருப்பது கி.ரா. நம்முடன் பேசுவது போன்ற உணர்வை விதைக்கின்றது. கி.ரா.வின் குடும்ப வாழ்வியல், படைப்பு வாழ்வியல், இசை வாழ்வியல், சமூக வாழ்வியல் என விரிந்த தளத்தைச் சுருக்கமாகவும் செறிவாகவும் தந்துள்ளது. நூலாசிரியர் கி.ரா.வின் கதைகளைக் கண்முன் உலவவிடுகின்றார். கி.ரா.வின் கதைகளை வாசித்தவர்களுக்கு இக்கதைகள் புரிதலை ஏற்படுத்தும். கி.ரா. கரிசலுக்கான எதிர்காலப் படைப்பாளர்களை உருவாக்கும் நோக்கிலும் படைப்பாள நண்பர்களுடன் உரையாடும் நோக்கிலும் உருவாக்கிய 'கதைசொல்லி' 'தாப்பு' முதலானவை எண்ணத்தக்கன. கரிசல் மண்ணை அசைத்துப் பார்த்தவர் கி.ரா. கி.ரா.வைக் குறித்த பதிவுகள் நம் மனதை அசைத்துப் பார்க்கின்றன.

நூற்றாண்டு கண்ட ஆளுமைகள் நால்வரையும் தன் எழுத்துத் திறத்தால் நம் மனதுள்ளும் நிறுத்துகின்றார் நூலாசிரியர் அறம். நூற்றாண்டு கண்ட ஆளுமைகளை நினைவு கூர்வதும் அவர்களை வாசிப்பதும் தமிழறம்.

●

**கட்டுரையாளர், இணைப்பேராசிரியர்,**
**தமிழ்த்துறை, அய்ய நாடார் ஜானகி**
**அம்மாள் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி**




25.04.2024 அன்று கன்னியாகுமரியில் என்சிபிஎச் நாகர்கோவில் கிளை, த.க.இ.பெ. மற்றும் நெய்தல் மக்கள் இயக்கம் இணைந்து நடத்திய புத்தகக் கண்காட்சியை சுற்றுலா துறை அலுவலர் து.காமராஜ் அவர்கள் திறந்து வைத்தார். இதில் குரும்பனை பெர்லின், தோழர். S.K.கங்கா, மாவட்ட காப்பாட்சியர் சிவ.சத்தியவள்ளி, அருட்பணி ஜான்சன், கன்னியாகுமரி சிறப்புநிலை பேரூராட்சித் தலைவர் குமரி ஸ்டீபன், கோவளம் வெனிஸ், முடியப்பன், Oeed பவுண்டேஷன் அறங்காவலர் ஜெயமதி ரோசாரியோ என்சிபிஎச் மண்டல மேலாளர் ஆர்.மகேந்திரன், கிளை மேலாளர் அ. பழனிவேல் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# நெஸ்லிங் வெளியீடாக
# உலகப் புகழ்பெற்ற சிறார் கதைகள்




₹ 80/-




₹ 140/-




₹ 99/-




₹ 99/-





₹ 99/-




₹ 99/-





₹ 50/-




₹ 110/-




₹ 105/-




₹ 95/-




₹ 50/-





₹ 65/-

**நெஸ்லிங் புக்ஸ் பப்ளிஷிங் அன்ட் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎ 044 - 26251968, 26258410, 48601884 | www.ncbhpublisher.in | email: nestlingbooks@gmail.com





# சங்க இலக்கியத்தில் யானை - குறியீட்டுப் படிமம்

ச.பொ.சீனிவாசன்

மனிதனுக்கும் இயற்கைக்குமான தொடர்பு பற்றிய வரலாறு மிகப் பழமையானது. இயற்கையின் படைப்பாகிய மனிதன் பன்னெடுங் காலமாக அதனோடு இயைந்த வாழ்க்கை வாழ்ந்துள்ளான். இயற்கையின் பிற படைப்புகளாகிய விலங்குகளையும், மரம், செடி, கொடிகளாகிய தாவரங்களையும், மலை, காடு, வயல், கடல் முதலிய நிலப் பிரிவுகளையும் சூரியன், சந்திரன், விண்மீன் முதலிய உயிரற்ற கோள்களையும் தன்னிடமிருந்து பிரித்துப் பார்க்க முடியாதவைகளாகவே கருதியுள்ளான். பழந்தமிழ் இலக்கியங்களான சங்க இலக்கியங்களும் பிற்கால இலக்கியங்களும் இவற்றைத் தெளிவாகக் காட்சிப்படுத்தியுள்ளன.

தன்னுணர்ச்சிப் பாடல்களான சங்கப் பாடல்கள், இயற்கையை வெறும் இயற்கையாக மட்டும் பார்க்காமல் அவற்றை அக மற்றும் புறமாந்தர் தம் உணர்ச்சி வெளியீட்டுக் களங்களாக அமைத்துக்கொண்டுள்ளன. இயற்கை உயிரினங்களும், பொருட்களும், இலக்கியத்தில் பல்வேறு வகையான கருத்து மற்றும் காட்சிப் புலப்பாட்டிற்கான அடித்தளங்களாக– குறியீட்டுப் படிமங்களாக அமைந்துள்ளன. இவற்றில் ‘யானை’ சங்க இலக்கியங்களிலும் பிற்கால இலக்கியங்களிலும் எவ்வாறெல்லாம் குறியீட்டுப் படிமமாக்கப்பட்டுள்ளது என்பதனை இக்கட்டுரையில் காண்போம்.

**குறியீட்டுப் படிமம்**

'படிமம்' என்பது ஒரு சொல்லோ, தொடரோ, பொருளோ, நிகழ்வோ, காட்சியோ ஏதேனும் ஒன்றின் வழியாக மனதில் ஏற்படுத்தும் பதிவாகும். படிமத்தை 'உரு' என்ற சொல்லாலும் குறிப்பிடுவர். படிமம் இரண்டு வகைப்படும். அவை (1). காட்சிப்படிமம் அல்லது காட்சியுரு (2) கருத்துப் படிமம் அல்லது கருத்துரு என்பனவாகும்.

ஒரு படைப்பாளி ஒரு காட்சியினைக் கவிதைப் பிம்பமாக்கித் தரும்பொழுது அது காட்சிப் படிமமாகிறது. எடுத்துக்காட்டாக "தூங்குகை ஓங்கு நடைய " என்ற சங்க இலக்கியத் தொடர், யானையின் உருவத்தையும் அதன் நடையையும் அழகாகச் சொற் சித்திரமாக்கித் தந்துள்ளது. இவ்வாறு ஒரு காட்சியை மட்டும்; கருத்து உள்ளீடு அற்ற மனப்பதிவாக்கித் தருவதையே காட்சிப்படிமம் அல்லது காட்சியுரு என்கிறோம். நடப்புக்காட்சி அல்லது நிகழ்வொன்றின் மூலம் ஒரு கருத்தினை உள்ளீடாகப் படிமமாக்குவது கருத்துப் படிமம் அல்லது கருத்துரு எனப்படுகிறது. உதாரணமாக பாரி மகளிராகிய அங்கவை சங்கவை இருவரும் பாடும் 'அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில்'; என்று தொடங்கும் புறநானூற்றுப்பாடல் (பா. எண். 112) அவலச்சுவையினை - இழப்பினைக் கருத்துப் பிம்பமாக்கித் தருகின்றது. பாரி மகளிரின் அவல உணர்வின் - வெறுமை உணர்வின் ஆழத்தைக் கபிலரின் பாரி பறம்பு மலை வளம் சுட்டும் பாடல்கள் உணர்த்துகின்றன. கபிலர் பாடல்களைப் படித்துவிட்டு, பாரி மகளிரின் பாடலைப் படிக்கும் பொழுது, எவ்வளவு மதிப்பை – வளத்தை இழந்துவிட்டு இவர்கள் பாடியிருக்கிறார்கள் எனும்போது அவலம் இங்கு கருத்துப்படிமமாகிறது.

1.

காட்சிப் படிமம் என்பது ஒருவகை மேம்போக்கான தாக்கத்தால் ஏற்படுவது. அது அழகியல் உணர்வோடு நின்று விடும். கருத்துப்படிமம் என்பது காட்சிப் படிமத்திலிருந்து ஒரு வளர்ந்த நிலையைக் குறிக்கும். இஃது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தவல்லது. 'குறியீடு' என்பது காட்சியும் கருத்தும் இணைந்த படிமம் நிரந்தரமாக அடையாளப்படுத்தப்படுவதைக் குறிக்கும். எனவே, குறியீடுகள் எல்லாம் படிமமாகவே இருக்கும். ஆனால், படிமங்கள் எல்லாம் குறியீடுகளாக இருக்கும் என்று சொல்ல முடியாது. இந்த அடிப்படையில் 'யானை' எவ்வாறு சங்க இலக்கியத்தில் குறியீட்டுப் படிமமாக்கப்பட்டுள்ளது என்பதை ஆராயலாம்.

**சங்க இலக்கியத்தில் யானை**

நிலப்பரப்பில் மனிதர்கள் - குறிப்பாகத் தமிழர்கள் காணும் விலங்குகளில் மிகப் பெரியது யானையே. சங்க இலக்கியத்தில், யானை பற்றிய செய்திகள், ஏறத்தாழ எழு நூற்றுக்கும்; (700) மேற்பட்ட இடங்களில் சுட்டப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலான இடங்களில் யானை, அரியது, பெரியது, வலிமையானது (ஆற்றல்), மதிப்புடையது (செல்வ வளமுடையது) என்பன போன்ற குறியீட்டுப் படிமங்களாகவே சுட்டப்பட்டுள்ளன. இவற்றை (1) யானைப்படை, (2) யானைப்போர், (3) களிறெறிந்து பெயர்தல் அல்லது கடக்களிறடக்கல் (4) யானை வாகனம், (5) யானைப்பரிசில் (6) யானை வலிமையின் - வளமையின் அளவுகோல் களிறு தரு புணர்ச்சி போன்ற பொருண்மைகள் வழி பழந்தமிழ் இலக்கியப்புனைவுகளில் காணலாம். சங்கப்பாடல்களில் நிலைப்படுத்தப்பட்ட இப்படிமம், பிற்கால இலக்கியங்களிலும், இன்றைய நடப்பு நிகழ்வுகள் வரை குறியீடாக்கப்பட்டு வருகின்றன.

**யானைப்படை**


ஒரு நாட்டின் பாதுகாப்பு என்பது அந்நாட்டின் படைபலத்தைப் பொறுத்தது. யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை எனும் நாற்படைகளுள் முதன்மை பெறுவதும் வலிமையானதும் யானைப்படையே. யானைப்படையின் பெருக்கமே பண்டைக் காலத்தில் ஒரு மன்னனின் வலிமைப் பெருக்கமாகக் கருதப்பட்டது. ஏது பயனும் இலாதவைகளைப் பட்டியலிடும் அறப்பளீச்சுர சதகம் என்னும் சிற்றிலக்கிய நூல் "குஞ்சரம் இல்லாத சேனை"யையும் சுட்டியுள்ளது. அதாவது யானை இல்லாத படை பயனற்றது என்றும் அடிப்படையில் பெரிய வெற்றி எதனையும் பெற்றுவிட முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளது. இனியவை நாற்பது 'யானையுடைய படைகாண்டல் முன் இனிதே' (பாடல் 4) என்று கூறுவதிலிருந்தும் யானைப்படையின் சிறப்பை அறியலாம்.

பதிற்றுப்பத்தின் ஏழாம்பத்தில் செல்வக்கடுங்கோ வாழியாதனின் படைச் சிறப்பைக் கூறும் கபிலர்,

> "சேண்பரல் முரம்பின் நீர்ம்படைக் கொங்கர்
> ஆபரந் தன்ன செலவிற்பல
> யானை காண்பல் அவன் தானை யானே"
>
> ( பதிற்;77)

2.

என்று யானைப்படையின் பெருக்கத்தைத் தனித்துக் குறிப்பிடுகின்றனர். சேரனின் பிற (குதிரை, தேர், காலாட்படை) படைப் பெருக்கத்தையும் சேர்த்துச் சுட்டிக்காட்டும் கபிலர், யானைப்படையை மட்டும் தனித்துச் சொல்வதோடு, அவற்றின் எண்ணிக்கையையும் அறிய முடியவில்லை என்கின்றார். இதன்மூலம், பகைவர்கள் சேரனோடு போரிட்டால் தோற்றுப் போவார்கள் என்பதும், யானைப்படை மிக வலிமையானது என்பதும் கருத்துப் படிமமாக்கப்பட்டுள்ளது.



**யானைப்போர்**

இருநாட்டுப் படைகளுக்கிடையே போர் நடக்கும்பொழுது அதனைக் காண்பதே அரிது. அதுவும் யானைப்போர் காண்பது அதனினும் அரிது. காரணம், யானைப் போரினைக் காண்பது ஆபத்து நிறைந்தது. அச்சம் தரக்கூடியது. அதனால் தான் திருவள்ளுவர், தன் கையில் பணத்தை வைத்துக் கொண்டு ஒரு செயலைச் செய்பவனுக்கு, “குன்றேறி யானைப்போர் கண்டற்றால்” (குறள்:758) என்று உவமைப்படுத்துகின்றார். எனவே, யானைப்போர் செய்வது அருஞ்செயலாகக் கருதப்பட்டுள்ளது. இவ்வருமையின் காரணமாக யானைப் போரானது “களிறுடைப் பெருஞ்சமம்” – (பதிற் -76) என்று சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது.

யானைப்போர் காண்டற்கரியது என்ற செய்தி சங்க இலக்கியங்களில் பல இடங்களில் சுட்டப்பட்டுள்ளது.

**களிறெறிந்து பெயர்தல் அல்லது கடக்களிறடக்கல்:**

போரில் பகை நாட்டுப் படைகளை எதிர்கொள்வது வெல்வது பெருஞ்சிறப்பாகக் கருதப்பட்டது. ஓர் ஆண்மகன் தேர்ப்படை, குதிரைப்படை, காலாட்படை, மூன்றையும் எதிர்கொள்வதை விட யானைப்படையை எதிர்கொள்வதே பெருமைக்குரியதாக இருந்துள்ளது. பொன்முடியார் எனும் சங்கப்புலவர் ‘ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே’ (புறம்:312) என்று தொடங்கும் பாடலில்,

> “ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
> களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே”

என்று குறிப்பிடுவதிலிருந்து உணரலாம்.

சிலப்பதிகாரத்தில் கோவலனின் உயர்ந்த பண்புகளையும், மறமாண்பையும் உணர்த்த வந்த இளங்கோவடிகள்,

> “பிடர்த்தலை இருந்து பெருஞ்சினம் பிறழாக்
> கடக்களிறு அடக்கிய கருணை மறவ!”
> (சிலம்பு. அடைக். 15:52-53)

என்று அவன் வீரத்தினைக் காட்ட கடக்களிறு அடக்குதலைக் காட்டுகின்றார். இதன் மூலம், யானையை வெல்லுதல் அல்லது அடக்குதல் எத்தகைய சிறப்பிற்குரியதாக இருந்துள்ளது என்பதனையும் யானை பற்றிய குறியீடு மக்கள் மனதில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதனையும் அறிந்து கொள்ளலாம்.

யானையைப் போர்க்களத்தில் வெல்லுதலை, ‘களிறெறிந்து எதிர்த்தோர்பாடு’, ‘களிற்றுடனிலை’ என்ற இரு தும்பைத் துறைகள் அடிப்படையாகக் கொண்டுள்ளன என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

**யானை வாகனம்**

எல்லாத் தமிழ்த் தெய்வங்களுக்கும் வாகனம் ஒன்றுண்டு. தேவர்களுக்குத் தலைவனான இந்திரனுக்குரிய வாகனமாக “ஐராவதம்”(வெள்ளையானை) இலக்கியங்களில் சுட்டப்பட்டுள்ளது. யானை விலங்குகளில் பெரியது, வலிமையானது. இந்திரன் தேவர்களுக்கெல்லாம் தலைவன்; தன்னிகரில்லாதவன் என்பதை அடையாளப்படுத்துவதற்காகவே யானையை அவனுக்குரிய வாகனமாக்கியுள்ளனர். இதனால் இந்திரனின் வலிமையும், வளமையும், பெருமையும் வெளிப்படுமாறு படிமமாக்கப்பட்டுள்ளது. தமிழ் மன்னர்கள் உலா செல்லும் பொழுதும் யானையை வாகனமாகப் பயன்படுத்தியுள்ளனர். இன்றைய நிலையில் தெய்வங்கள் உலா செல்வதும் கோயில் விழாக்களில் அணி வகுத்து நிறுத்துவதும் யானை வாகனமே.

**யானைப் பரிசில்**

சங்க காலத்தில் மன்னர்கள், புலவர்களைப் பெரிதும் பேணிக் காத்து வந்துள்ளனர். புலவர்களும் தம்மைப் புரக்கும் வேந்தர்களைப் பாடி மகிழ்வித்ததோடு அல்லாமல் அவர்கள் தவறு செய்யும்பொழுது தட்டிக்கேட்கும் தகைமை உடையவர்களாகவும் இருந்துள்ளனர். மன்னன்

தன்னைப் பாடி மகிழ்விக்கும் புலவர்களுக்குப் பொன்னும், பொருளும் கொடுத்து பரிசில் வழங்குவான். அவன் வழங்கும் பரிசில்களில் மிகப்பெரியது "யானைப் பரிசில்" ஆகும்.

வறுமையோடு வரும் புலவர்க்கு யானைப்பரிசிலா? என்ற கேள்வி தற்காலத்தில் எழுப்பப்படுகிறது. ஆனால் "யானைப் பரிசில்" என்பது வெறும் யானையை மட்டும் தருவதன்று. யானையோடு ஏவலாட்களும், பல ஊர்களும் பராமரிப்பிற்கான செலவும் தரப்படும். புலவர்களுக்கும், பாணர்களுக்கும், கூத்தர்களுக்கும், போர்வீரர்களுக்கும் களிற்று யானைகள் (ஆண் யானை) பரிசிலாக வழங்கப்பட்டுள்ளன. பாடினி, விறலியர் போன்றோர்க்குப் பிடியானை (பெண்யானை) வழங்கப்பட்டதாக பதிற்றுப்பத்து (43), புறநானூறு(177), அகநானூறு(311), மதுரைக் காஞ்சி (749 ரூ 752) போன்ற நூல்கள் குறிப்பிடுகின்றன.

**யானை - வலிமையின் வளமையின் அளவு கோல்**

சங்கத் தமிழர் யானையை வலிமையின் - வளமையின் அடையாளமாகக் கருதியுள்ளனர். "காலாழ் களரில் நரியடும் கண்ணஞ்சா வேலாள் முகத்த களிறு" (குறள் -500) என்று திருவள்ளுவரும் வலிமையான களிறு சேற்று நிலத்தில் புதைந்தால் வலிமையற்ற நரி கூட வென்றுவிடும் என்று கூறுகின்றார். யானையை வெல்வதே உண்மையான வீரமாகக் கருதப்பட்ட காலமாகையால் இதில், யானை, வலிமையின் அளவு கோலாக்கப்பட்டுள்ளதை அறிகிறோம். சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றான பரணி இலக்கியத்திற்கு இலக்கணம் கூறவந்த இலக்கண விளக்கப்பாட்டியல்,

> "ஆனை ஆயிரம் அமரிடை வென்ற
> மானவனுக்கு வகுப்பது பரணி"

என்கிறது.போர்க்களத்தில் ஆயிரம் ஆனைகளை வெல்லும் வீரனைச் சிறப்பித்துப் பாடுவதே பரணி இலக்கியம். இது யானை - வலிமையின் வளமையின் அடையாளமாகக் கருதப்பட்டதைத் தெளிவாகக் காட்டுகின்றது.

**களிறுதரு புணர்ச்சி**

புற இலக்கியங்களில் மட்டுமின்றி அக இலக்கியஙகளிலும் யானைக்கு முக்கியத்துவம் உண்டு. பாலதாணையால் ஒத்த தலைவனும் தலைவியும் இணையும் இயற்கைப் புணர்ச்சிகளுள் "களிறுதரு புணர்ச்சி" சிறந்த ஒன்றாகக் கருதப்பட்டுள்ளது. ஆரிய அரசன் யாழ்ப் பிரகதத்தனுக்குத் தமிழ் (காதல்) அறிவிக்கப் பாடிய குறிஞ்சிப்பாட்டு, களிறு தரு புணர்ச்சியாக மலர்ந்து அறத்தொடு நிற்றல் துறையில் அமைந்தது. யானையைத் தனியொருவனாக விரட்டி, தலைவி மற்றும் தோழியின் நட்பைப் பெற்றதாகப் பாடப்பட்டுள்ளது அப்பாட்டு.

கபிலர் குறிஞ்சிப்பாட்டில்,

> "அருவிடர் அமைந்த களிறு தருபுணர்ச்சி

என்று அவரே குறிப்பிடுகின்றார். யானையின் வலிமை அடையாளம் தலைவனின் வீரத்திற்கும் காதலுக்கும் பெருமை சேர்க்கிறது. இதற்கும் மேலாக தலைவனையே யானையாக உள்ளுறைப் பொருளில்இ

> "நெற்கொள் நெடுவெதிர்க்கு அனந்த யானை
> முத்துஆர் மருப்பின் இறங்குகை கடுப்ப"

என்று குறிஞ்சிப்பாட்டில் தோழி குறிப்பிடுவது யானை அகமரபிலும் குறியீடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதை அறியலாம்.

மேற்கண்டவற்றின் மூலம் "யானை" என்பது ஒரு விலங்கு என்ற நிலைக்கும் மேலாக அது

| | |
|---|---|
| அரியது | - பெரியது |
| வலிமையானது | - ஆற்றல் வாய்ந்தது. |
| மதிப்புடையது | - வளமுடையது |

என்பனவற்றின் அடையாளமாக – குறியீடாக எல்லா நிலைகளிலும் மனப்பதிவாக்கப்பட்டுள்ளது.

யானை, மனிதன் காணும் விலங்குகளில் பெரியதாகவும், அரியதாகவும் உள்ளதால் அதன் பிரமிப்பு, அவனுடைய கலைகளிலும் இலக்கியங்களிலும், ஏன் சிந்தனைகளிலும், செயல்பாடுகளிலும் கூட மனப்பதிவாக இயல்பாக வெளிப்படுகின்றது. இன்றைய தொலைக்காட்சி விளம்பரத்தில் 'பெவிக்கால் பிணைப்பை' யானையால் கூட பிரிக்க முடியாது என்று வரும் விளம்பரக்காட்சி, 'யானை' பற்றிய குறியீடு மக்களின் மனப்பதிவில் காலந்தோறும் சுழன்று கொண்டே வருவதை வெளிப்படுத்துகின்றது.

மக்களின் இத்தகைய மன வெளிப்பாடுகள், பண்பாட்டு வடிவங்களாக - அடையாளங்களாக - குறியீடுகளாக நிலைநிறுத்தப்படுகின்றன. அவ்வாறு நிலை நிறுத்தப்பட்ட விலங்கினங்களில் "யானை" தமிழர் பண்பாட்டோடும், நாகரிகத்தோடும் பின்னிப் பிணைந்து பிரிக்கமுடியாத ஒன்றாகிவிட்டது.

**துணை நூற்கள்**

1. சங்க இலக்கியங்கள்
2. சிலப்பதிகாரம்
3. திருக்குறள்
4. கலிங்கத்துப்பரணி
5. தொல்காப்பியம்
6. புறப்பொருள் வெண்பாமாலை

கட்டுரையாளர், இணைப் பேராசிரியர்,
தமிழ்த்துறை, பல்கலைக்கழகக் கல்லூரி,
திருவனந்தபுரம்.

கட்டுரை




# மரபுத்தொடர்களும் கணினிவழி மொழிபெயர்ப்புச் சிக்கல்களும்

நா. சந்திரசேகரன்

*முன்குறிப்பு: இக்கட்டுரையின் அடிப்படைத் தரவு பெக்கி மோகன் என்பவர் எழுதிய Wanderers Kings Merchants ( The Story of India through its Languages) என்ற நூலின் மூலநூலாசிரியர் பயன்படுத்திய மரபுத்தொடர்கள். அந்நூலின் தமிழ் மொழிபெயர்ப்பைச் செம்மையாக்கம் செய்து பதிப்பிக்கும் போது பெயர்ப்பாளர் நோக்கில் அடையும் சிக்கல்களாக இக்கட்டுரை அமைகிறது. ஒரு தொடக்கநிலை மொழிபெயர்ப்பாளர் அதுவும் ஆங்கிலத்தைச் சிறப்புப் பாடமாகக் கொள்ளாத, அதேசமயம் ஆங்கிலம் அறிந்த தமிழ்க் கல்வியாளர் தன்னார்வத்தில் மொழிபெயர்க்கையில், சில இடங்களில் கணினிவழியும் மொழிபெயர்த்துள்ளதில், இம்மரபுத் தொடர்களை எதிர்கொண்ட முறைமையில் அடைந்துள்ள சிக்கல்களே இக்கட்டுரையின் பொருண்மையாகும். கூடவே மூல நூலாசிரியரின் ஆங்கிலப் புலமையும் வெளிப்படுகிறது.*

ஒரு சொல் மற்றொரு சொல்லையும் இணைத்துக் கொண்டு தொடராகி, அதன் வெளிப்படையான பொருளை உணர்த்தாமல், தொடர்ந்த புழக்கப் பயன்பாட்டில் மற்றொரு குறிப்புப் பொருளினை உள்ளடக்கி, ஒரு குறியீடாய் நிற்கும்போது அது மரபுத்தொடர் என்றாகிறது. இலக்கணிகள் இதனை மொழி மரபு அல்லது மொழி வழக்கு அல்லது இலக்கணைத் தொடர் அல்லது சொலவடை என்கின்றனர். அது ஒரு குறிப்பிட்ட இடம், குறிப்பிட்ட நிகழ்வு, பாத்திரம், அறக்கருத்து,

முரண் சொல்லிணை முதலியன தனிக்கவனம் பெற்று, அதே இடத்திலும் ஏனைய இடங்களிலும் தொடர் வழக்காற்றில் அடுத்தடுத்த தலைமுறையினரிடம் வழக்காறும்போது குறியீட்டுத்தன்மை பெற்றுவிடுகிறது.

காட்டாக, 'ஊர் கூடித் தேர் இழுத்தல்', அவன் அவளுக்கு 'அல்வா கொடுத்துட்டான்', 'பொருள வச்சிருக்கியா?', 'மதுரைக்கு வழி வாயில(கூகுள்ல?)' என்பவை மரபுத்தொடர் என்றறியாதவர்களுக்கு நேர்பொருளே கிடைக்கும். மரபுத்தொடராகக் கொண்டவர்கள் முறையே 'மக்கள் எந்த ஒரு சமூகச்செயலையும் ஒன்றுகூடிச் செய்தல்', 'ஏமாற்றுதல்', 'கொலை செய்தலுக்கான கருவியைக் கேட்டல்', 'எதையும் கேட்டுத் தெளிதல்' என்று இடம் சுட்டிப் பொருண்மை *(Contextual Semantic)* கொள்வர்.

பொதுவாக மொழிபெயர்ப்பில் யார் ஒருவருக்கும், அவர் மூலநூல் மொழி மற்றும் தருமொழியில் புலமைபெற்றவராய் இருந்த போதிலும் கூட, எழும் அடிப்படைச் சிக்கல் மூலநூலில் பயன்படுத்தப்பட்டுள்ள மரபுத் தொடர்களிலிருந்து தான் தொடங்குகிறது. ஏனென்றால் அவை அம்மொழியின் பண்பாட்டுத் தொடர்களாகும். மூல நூலில் பண்பாட்டுச் செறிவு மரபுத் தொடர்களை அடையாளம் காண்பதே தொடக்க நிலை பெயர்ப்பாளருக்கு கடும் சவால் விடும் பணியாகும். மற்றொரு சிக்கல் மூலநூலில் உள்ள மரபுத் தொடரைத் தருமொழியில் தரும் போது மரபுத் தொடராகவே தர இயலுமா என்பது. மொழிபெயர்ப்பு விதிகளை வரையறுத்த தியோடர் சேவரி 'ஒரு மொழிபெயர்ப்பு மூல நூலின் சொற்களை அப்படியே தரவேண்டும்; அல்லது தரவேண்டியதில்லை. படிப்பதற்கு மூல நூலைப் போலவே இருக்க வேண்டும்; அல்லது மொழிபெயர்ப்பு போலவே இருக்க வேண்டும். மூலநூலின் மொழிநடையைப் பிரதிபலிக்க வேண்டும்; அல்லது மொழிபெயர்ப்பாளரின் நடையைப் பெற்றிருக்க வேண்டும். மூல நூலின் காலத்தைச் சேர்ந்ததைப் போல இருக்க வேண்டும்; அல்லது மொழிபெயர்ப்பாளரின் காலத்தைச் சேர்ந்ததைப் போல இருக்க வேண்டும். ஒரு மொழிபெயர்ப்பு மூல நூலைக் கூட்டவோ குறைக்கவோ செய்யலாம்; அல்லது என்றுமே கூடாது. ஒரு செய்யுள் மொழிபெயர்ப்பு செய்யுளில் தான் இருக்க வேண்டும்; அல்லது உரைநடையில் தான் இருக்க வேண்டும்' என்கிறார்(வை.சச்சிதானந்தன் **1985:179**). மரபுத்தொடர்கள் விடயத்தில் மேற்படி ஆறு எதிரிடை விதிகளும் அவ்வத் தொடர்களுக்கேற்ப சார்த்திச் செயல்படும் சாத்தியப்பாடுகள் உள்ளன. மூல நூலில் உள்ள மரபுத்தொடர்கள் அம்மூல நூலுக்கு நுணுக்க அழகியலைத் *(Subtle Aesthetics)* தருகின்றன. தருமொழியில் மரபுத் தொடராகப் பெயர்க்க முடியாத போது மொழிபெயர்ப்பின் நுணுக்க அழகியல் சிதைகிறது. மரபுத்தொடர் என்று அறியாமல் பெயர்த்துவிட்டால் மொழிபெயர்ப்பின் நம்பகத்தன்மை *(Fidelity)* யும் இழப்புக்குள்ளாகும்.

பண்பாட்டுக் கூறுகளை வெளிப்படுத்தாத மரபுத் தொடர்களை அல்லது மொழித்தொடர்களை நேரடியாக எந்திரகதியில் பெயர்த்துவிட முடியும். இன்றைய நிலையில் பலரும் கணினி வழி மொழிபெயர்ப்பில் சாத்தியப்படுத்துகின்றனர். (அச்சடித்த அகராதிகளை இப்போதெல்லாம் மொழிபெயர்ப்பில் ஈடுபடும் எவரும் எடுத்துப் புரட்டுவதில்லை.) காட்டாக பின்வரும் ஆங்கில மொழித்தொடர்களைக் கணினி வழி கூகுள் மொழிபெயர்ப்பு நொடிப்பொழுதில் பெயர்த்துவிடுகிறது. *'in order to'* என்பதை ' பொருட்டு, காரணமாக' என்றும்,' *as long as'* என்பதை 'வரை' என்றும், *'according to'* என்பதை '...படி' என்றும், *'all of a sudden'* என்பதைத் 'திடீரென்று' என்றும் தந்துவிடுகிறது. வாக்கியக் கட்டமைவிற்கேற்ப இவற்றை அப்படியேவாகவோ அல்லது சற்று மாற்றியோ ஏற்கின்றனர். ஆனால் பண்பாட்டுச் செறிவுள்ள மரபுத் தொடர்களைக் கணினி வழி பெயர்த்தலில் போதாமைகளைக் காணமுடிகிறது. பெக்கி மோகன் அமெரிக்க ஆங்கிலப் புலமையோடு கல்வி-பணி நிமித்தமாக கரீபியன் தீவுகள், வடகனடா, அமெரிக்கா, இந்தியா எனப் பன்னாட்டு வாழ்க்கையினூடாகப் பெற்ற பட்டறிவு அவரது மொழி வழி வெளிப்படுகிறது. அவர் பயன்படுத்தியுள்ள மரபுத்தொடர்களைக் கணினிவழி பெயர்த்தால் பெரும்பாலும் தவறாக வருகிறது.

கீழே வருவன முதலில் கணினி வழியும் பின்னர் இடம் சுட்டிப் பொருண்மையிலும் தருவிக்கப்படுகின்றன.

- *to delve into* / ஆராய வேண்டும் / கடும் முயற்சியுடன் அதன் 'மறைபொருளைத் துருவியடைதல்' எனல் வேண்டும்.
- *icing on the cake* / அழகுக்கு அழகு சேர்ப்பது- இடம்சுட்டிப் பொருண்மையில் உள்ளது. இதே தமிழ் பெயர்ப்பை கூகுளில் இட்டு ஆங்கிலத்தில் கேட்டால் நேர்பொருளான *'Adding beauty to beauty'* என்கிறது.
- *a watershed moment* / ஒரு நீர்நிலை தருணம் / 'திருப்புமுனை தருணம்' ஆகும்.
- *slip under the radar* / ரேடாரின் கீழ் நழுவும் / 'யாருக்கும் தெரியாமல் காணாமல் போதல்' எனக் கொள்ள வேண்டும்.
- *to iron out their differences* / அவர்களின் வேறுபாடுகளை களைவதற்கு- என இடம்சுட்டிப் பொருண்மையில் உள்ளது. இதே தமிழ் பெயர்ப்பை கூகுளில் இட்டு ஆங்கிலத்தில் கேட்டால் *to iron out their differences* என்று இடம் சுட்டிப் பொருண்மையிலேயே வருகிறது.

- *It was a thought that remained on the back-burner* / இது ஒரு எண்ணமாக இருந்தது / ஒரு எண்ணம் நெஞ்சத்தில் கனன்று கொண்டு இருந்தது - எனத் தமிழில் தரலாம். நெஞ்சக்கனல் எனவும் கூறலாம்.
- *linguists come riding by on our white chargers* / மொழியியலாளர்கள் எங்கள் வெள்ளை சார்ஜர்களில் சவாரி செய்கிறார்கள் / *white chargers* என்பதை மூலநூலாசிரியர் 'வெண் குதிரைகள்' என்று சித்திரிக்கிறார்.
- *Sanskrit find its way into literary malayalam, thanks to the Namboodiri Brahmins* / நம்பூதிரி பிராமணர்களுக்கு நன்றி, சமஸ்கிருதம் இலக்கிய(ம்) மலையாளத்தில் அதன் வழியைக் கண்டறிந்தது / *thanks to* என்பது மரபுத்தொடர். அதனை நேர்பொருளில் ஆங்கிலத்தில் பயன்படுத்துவதில்லை; *'on account of , because of'* என்ற தொடர்களின் பொருளில் பயன்படுத்துகின்றனர். எனவே இங்கு 'நம்பூதிரி பிராமணர்களால்' என வரவேண்டும்.
- *barely steering clear of angering Aurangazeb* / ஔரங்கசீப்பைக் கோபப்படுத்துவதைத் தவிர்க்க முடியவில்லை. இதில் *'steering clear of '* என்பது மரபுத்தொடர். அது *'take care to avoid , keep away from'* என்ற தொடர்களின் பொருளில் வரவேண்டும். 'ஆத்திரத்திலிருக்கும் ஔரங்கசீப் முற்றிலும் புறமொதுக்கப்பட்டார்' என வரவேண்டும்.
- *moving on greased wheels* / தடவப்பட்ட சக்கரங்களில் நகரும் / *to improve an essential part of an organization/* 'ஒரு அமைப்பின் இன்றியமையாத பகுதியை மேம்படுத்த' என்ற பொருளில் வரவேண்டும். பெக்கி மோகன் *grease the wheels/ oil the wheels* என்ற மரபுத்தொடரைச் செயப்பாட்டுவினை வடிவத்தில் சற்றே மாற்றிப் பயன்படுத்தியுள்ளார். இவ்வாறு பல இடங்களில் செய்துள்ளார். இதனால் சில மரபுத்தொடர்களை அடையாளம் காணலில் சிக்கல்கள் எழுகின்றன.
- *game of cat and mouse* / பூனை மற்றும் எலி விளையாட்டு/ இம்மரபுத்தொடர் கொடூர மனதை *(cruel behaviour)*க் குறிப்பிட பயன்படுத்தப்படுகிறது.
- *on the cards* / அட்டைகளில் / 'நடக்க வாய்ப்புள்ளது' என வரவேண்டும்.
- *edge of the wedge* / ஆப்பு விளிம்பு / 'சிறுமாற்றம் பெரிய அளவுக்கு வித்திட்டது' என வர வேண்டும்.
- *the butt of a lot of humor* / நிறைய நகைச்சுவையின் பிட்டம் / *butt of a joke* என்ற மரபுதொடர் அவ்வாறு மாற்றப்பட்டுள்ளது. 'நகைப்பிற்கிடமாதல்' என வரவேண்டும்.
- *tide over* / அலைமேல் / 'ஆத்திர அவசரத்தில் உதவுதல்' பொருளில் வரவேண்டும்.
- *tide can turn* / அலை மாறலாம் / *tide will turn* என்பதில் துணைவினையை மாற்றியுள்ளார்; 'தலைகீழ் திருப்பம்' என்று பயன்படுத்த வேண்டும்.
- *cheek by jowl* / கன்னத்தில் கன்னங்கள் / அவர்கள் சிறிய அறையில் 'கடும் நெருக்கத்தில்' வாழ்ந்தார்கள் என்பதுபோல் வர வேண்டும்.
- *put it under the lense* / லென்ஸின் கீழ் வைக்கவும் / 'தீவிர சோதனை' என்பதாகும்.
- *to hedge his bets* / அவரது சவால்களை பாதுகாக்க / 'தவறு/தோல்வியைத் தடுக்க' என்பதாகும்.
- *creme de la crème* / இது *best of the best* என்பதற்கு இணையான பிரெஞ்சு வழக்காறு. தமிழில் 'ஆகச் சிறந்த' 'செம செம' எனத் தரலாம்.
- *ring a bell* / மணியை அடிக்கவும் / 'நினைவூட்டல்' ஆகும்.
- *piece meal approach* / துண்டு உணவு அணுகுமுறை, துண்டு துண்டான அணுகுமுறை / 'தனித்தனிக் கட்டமாய்ச் செய்தல்' என்பதாகும்.
- *cemented the bond* / 'பிணைப்பை உறுதிப்படுத்தினார்' என்று இடம்சுட்டிப் பொருண்மையிலேயே தருகிறது. தமிழிலிருந்து இதையே ஆங்கிலத்தில் கேட்டால் *'Confirmed the bond'* என்கிறது.
- *relatively light* / ஒப்பீட்டளவில் ஒளி / 'ஒப்பீட்டளவில் குறைந்த' எனல் வேண்டும்.
- *snowballed into something* / எதோ பனிப்பொழிவு, எதோ பனிப்பந்து / திடீரென 'ஊதிப் பெரிதாகுதல்' என்பதாகும்.
- *a bit off the curve* / வளைவிலிருந்து சற்று விலகி / *Be ahead of the curve* (மாற்றி சிந்தி/ மாற்றி யோசி) என்ற தொடரை மாற்றியுள்ளார். 'மாற்றிச் சிந்திக்காமல்' எனலாம்.
- *bottom out* / கீழே வெளியே / 'கடும் சரிவு' என்று வர வேண்டும்.

இவ்வாறு பெக்கி மோகன் பயன்படுத்தியுள்ள மரபுத்தொடர்கள் பல்வகையினதாக உள்ளன. அவற்றில் இரண்டைத் தவிர அனைத்தும் கணினி வழி பெயர்க்கையில் நேர்பொருளைத் தருகின்றனவே தவிர மரபுத் தொடருக்கான குறியீட்டுப் பொருளைத் தரவில்லை. அவ்விரண்டையும் மறுதலையாகக் கூகுளில் கேட்டால் ஒன்று மட்டும் ஆங்கிலத்தில் அப்படியே வருகிறது. மொழிபெயர்ப்பவருக்கும் கூட மரபுத்தொடர் என்றறிய முடியாதபடி பல மரபுத்தொடர்களை மாற்றி அல்லது சற்றே திரித்து பயன்படுத்தியுள்ளதால் சிக்கல்கள் எழுகின்றன. ஆனால் இன்றைய நிலையில் ஆங்கிலத்தைப் பொறுத்த வரை கூகுள் திரிந்த மரபுத் தொடர்களை உள்ளீட்டால் அவற்றுக்கான வழமையான மரபுத்

தொடர்களையும் இடம்சுட்டிப் பொருண்மைகளையும் தந்துவிடுகின்றன. ஆனால் பெயர்ப்பவருக்கு மரபுத்தொடர்களை இனம் காணும் அறிவு கட்டாயம் தேவைப்படுகிறது.

கணினிவழி தமிழ் மரபுத் தொடர்களை ஆங்கிலத்திற்குப் பெயர்ப்பதில் ஆரம்பக் கட்டம் கூட தாண்டவில்லை. கட்டுரையின் தொடக்கத்தில் சுட்டிய மரபுத்தொடர்களை கூகுள் நேர்பொருளில் பெயர்க்கிறது. அவை பின்வருமாறு : 'ஊர் கூடித் தேர் இழுத்தல்-*Chariot pulling by village gathering*', அவன் அவளுக்கு 'அல்வா கொடுத்துட்டான்- *He gave her Alva*', 'பொருள வச்சிருக்கியா?-*Is the material contained?*', 'மதுரைக்கு வழி வாயில(கூகுள்ல)?-*Madurai is on the way*'. இவற்றிலும் இறுதியில் உள்ளதில் 'வாயில' என்பதன் இணைச்சொல் இல்லை. *Way to Madurai is in mouth*' என்று வரவேண்டும்.

சங்க இலக்கியப் புறநானூறு அடிகள் பல மொழிகடந்து பலநாடுகளுக்கு தமிழ் மரபுத்தொடர்களாய்ப் பரவியுள்ளன; 'யாதும் ஊரே யாவரும் கேளிர்', 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்ற கணியன் பூங்குன்றனார் பாடலடிகள் சான்றாகும். இதனை ஆங்கிலத்தில் கூகுள் வழி பெயர்த்தால் முறையே '*Everybody listens*', '*It's a good and bad week*' என்கிறது. நவீனத் தமிழ் நடை முன்னோடி பாரதியார் படைத்த பல மரபுத்தொடர்களில் 'அக்னி குஞ்சு' என்பது பலராலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதனை ஆங்கிலத்தில் கூகுள் மொழிபெயர்ப்பு செய்தால் '*Agni Chuju*' என்று ஒலியனில் பெயர்க்கிறது; அவரது 'காட்சிப் பிழை' என்ற தொடரை '*Display error*' என்று நேரடிப் பொருளில் பெயர்க்கிறது. 'துன்பக்கேணி' என்பது பாரதியார் தொடங்கி புதுமைப்பித்தன், வண்ணதாசன் என்று தொடர்ந்து எழுத்தாளர்கள் புழங்கும் தொடர்; இதனை கூகுள் மொழிபெயர்ப்பு '*suffering*' என்று 'கேணி'க்குரிய பொருண்மையின்றி 'துன்பம்' மட்டும் தருகிறது; ஆனால் இது கரும்பு, தேயிலைத் தோட்ட வேலைகளுக்கு ஒப்பந்தக் கூலிகளாகப் போனவர்களின் குறிப்பாகப் பெண்களின் துயரத்தைக் குறிக்கும் தொடராக இடம்சுட்டிப் பொருண்மையில் மாறிவிட்டது. மொழிபெயர்ப்பாளர்களுக்கு மேற்படி எழுத்தாளுமைகளின் இலக்கிய அறிமுகம் இல்லாது போனால் 'துன்பக்கேணி' என்பது 'துன்பம்' என்றே வரும்.

இதேபோல் பெக்கி மோகன் '*Middle Passage*'(P.6) என்றொரு தொடரைப் போகிறபோக்கில் பயன்படுத்திச் செல்கிறார். இது ராபர்ட் ஹைடன் (*Robert Hyden*) என்பவர் எழுதிய பாடல். (*Voyage through death to life upon these shores*/ கரைகளுக்கிடையில் மரணத்தினூடாக வாழப் பயணித்தல்). அது ஐரோப்பாவிலிருந்து கப்பலில் சென்ற ஐரோப்பியர்கள் ஆப்பிரிக்காவிலிருந்து கருப்பின அடிமைகளை வாங்கி மேற்கிந்திய, கரீபியன் தீவுகளுக்கு கரும்புத்தோட்ட வேலைகளுக்கு விற்றுவிட்டு, ஐரோப்பாவிற்குக் கரும்புச் சர்க்கரையை எடுத்துப்போன, கருப்பின அடிமைகளுக்கு நேர்ந்த அவலம் பற்றிச் சித்திரிக்கிறது. கருப்பின அடிமை மனிதர்களைக் கொண்டே துடுப்பசைத்து நீந்தும் பெரிய பாய்மரக்கப்பல்களில் கருப்பின அடிமை மக்களைக் கொண்டு செல்கையில் பசி, பிணியால் இறப்போரை நடுக்கடலில் தூக்கி எறிந்து செல்லும் துயரத்தைச் சித்திரிக்கும் பாடலாகும் *Middle Passage*. இது அவர்கள் இலக்கிய வரலாற்றில் நிலைத்த இடம் பிடித்துள்ளது. இந்த வரலாறு தெரியாமல் மொழிபெயர்த்தால் 'நடுத்தரப் பாதை' என்று கூகுள் போலத்தான் பெயர்க்கமுடியும். 'நடுக்கடலிடை மரணப்பாதை' என்று சுட்டி, அடிக்குறிப்பில் அதனை 'துன்பக்கேணி' போல என்று விளக்கிச் சொல்ல வேண்டும். பெக்கி மோகன் இது போன்று புகழ்பெற்ற இலக்கியத் தொடர்கள், திரைப்படப்பெயர்கள், நாட்டார் வழக்குப் பாத்திரங்கள், தொன்மங்கள் முதலியவற்றை ஆய்வுப்போக்கினூடாக அவற்றை விளக்காமல் குறிப்பளவில் பயன்படுத்திச் செல்கிறார். அவை தேர்ந்த ஆங்கில வாசகருக்கு இயல்பாய்த் தோன்றும். அவை பற்றிய தெளிவு பெயர்ப்பாளருக்குத் தேவைப்படுகிறது.

**பின்வரும் சான்றுகளைக் காண்க:**

- ஓரிடத்தில் *the strong sun begins to fade (P.182)* என்ற தொடரை வாக்கியத்தில் வைத்துள்ளார். இது அல்லென் ப்ரூஸ் (*Allen Bruce*) எழுதி புகழ்பெற்ற பாப் இசைப்பாடகர் விட்னி ஹௌஸ்டன் (*Whitny Houston*) என்பவரது மேடைப்பாடல் '*I wanna dance with sombody*' யில் இடம்பெற்ற '*the sun begins to fade*' தொடர் ஆகும். பெயர்ப்பாளருக்கு அவற்றின் இடம்சுட்டிப் பொருண்மை தோன்றாமல் வெறும் வாக்கியத்தொடர்களாக மட்டும் தோன்றினால் பெயர்ப்புப் பிரதி மதிப்பிழக்கும்.
- '*linguistic Pied Piper*'(P.184) இதனை கூகுள் 'மொழியியல் பைட் பைபர்' என்கிறது. ஆனால் *Pied Piper* என்பது ஜெர்மன் நாட்டு ஹேமலின் நகரில் 1284இல் மிகுந்த எலித்தொல்லைகள் இருக்க அதைப் பிடிக்க ஒருவன் பல வண்ண உடைகளுடன் தலையில் குல்லா கையில் ஊதுகுழலுடன் வந்து எலிபிடிப்பது போல் வந்து குழந்தைகளையும் கடத்த வந்ததாக அமைந்த கதைப்பாத்திரம். க்ரிம் சகோதரர்கள் (*Grimm Brothers*) மற்றும் ராபர்ட் ப்ரௌனிங் (*Robert Browning-1842*) இதனை *The Pied Piper of Hamelin* என்று குழந்தைகளுக்கான கதைப்பாடல் ஆக்கியுள்ளனர். 'போலி வாக்குறுதிகளை வழங்கி வஞ்சிக்கும் குறியீட்டுப் பாத்திரம்' ஆகும்.
- மற்றோர் இடத்தில் '*Missing in all the sound and fury of migration*'(P.206) என எழுதிச் செல்கிறார்.

'*sound and fury*' என்பது சேக்ஸ்பியர் தனது மாக்பெத் நாடகத்தில் பயன்படுத்தியதிலிருந்து தொடர் வழக்காற்றில் உள்ளது. வாழ்க்கை என்பது 'வெட்டிக் கூச்சல்' நிறைந்தது வேறெதுவுமில்லை என்ற மாக்பெத் வசனத்தை அறிந்திருக்க வேண்டியுள்ளது.

- *Towers of Babel(P.241)* என்ற பைபிள் கிளைக்கதை(ஜெனிஸிஸ் 11:9)யைப் பயன்படுத்திச் செல்கிறார். ஜெஹோவா கடவுள் தனக்குப் பிடிக்காத, பூமியிலிருந்து சொர்க்கத்தைத் தொடும் கோபுரம் ஒன்றைக் கட்டும் பல்வேறு மக்கள் பேசிய ஒரேமொழியைக் குழப்பியதில், மக்கள் மொழிக்குழப்பம் அடைந்து கட்டுமானப்பணி நின்றதாக அத்தொன்மக்கதை உள்ளது. மொழிப் பயன்பாட்டில் 'வெற்றுக் கூச்சல், காட்டுக் கூச்சல்' எனக் கொள்ளலாம்.
- *Leprechaun Smile(P.263)* என்றொரு தொடரைக் கையாளுகிறார். இது ஐரிஷ் நாட்டார் கதைப் பாத்திரம் ஆகும். 'கோமாளிச் சிரிப்பு' என்பதாகும்.
- *Yellow Brick Road* / மஞ்சள் செங்கல் சாலை / இது புது டில்லியில் உள்ள பிரபலமான உணவகங்களில் ஒன்று; அது பற்றி அறியாமல் நேரடியாக மொழிபெயர்த்தால் தவறாகிவிடும். மொழிபெயர்ப்பில் 'நன்னம்பிக்கை வழி' என இடம்சுட்டிப் பொருள் கொள்ள வேண்டும்.
- *What a rainbow these steppe people had made!(P.270)*. 'இந்தப் புல்வெளி மக்கள் என்ன ஒரு வானவில் செய்தார்கள்' என்ற இந்த வியப்பு வாக்கியத்தை, 'ஸ்டெப்பி புல்வெளி மக்கள் (இந்தியாவில்) பல மொழிகளுடனும் கலந்து மொழிக் கதம்பமாக்கிவிட்டனர்' என்று இடம்சுட்டிப் பொருள் கொள்ள வேண்டியுள்ளது.

மரபுத்தொடர்களின் பயன்பாடு சமூகத்திற்கு சமூகம் மாறுபடுவது போல், ஆய்வு, புதினம், கவிதை, நாடகம் என வகைமைக்கேற்பவும் மாறுபடலாம். மூலநூலின் மரபுத்தொடர் பெயர்ப்பு நூலில் இடம்சுட்டிப் பொருண்மையில் வரும்போது தான் தெளிவு கிடைக்கும். ஆனால் ஆங்கிலத்திலிருந்து இந்தியில் பின் இந்தியிலிருந்து தமிழில் அல்லது தமிழிலிருந்து ஆங்கிலம் பின்னர் ஆங்கிலத்திலிருந்து இந்தியில் பெயர்க்கப்படும் இரண்டாவது, மூன்றாவது பெயர்ப்புகள், இம் மரபுத்தொடர் விடயத்தில் எத்தகைய தன்மையை அடையும்?

கணினி தனது மொழித் தரவகத்தில் சேர்க்கப்பட்டு அதுவும் தொடர்ந்து சரியான பொருண்மையில் பயன்படுத்தப்பட்டு வரும் சொற்களை, தொடர்களை, வாக்கியங்களைக் கணினி பெயர்ப்பில் தருவிக்கிறது. தமிழ் உள்ளிட்ட இந்திய மொழிகளின் பண்பாட்டுச் செறிவு மரபுத்தொடர்கள் இடம் சுட்டிப் பொருண்மையில் கணினிவழி பயன்படுத்தும் வரை இச்சிக்கல் நீடித்துக்கொண்டுதானிருக்கும். அதுவும் பண்பாட்டுக் கூறுகள் இயங்குதன்மையன, காலத்திற்கேற்ப மாறுவன, மாறிக்கொண்டு வருவனவும் தரவேற்றம் செய்யப்படல் வேண்டும்.

மனிதன் படைத்த மரபுத்தொடர்கள் ஒருகட்டத்தில் மனிதனின் புரிதலுக்குச் சவால்விடும் பண்பாட்டுத் தொடராயுதங்களாகிவிடுகின்றன.

எம். டி. முத்துக்குமாரசாமியின் 'மொழிபெயர்ப்பு என்பது ஈகை' என்ற முகநூல்(ஜூன் 1, 2023, காலை 8.43) பதிவில் மறுதலையாகக் கீழ்வரும் கருத்து.

*சில சமயங்களில் சின்னஞ் சிறிய வாக்கியங்கள் திகைக்கவைக்கும் சிந்தனைகளை உள்ளடக்கியதாக இருப்பதுண்டு. அப்படிப்பட்ட வகையில் ஒரு வாக்கியம் Translation is generosity. தெரிதாவுடையது. மொழிபெயர்ப்பு என்பது ஈகை. என்னவொரு ஆச்சரியமான புரிதலை அனைத்து வகையான மொழிபெயர்ப்புகளைப் பற்றியும் இந்த வாக்கியம் உண்டாக்குகிறது. மொழிபெயர்ப்பு என்பது ஒரு மொழியிலிருந்து இன்னொன்றுக்கு எடுத்துச்செல்லும் ஓடையாக மட்டும் இருக்க வேண்டியதில்லை; இயற்கையை நம் அகத்தோடு பேசவைக்கும் கவிஞன், சிசுவின் மழலையொலிகளை புரிந்துகொள்ளும் தாய், சப்தங்கள் வார்த்தையாகிற சமூகத் தருணங்கள், காதலில் அபூர்வ நித்தியம் கொள்ளும் கணங்கள், ஒரு பறவையின் சிறகடிப்பில் இருக்கும் சுதந்திரம், புராதனங்களில் ஒளிந்திருக்கும் ஏக்கம், மூலிகை ஒன்றின் மருத்துவ குணம், ஒலியை இசையாக்கும் கலைஞன், என மொழிபெயர்ப்பாளர்களிலும் மொழிபெயர்ப்புகளிலும்தான் எத்தனை வகை! மக்கள் கூட்டம் சமூகமாகத் திரள்வது என்பதே மொழிபெயர்ப்பாளர்களின் ஈகையால்தான் என்று கூட ஒருவர் இதை நீட்டிக்க முடியும். ஒப்பந்தங்களால் உருத்திரளும் சமூகம் என்ற ரூசோவின் கருத்தாக்கத்தைவிட மொழிபெயர்ப்புகளின் ஈகையால் இணைக்கப்படும் சமூகம் என்பது அர்த்தபரிமாற்றத்தை சமூகத்தின் மைய கண்ணியாக மாற்றிவிடுகிறது.*

**துணைநின்றவை:**


- *Peggy Moohan, Wanderers Kings Merchants ( The Story of India through its Languages), Penguin / Viking, Random House India, 2021.*
- *சச்சிதானந்தன் வை., ஒப்பிலக்கியம் (ஓர் அறிமுகம்), ஆக்ஸ்போர்டு யுனிவர்சிடி பிரஸ், சென்னை, 1985.*
- *கூகுள் மொழிபெயர்ப்புத் தளம்.*


●


கட்டுரையாளர், பேராசிரியர்,
ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம், புதுடில்லி.

கட்டுரை

# அம்பையின் படைப்பும் ஆளுமையும்



வெ.சந்தியா

> *அம்பை தன் சிறுகதைகளில் வலியுறுத்துவது தன் நம்பிக்கையின் அடிப்படையிலான அற உணர்வை! நன்மை, தீமை என்ற பிரிப்புகளற்ற இடத்தில் அம்பை தன் கதைகளோடு நிற்கிறார். அதுதான் அவரது பெருமிதம். தன்னை அதனூடாகவே எழுத்திற்கு அர்ப்பணித்திருப்பவர் அவர்*
>
> *- அனார்*

அம்பையின் எழுத்துக்கள் மனித மனங்களில் மாற்றத்திற்கான தூண்டுதலாகவே இருப்பதை அவரது படைப்புகளான சிறுகதைகள் உணர்த்துகின்றன. சிறுகதை இலக்கியமானது இக்கால இலக்கிய வகைகளுள் தனக்கென தனி அடையாளத்தையும், தனித்துவத்தையும் உருவாக்கியுள்ளது. அம்பையின் சிறுகதைகள் கதையாக மட்டுமில்லாமல் படிப்போரின் வாழ்வியல் தடங்களை ஒருங்கிணைக்கும் நினைவுச் சின்னங்களாகவும் இருக்கின்றன. நம் சமூகத்தில் எந்த ஒரு இலக்கியம் படைக்கப்படும் போதும் அதன் படைப்பாளியும் அவ்விலக்கியத்தின் வழியே ஆராயப்படும் போது தான் அவ்விலக்கியத்தின் எதார்த்த நிலையை புரிந்து கொள்ள முடியும். இன்றைய சமுதாயத்தின் சிக்கல்கள் முதல் சவால்கள் வரை கதையின் மையப் பொருளாக்கப்பட்டு சிறுகதைகள் எழுதப்படுகின்றன. அவ்வாறு எழுதப்படும் சிறுகதைகளின் நோக்கம் நிறைவேறும் போது அந்தப் படைப்பானது வெற்றி பெறுகின்றது. தமிழ்ச் சிறுகதைகளில் அம்பையின் சிறுகதைகள் தனக்கென தனிப் பாதையை அமைத்துக் கொண்டு பயணித்திருக்கின்றன. அம்பையின் சிறுகதை உருவாக்கத்தில் கதைத் தலைப்பு, கதைத்திட்டம், கதாப்பாத்திரம் வழியே அவரது படைப்பாளுமையை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கதைத் தலைப்பு:**

சிறுகதைகளின் தலைப்புகள் படிப்போர்க்கு ஆர்வத்தைத் தூண்டுவதிலும்,கதையின் மையப் பொருளை மக்களிடம் கொண்டு சேர்ப்பதிலும், கதையின் நோக்கத்தை வெற்றி பெறச் செய்வதிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. "பல்வகைப் பொருளையும் தன்னுட் செறித்து காட்டும் சிறிய கண்ணாடி போலத் தலைப்புகள் அமைய வேண்டும்" (தா.எ.பியூலா மெர்சி-1974,பக்-18,19). ஒரு கதையின் தலைப்பே அந்த கதையைப் படிக்கும் எண்ணத்தை வாசகர் மனதில் விதைக்கின்றது. அம்பையின் சிறுகதைகளில் கதைத் தலைப்புகள் கதாப்பாத்திரத்தின் ஆளுமையோடு தொடர்பு கொண்டும்,கதாப்பாத்திரத்தின் வாழ்வியலை மையப்படுத்தியும் அமைந்துள்ளன.

**கதாப்பாத்திரத்தின் ஆளுமைத் தொடர்பான தலைப்பு:**

சிறகுகள் முறியும் என்ற சிறுகதையில் கணவனால் மனதளவில் காயப்படுவது மட்டுமில்லாமல் பொருளாதார நெருக்கடிக்கு தள்ளப்படும் சாயாவின் வாழ்க்கை ஓட்டமானது அவளுக்கே புரியாத புதிராக உருவெடுக்கிறது. திருமணத்திற்கு முன்பு தன் ஆசைகளையும் கனவுகளையும் நிறைவேற்ற எவ்விதத் தடையும் இல்லாமல் சிறகுகள் முளைத்த பறவையாய் பறந்த சாயா திருமணத்திற்குப் பிறகு தன் சுதந்திரத்தை இழந்து சிறகுகள் முறிந்த பறவையாய் ஒடுக்கப்படுகிறாள். சாயாவின் ஆளுமை சிதையும் தருணமே "சிறகுகள் முறியும்" என சிறுகதைக்கு தலைப்படுவதற்குக் காரணமாக அமைந்துள்ளது எனலாம்.(அம்பை-1972,பக்.80-112).

**கதாப்பாத்திரத்தின் வாழ்வியலை மையப்படுத்திய தலைப்பு:**

காட்டில் ஒரு மான் என்ற சிறுகதையில் தன் பெயருக்கேற்ற குணம் கொண்ட தங்கம் அத்தை தான் கூறும் கதையின் மூலம் அவளது வாழ்க்கையை விளக்க முற்படுகிறாள். தண்ணீர் குடிக்கச் சென்ற மான் கூட்டத்தில் பாதை மாறி வேறு காட்டிற்குச் சென்ற ஒரு மானுக்கு ஏற்படும் வித்தியாசமான அனுபவமும், பயமும் ஒரு பௌர்ணமி நிலவொளியில் விலகிப் போவதும் அந்தப் புதிய காட்டிற்கு அந்த மான் பழகிப் போவதுமாக தன் வாழ்வோடு பொருத்தி தங்கம் அத்தை கதை கூறுகிறாள். காட்டில் தனியாக தவிக்கும் மான் குறிப்பிட்ட கட்டத்தில் வித்தியாசமான சூழலை ஏற்றுக் கொள்வதை தங்கம் அத்தையின் வாழ்வியலோடு ஒப்பிட்டு "காட்டில் ஒரு மான்" என சிறுகதைக்கு பெயரிடப்பட்டுள்ளது. (அம்பை-2000, பக்-76-82)

**கதைத்திட்டம்:**

கதை நிகழ்வுகளை கதை அமைப்புக்கு ஏற்றவாறு முறையாக வரிசைப்படுத்தி அமைப்பதே கதைத்திட்டமாகும். கதையின் கருவை மையப்படுத்தி கதைத் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்."வாசகனின் உணர்வுகளைத் தூண்டி ஆழ்ந்த உணர்ச்சிகளைத் தோற்றுவிக்கும் கதைகளே வெற்றிகரமாக அமையக்கூடியவை" (ரா.ராஜதுரை - 1970, ப-118). கதையின் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் கதைத்திட்டமானது ஒரே சீராக பயணிக்க வேண்டும்.அம்பையின் சிறுகதைகளில் கதைத்திட்டமானது ஒரு பெண்ணின் கதையாகவும், கதைக்குள் கதையாகவும் அமைந்துள்ளது.

**ஒரு பெண்ணின் கதை:**

ஒரு பெண்ணுக்கு பொருளாதார சுதந்திரம் மறுக்கப்படும் போது ஏற்படும் மன உளைச்சல்களையெல்லாம் சிறகுகள் முறியும் சிறுகதை வெளிப்படுத்துகிறது. தன் கணவன் பாஸ்கரனின் கஞ்சத்தனத்தால் வாழ்வின் வெறுமையை உணரும் சாயாவின் மனநிலை, அவளது கடந்த கால நினைவுகள் மற்றும் எதிர்கால வாழ்க்கை பற்றிய கவலைகள் என அனைத்து தருணங்களையும் கதை பதிவு செய்கிறது. திருமணத்திற்குப் பிறகு இல்லறப் பொறுப்பை ஏற்று வழிநடத்தும் பெண்களின் உழைப்பை அந்தக் குடும்ப உறுப்பினர்களே உணர்வதில்லை தனக்கான கடமையை உணர்ந்து சரிவர ஆற்றினாலும் அவர்களின் உரிமை மறுக்கப்படும் உண்மையை இச்சிறுகதை உரக்கச் சொல்கிறது. திருமண வாழ்வில் சாயாவுக்கு ஏற்படும் சிக்கல்கள், அவளுக்கு பிறந்த வீட்டில் இருந்த சுதந்திரம் என்ற நோக்கில் கதை அமைக்கப்பட்டுள்ளது.(அம்பை-1972,பக்-80-112)

**கதைக்குள் கதை:**

சமூகத்தோடு சேர்ந்து கொண்டு பெண்ணுக்கென சில கட்டமைப்புகளை வகுத்திருக்கும் இயற்கையின் பிடியில் சிக்கிக் கொண்ட தங்கம் அத்தையின் வாழ்வியலை கதைக்குள் கதையாய் காட்டில் ஒரு மான் சிறுகதை பதிவு செய்கிறது. ஒரு பெண்ணுக்கு இயற்கையாக நடக்க வேண்டிய நிகழ்வுகள் தவறும்போது அந்தப் பெண் சமூகத்தின் பார்வையில் வித்தியாசமானவளாக உணரப்படுவதை கதையின் அடுத்தடுத்த நகர்வுகள் வெளிப்படுத்துகின்றன. பூக்காத உடம்பு என்ற பழியை ஏற்றிருக்கும் தங்கம் அத்தை அதிலிருந்து தப்பிப்பதற்காக சந்தித்த இன்னல்களையும் கதை பதிவு செய்துள்ளது. ஒரு கட்டத்தில் தனக்கான பாதை இது தான் என தேர்வு செய்து அதில் வாழப் பழகிக் கொள்ளும் தங்கம் அத்தையின் தங்கமான குணநலன்கள், அத்தையின் அரவணைப்பில் அழகான குடும்பம், குழந்தைகள் என கதை விரிவடைகிறது.(அம்பை-2000,பக்-76-82)


**கதாப்பாத்திரங்கள்:**

ஒரு கதைக்கு உயிரோட்டத்தை அளித்து கதைக்கு தலைமை வகிப்பவர்கள் கதாப்பாத்திரங்களே ஆவர். "பாத்திரப்படைப்பு என்பது ஒரு பகுதியே என்றாலும் அது ஓர் இன்றியமையாத பகுதியாகும். சிறப்பு வரிசையில் முதலிடம் பெறும் பகுதி" (கரு.முத்தையா-1980, ப.21). கதாப்பாத்திரங்களைக் கொண்டே கதை நிகழ்வுகள் கட்டமைக்கப்படுகின்றன. அம்பையின் சிறுகதைகளில் முதல் நிலை மற்றும் முதன்மை கதாப்பாத்திரங்கள், துணைநிலை கதாப்பாத்திரங்கள், சிறு கதாப்பாத்திரங்கள் மற்றும் பிற கதாப்பாத்திரங்கள் என பாத்திரப் படைப்பை வகைப்படுத்தலாம்.

**சிறகுகள் முறியும் சிறுகதையின் கதாப்பாத்திரங்கள்:**

**முதல் நிலை கதாப்பாத்திரங்கள்:**

திருமண வாழ்வில் ஒரு பெண் தன் கணவனின் செயல்பாடுகளினால் சந்திக்கும் சிக்கல்களால் வாழ்க்கையை வெறுப்பவளாக சாயா கதாபாத்திரமும், மனைவியின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாத கணவனின் பிரதிபலிப்பாக பாஸ்கரன் கதாபாத்திரமும் படைக்கப்பட்டிருக்கிறது. சாயாவின் பரிபூரண சம்மதத்துடன் பாஸ்கரன் - சாயா திருமணம் நடைபெற்றாலும் திருமணத்திற்குப் பிறகு தன் கணவனின் நிபந்தனைகளாலும், கஞ்சத்தனத்தாலும் அவள் அடையும் மன வேதனையை வெளிப்படுத்த முடியாமல் மனதுக்குள்ளே சட்டங்களை உருவாக்கிக் கொள்பவளாக அவளது கதாபாத்திரம் அமையப் பெற்றுள்ளது. திருமணம் நிச்சயம் ஆனவுடன் கடற்கரை, சினிமா என்று சாயா தோழிகளுக்கு செலவழித்ததையும், அவளது கற்பனைகளுக்கு மாறாக அமைந்திருக்கும் திருமண வாழ்வை வேறு வழியில்லாத காரணத்தினாலேயே தொடர்வதையும் கதையின் வழியே அறிய முடிகிறது. தன் மகன் சேகரின் தேவைகளை நிறைவேற்ற விரும்பும் பாசமிகு தாயாக சாயா இருப்பதையும் கதை உணர்த்துகிறது. பிறந்த வீட்டில் அம்மாவை அலைக்கழித்ததற்குத்தான் இத்தகைய தண்டனையை அனுபவிப்பதாக நினைக்கும் சாயாவின் எண்ண ஓட்டங்கள் கதையில் எதார்த்தமாக வெளிப்பட்டுள்ளது. தையல் கலையில் ஆர்வம் கொண்டு அதன் மூலம் தனக்கான அடையாளத்தை உருவாக்கிக் கொள்ளும் சாயாவின் கடின உழைப்பையும் கதை வெளிக்கொணர்ந்துள்ளது. தன் தங்கை பூமாவின் பெண் பார்க்கும் சடங்கிற்கு அனுப்ப மறுக்கும் பாஸ்கரன், மீது சாயாவுக்கு ஏற்படும் வருத்தமானது அவனை விட்டு சென்று விட வேண்டும் என அவள் நினைப்பதாக சாயாவின் கதாபாத்திரம் அழுத்தமாக கட்டமைக்கப்பட்டுள்ளது. சிக்கனம் என்ற பெயரில் தேவையான செலவுகளுக்குக் கூட கணக்கு பார்க்கும் கஞ்சத்தனம் நிறைந்தவனாகவும், சாயாவின் சமையலை சாப்பிடுவதை ஹோட்டலில் சாப்பிடுவதை விட இலாபமாக பார்க்கும் மனைவியின் மன உணர்வுகளை புரிந்து கொள்ளாதவனாகவும் பாஸ்கரன் கதாபாத்திரம் படைக்கப்பட்டுள்ளது. சாயாவின் ஆசைகளை நிறைவேற்றுவதற்கும், அவள் தைப்பதற்காக வாங்கும் ஊசி நூல்களுக்குக் கூட கணக்குப் பார்ப்பவனாகவும் பாஸ்கரன் இருப்பதையும் கதை உணர்த்துகிறது. நண்பன் மகன் பூணூலுக்கு பரிசு அளிப்பதற்குக் கூட மனைவியிடம் வாக்குவாதம் செய்யும் கணவனாகவும், மனைவிக்கு வரும் கடிதங்களை பரிசீலனை செய்பவனாகவும் பாஸ்கரன் இருப்பதை கதையின் வழியே அறிய முடிகிறது. பாஸ்கரனின் இத்தகைய குணாதிசயங்களுக்கு சின்ன வயதில் அவன் அனுபவித்த கஷ்டங்களே காரணமாகிப் போவதையும் கதை வெளிக்கொணர்ந்துள்ளது. (அம்பை-1976,பக்.80-112)




**துணைநிலை கதாப்பாத்திரங்கள்:**

சாயா - பாஸ்கரனின் மகனாக இடம்பெறும் சேகர் மூலம் தந்தை- மகன் உறவை விட தாய் - மகன் உறவானது வலுவாக கட்டமைக்கப் பட்டிருப்பதை கதையில் காண முடிகிறது. சேகருக்கு தந்தையிடத்தில் உள்ள பயமும், தாய் மீது இருக்கும் அன்பும், அக்கறையும் கதையில் தத்ரூபமாக வெளிப்பட்டுள்ளது. தன் மகளின் உள்ளார்ந்த உணர்வுகளை புரிந்து கொண்ட பெண்ணாக சாயாவின் தாய் கதாபாத்திரம் வெளிப்பட்டுள்ளது. பெண்ணுக்கென்றே தகுதிகளை நிர்ணயிக்கும் ஆணாதிக்க சமூகத்தின் வெளிப்பாடாக சாயாவின் தந்தை கதாபாத்திரம் இடம்பெற்றுள்ளது. தங்கையாக தன் அக்கா சாயாவின் சூழ்நிலையைப் புரிந்து கொள்ள முடியாத பெண்ணாக பூமா

*கதாப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது.(அம்பை-1972,பக்.80-112)*

**சிறு கதாப்பாத்திரங்கள்:**

*சாயாவின் நாத்தனார் சரோஜா, எதிர்வீட்டு ரஞ்சிதம், அடுத்த தெரு மாலதி போன்றோர் அவளிடம் துணி தைக்கக் கொடுப்பவர்களாக இடம் பெற்றுள்ளனர். மேலும் கதைக்கு அழுத்தம் தராத கதாப்பாத்திரங்களாக சாயாவின் சித்தி, பூமாவை மணக்க இருக்கும் ஈஸ்வரன் போன்ற சிறு கதாப்பாத்திரங்களும் படைக்கப்பட்டுள்ளனர். (அம்பை-1972,பக்.80-112)*

**காட்டில் ஒரு மான் சிறுகதையின் கதாப்பாத்திரங்கள்:**

*தங்கம் அத்தை அழகுக் கறுப்பு நிறமுடையவளாகவும், நீவி விட்டாற் போல் ஒரு சுருக்கமும் இல்லாத முகம் கொண்டவளாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளாள். தங்கம் அத்தையிடம் ஆர்வத்துடன் கதை கேட்கும் குழந்தைகளுக்கு அவளைச் சுற்றியிருந்த மர்ம ஓட்டை புரிந்து கொள்ள முடியவில்லை. தங்கம் அத்தை பூக்காத உடம்பை பெற்றவள் என்ற காரணத்தினால் அந்தக் குறையைச் சரி செய்ய அவள் உடம்பில் ஏற்றாத மருந்தில்லை மருந்துகள், பூசைகள் மற்றும் பிற முயற்சிகள் மேற்கொள்ளப்படும் போது அதை ஏற்றுக் கொண்டு தன்னை வருத்திக் கொண்டவளாக தங்கம் அத்தை இருப்பதையும் கதையில் அறிய முடிகிறது. தங்கம் அத்தையின் கைப்பட்டால் தான் மாட்டுக்குப் பால் சுரக்கும், அவள் நட்ட விதைகள் முளை வரும் என தங்கம் அத்தையின் மேன்மையையும் கதை சுட்டிக்காட்டியுள்ளது. மற்றவர்களின் அனுதாபங்களை ஏற்றுக் கொள்ளாதவளாய் இருக்கும் தங்கம் அத்தை தனக்கும் அனைவரையும் போல் பசி, வலி எல்லாம் சமம்தான் என அவளையே சமாதானப்படுத்திக் கொள்ளக் கூடியவளாக படைக்கப்பட்டிருப்பதையும் கதை உணர்த்துகிறது. தங்கம் அத்தையின் கணவர் ஏகாம்பரத்திற்கு வேறு பெண் பார்த்த போது அதை ஏற்றுக்கொள்ள முடியாதவளாக தற்கொலை முயற்சி மேற்கொண்டாலும் பின்னர் அவளே செங்கமலம் என்ற பெண்ணை தன் கணவருக்கு திருமணம் செய்து வைப்பவளாக தங்கம் அத்தையின் கதாப்பாத்திரம் கட்டமைக்கப்பட்டுள்ளது. தன் கணவனின் இளைய மனைவியின் ஏழு குழந்தைகளையும் தன் குழந்தைகளாகப் பாவிக்கும் தங்கம் அத்தையின் உயர்ந்த குணத்தையும் கதை பதிவு செய்துள்ளது. (அம்பை-2000,பக்-76-82)*

*தங்கம் அத்தையிடம் கதை கேட்பவர்களில் ஒருவராக கதை சொல்லியின் கதாப்பாத்திரம் படைக்கப்பட்டிருக்கிறது. தங்கம் அத்தையைச் சுற்றியிருந்த மர்ம ஓட்டை விளக்குபவளாக தாவணி போட்ட பெண்ணாக வள்ளிமுத்து மாமாவின் மகளாக கட்டமைக்கப்பட்டிருக்கிறாள். இது தவிர பெயரளவு கதாபாத்திரங்களாக தங்கம் அத்தையின் கணவர் ஏகாம்பரம், அவரது இளைய மனைவி செங்கமலம், அவர்களது ஏழு குழந்தைகள், கதை சொல்லியின் அம்மா போன்றோர் படைக்கப்பட்டுள்ளனர். (அம்பை-2000,பக்-76-82)*

**தொகுப்புரை:**

- ⋆ *அம்பையின் சிறுகதைப் படைப்பில் கதைத்தலைப்பைப் பொறுத்த வரையில் கதாப்பாத்திரத்தை மையப்படுத்தியே தலைப்பிடப்பட்டுள்ளது.*
- ⋆ *கதைத் தலைப்புகள் கதாப்பாத்திரங்களோடு தொடர்புகொண்டு இருப்பது மட்டுமில்லாமல், கதையின் கருவையும் வெளிப்படுத்து பவையாகவும் அமைந்துள்ளன.*
- ⋆ *கதைத்திட்டமானது கதை பயணிக்கும் இடத்திற்கு தகுந்தாற் போல் நிகழ்காலம், கடந்த காலம் என கட்டமைக்கப்பட்டுள்ளது.*
- ⋆ *கதையின் மூலம் நேரடியாக கருப்பொருளை வலியுறுத்துவது, கதைக்குள் கதையாய் கதைக் கருவை காட்சிப்படுத்துவதுமாகவும் கதைத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.*
- ⋆ *கதையின் நோக்கத்தை நிறைவேற்றும் பொறுப்பை ஏற்றிருப்பவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு முதல் நிலை மற்றும் முதன்மை கதாப்பாத்திரங்களாக படைக்கப்பட்டுள்ளனர்.*
- ⋆ *முதல்நிலை கதாப்பாத்திரங்களுக்கு வலுச்சேர்க்கும் குடும்பம் மற்றும் சமூகம் சார்ந்த சூழலின் மனித உறவுகளாக துணை கதாப்பாத்திரங்கள் சிறு கதாப்பாத்திரங்கள் மற்றும் பிற கதாப்பாத்திரங்கள் இடம் பெற்றுள்ளனர்.*

**பார்வை நூல்கள்:**


1. *அம்பை - சிறகுகள் முறியும்,காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்,.*
2. *அம்பை -காட்டில் ஒரு மான், காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்,.*
3. *பியூலா மெர்சி, தா.எ - இருபதில் சிறுகதைகள், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,*
4. *முத்தையா.கரு - ஜெயகாந்தன் நாவல்களில் பாத்திரப்படைப்பு,முத்து மீனாள் பதிப்பகம்.*
5. *ராஜதுரை.ரா - சிறுகதையின் கூறுகள்,வளரும் தமிழ் இலக்கியம்,கிறித்துவ இலக்கியச் சங்கமம்.*


●


கட்டுரையாளர், முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழம்,
சேர்க்காடு, வேலூர் – 632115

கட்டுரை



# காலந்தோறும் ஒளவையார்கள்

ச.முத்துச்செல்வி,

"ஒளவையார் ஒருவரா, இருவரா இல்லை பலரா என்னும் வினா இலக்கிய வரலாற்றில் அவ்வப்பொழுது எழுவது இயல்பாக இருந்து வருகிறது. பீடு பெறு புலவர் பெயரைப் பின் வந்தோர் சூடும் மரபைத் தமிழ் இலக்கியத்தில் நாம் காண்கிறோம். காப்பியர்கள், கபிலர்கள், பரணர்கள் பலரானபோது அவர்களைச் சிறு சிறு அடைமொழித் தொடுப்பால் மக்கள் வேறுபடுத்திக் கண்டனர். ஒளவையார் என்ற பெயர் வேறுபடுத்தலுக்கு உட்படாத காரணத்தால் அப்பெயர் கொண்டிருந்த பலரையும் பாகுபடுத்திக் காண இயலவில்லை. எனினும், இலக்கியத்தில் வல்லவர்களாக இருந்த பலர் ஒளவை என்று பெயர் கொண்டிருந்ததற்குச் சங்ககால ஒளவையே மூல காரணம் என்று கருதுவோர் உண்டு"[1] என்கிறார் பெ.சு.மணி. இக்கருத்தின்படி தொன்று தொட்டு வந்த எண்ணத்தின் படி "ஒளவையார் ஒருவர், இருவர், மூவர் என்கிற வழக்கிலும் அவரது ஜாதி, பிறப்பு, வளர்ப்பு முதலிய ஆராய்ச்சியிலும் என் மனம் செல்லவில்லை. அது வீண் காலப்போக்காக முடியும் என்பது என் கருத்து"[2] என்று வரகவி. அ. சுப்பிரமணிய பாரதியும் தனது 'ஒளவை அருந்தமிழ்' என்ற நூலில், ஒளவை யார்? எத்தனைப் பேர்? என்று ஆராய மனமில்லை என்று கூறி ஒளவையார் பாடலைப் பற்றி மட்டுமே ஆராய்கின்றார்.

அ.சுப்பிரமணிய பாரதி மட்டுமின்றி தி.சு.பாலசுந்தரம் பிள்ளையும் தனது 'ஔவையார் திருவுள்ளம்' என்ற நூலில் "ஔவையார் என்போர், அவர் எவராயிருந்தாலும் தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும் நல்ல தொண்டு செய்திருக்கின்றார்"[3] என்று கூறி ஔவையைப் பற்றி ஆய்வு மேற்கொள்ள விரும்பாதவராகிறார்.

**ஒருவரே**

ஔவையைப் பற்றி தான் நடத்திய 'செங்கோல்' என்ற இதழில் கட்டுரை எழுதிய ம.பொ.சி, "ஔவையாரின் பெயரால் வழங்கிவரும் சிறந்த இலக்கியங்களை அப்பெருமாட்டியின் பெயரிலிருந்து பிரித்தெடுக்க நமக்குத் துணிவு வரவில்லை. அதனால் பொது மக்களைப் போலவே நாமும் ஔவையார் ஒருவர் என்றே கருதி அவர் பெயரால் உள்ள சிறந்த இலக்கியங்களைப் போற்றுவதே கடன் என்று நம்புகிறோம்"[4] என்று கூறி ஔவை ஒருவரே என்கிறார்.

"அவ்வையார் இருவர் இருந்தனர் மூவர் இருந்தனர் நால்வர் இருந்தனர் என்று சொல்வார் சொல்க. ஒருவர் இருந்தனர் என்பதற்கே ஆதாரம் ஏற்பட்டுள்ளது. சங்கத் தமிழ் நூல்களில் அவ்வையார் பாட்டுக்களென்று காணும் பாட்டுக்களை இயற்றியவர் அவ்வொருவர். தொல்காப்பிய உரையாசிரியர்களாற் காட்டப்பட்ட "இருடீர்" என்னும் வெண்பா அவர் பாடியதே எனலாம். மற்றைப் பிற்காலத்துப் பாட்டுகளையும் அவ்வையார் பெயரைக்கொண்ட மாதரொருவர் என்றாதல் வேறு புலவரென்றாதல் துணிந்துரைக்க ஏலாது. ஆயிரத் தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழர் என்னும் நூலுடையாரும் தமிழ் நாவலர் சரிதையாசிரியரும், அதனை யனுசரித்து அவ்வையார் வரலாறு எழுதிய பத்திராசிரியரும் அவ்வையார் ஒருவரே யிருந்தாரென்னும் கொள்கையினர். அவ்வையார் கபிலராதியோர் காலத்தும் அதற்குச் சற்றுப் பின்னும் வாழ்ந்திருந்தாரென்பதே செந்தமிழ்ப் பத்திராசிரியர் சித்தாந்தம். பிற்காலத்திலும் அவ்வையார் ஒருவர் இருவர் இருந்தாரென்பது ஆராய்ச்சி வல்லார் ஆவசியக மென்று கண்டது. அவ்வையார் பெயரால் வழங்கும் நூல்களையும், பாட்டுக்களையும் இயற்றினாரொருவர் வேண்டும், அவர் பிற்காலத்திலிருந்த அவ்வையார் ஒருவர் என்று ஆவசியகத்தின் மேல் வேறோருராதாரமின்றி எழுந்த கொள்கையைத் தழுவுதல் நெறியாகாது"[5] என்று அனவரதம் பிள்ளையும் தனது ஔவையார் என்ற நூலில் ஔவையார் ஒருவரே என்கிறார்.

**இருவரே**

ஔவை பற்றிய ஆய்வில் வரலாற்றையும், பாடல்களையும் புலமைக் கண்கொண்டு மட்டும் ஆராய்ந்தால் போதாது. மனித சமுதாயம் மற்றும் சமய அடிப்படைகளைக் கொண்டும் ஆராய வேண்டும் என்ற அடிப்படையிலேயே அனவரதம் பிள்ளை, ம.பொ.சி போன்றோர் ஆராய்ந்து ஔவை ஒருவரே என்ற போதிலும் ஔவை ஒருவராகிய இருவர் என்று புலவர் புராணப் பாடலே கூறுகின்றது. 'புலவர் புராணம்' என்ற நூல் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளால் இயற்றப்பட்டதாகும். இந்நூல்,

> "முன்னௌவை கலிவருட மூன்றாவதா யிரத்தாள்
> பின்னௌவை நாலாவதா யிரத்திற் பிறந்திட்டா
> ளன்னவடன் திருவடியி லடுத்தவள் போய்க்காத்தனா
> லின்னவரைப் பிரியாமலே கமென்றார் பலர்தாமே"[6]

என்று ஔவையை இருவராகக் கூறுகின்றது. அதாவது முன்னாளில் தோன்றிய ஔவை கலிவருடம் மூன்றாயிரத்தில் வாழ்ந்தவர். பின்னாளில் தோன்றிய ஔவை கலிவருடம் நான்காயிரத்தில் தோன்றியவர் என்றும் கூறுகின்றது. தற்போது கலிவருடம் ஐந்தாயிரம் நடப்பதாக நம்பப்படுகின்றது. இப்பாடலின் கூற்றுப்படி முதல் ஔவை சங்க காலத்திலும் பின் தோன்றிய ஔவை பதினோராம் நூற்றாண்டிலும் வாழ்ந்தவர் என்று எடுத்துக் கொள்ளலாம்.

இக்கருத்தையே ஔவை துரைசாமிப் பிள்ளை தமது நற்றிணை உரையில் "ஔவையார் என்று பெயர் தாங்கும் பெண்பாற்புலவர் இருவர் நம் தமிழகத்தில் இருந்துள்ளனர். அவருள் ஒருவர் சங்கத் தொகை நூற்காலத்திலும் மற்றவர் இடைக்காலத்திலும் வாழ்ந்தனர்"[7] என்று இரு ஔவையார்களைக் குறிப்பிடுகின்றார். இதனையே கா. சுப்பிரமணியப் பிள்ளையும் தமது இலக்கிய வரலாற்றில் கூறுகின்றார்.

'ஔவையார் சரித்திரம்' எழுதிய சுப்பிரமணியாச்சாரியாரும் "இரண்டாம் ஔவை காலம் கி.பி. பதினோராம் நூற்றாண்டின் முற்பகுதி"[8] என்று ஔவை இருவர் என்கிறார். ஔவையார் கவிதைக் களஞ்சியத்தைத் தொகுத்த ப.சரவணனும், "ஔவையார் என்ற பெயரில் வாழ்ந்தவர் என்பது வேறு. ஔவையார் என்ற பெயரில் படைப்புகளை வெளிப்படுத்தியது என்பது வேறு. இரண்டிற்குமுள்ள அடிப்படை வித்தியாசத்தை விளங்கிக் கொள்வது முக்கியமாகும். எனவே, ஔவையார் என்ற பெயரில் இருவர் மட்டுமே வாழ்ந்தனர் எனலாம். மற்றவர் எல்லாம் அவர்களது பெருமையால் வந்தவர்களே"[9] என்கிறார். காலங்களை வைத்து தமிழண்ணலோ தனது ஔவையார் நூலில் ஔவையை 'சங்க கால ஔவை, நீதி நூல் ஔவை' என இருவராகக் கூறுகின்றார்.

**மூவரே**

ஔவையார் ஒருவரே இருவரே என்ற கருத்துகள் மட்டுமின்றி ஔவையார் மூவர் என்ற கருத்தும்

ஆய்வாளர்களிடையே எழுந்துள்ளது. "ஔவை என்ற பெயருடைய புலவர் மூவர் என எண்ணவேண்டும். ஒருவர் சங்க ஔவை, மற்றவர் பிற்காலச் சமய ஔவைகள் என்போம்"[10] என்கிறார் 'ஔவை' என்ற நூலில் டாக்டர்.மு.கோவிந்தசாமி. பி. ஸ்ரீ எழுதிய 'ஔவையார்' என்ற நூலின் முன்னுரையில் பெ.நா. அப்புசாமியும் "சங்க காலத்து ஔவை வேறு, மூதுரையை இயற்றிய ஔவை வேறு, கம்பன் காலத்தில் வாழ்ந்தவராகக் கூறப்படும் ஔவை வேறு என்பது உறுதி"[11] என்று ஔவையாரை மூவராகக் குறிப்பிடுகின்றார். 'தமிழ் தந்தப் பெண்கள்' என்ற நூலில் சாலை இளந்திரையனும், சாலினி இளந்திரையனும், "கல்வியும் புலமையும் மிக்க பெண்கள் பலர் தமிழகத்தில் 'அவ்வை' என்னும் பெயராலேயே அழைக்கப்பட்டு வந்தனர். இதனாலேதான் சங்க காலத்தில் ஓர் ஔவையைக் காண்கிறோம், இடைக்காலத்திலும் ஓர் ஔவையைச் சந்திக்கிறோம், பிற்காலத்திலும் ஓர் ஔவை இருந்திருக்கக் கூடுமோ என்று ஐயுறுகிறோம்"[12] என்று ஔவையை மூவராகக் கூறுகின்றார்.

**பலரே**

சங்ககால ஔவை, பன்னிரண்டாம் நூற்றாண்டு இரண்டாம் ஔவை, நீதி நூல்கள் தந்த மூன்றாம் ஔவை, விநாயகர் அகவல், ஞானக்குறள் போன்ற வேதாந்த கருத்துக்கள் தந்த நான்காம் ஔவை என்ற நான்கு ஔவையார்கள் இருந்ததாக ஔவையார் தனிப்பாடல்கள் விளக்க நூலின் முன்னுரையில் புலியூர்க் கேசிகன் கூறுகின்றார்.

தமிழ் இலக்கிய வரலாற்றை நூற்றாண்டு வரையறையில் எழுதிய மு.அருணாசலமும் ஔவையார் என்ற பெயரில் அறுவர் இருந்தனர் என்கிறார்.

1. சங்ககால ஔவை – கி.பி. 2 ஆம் நூற்றாண்டு
2. இடைக்கால ஔவை – கி.பி. 10 ஆம் நூற்றாண்டு
3. சோழர்கால ஔவை – கி.பி. 12 ஆம் நூற்றாண்டு
4. சமயப் புலவர் ஔவை– கி.பி. 14 ஆம் நூற்றாண்டு
5. பிற்கால ஔவை – 1. கி.பி. 16 – 17 ஆம் நூற்றாண்டு
6. பிற்கால ஔவை – 2. கி.பி.17 – 18 ஆம் நூற்றாண்டு"[13]

மு.அருணாசலம் பத்து முதல் 17 ஆம் நூற்றாண்டு வரை நான்கு ஔவையாரைக் கூறினாலும் அவற்றில் இன்னார் பாடிய பாடல்கள் இதுவென்று தெளிவான கருத்துகள் இல்லை என்றே கூறலாம். மு. அருணாசலம் அவர்களின் கூற்றுப்படி தனிப்பாடல் இயற்றிய ஔவையாரும் ஒருவர் அல்லர் என்றே கொள்ளவேண்டியுள்ளது.

'அவ்வையார் அன்று முதல் இன்று வரை' என்ற நூலில் தாயம்மாள் அறவாணனும் ஔவையாரை அறுவராகவே குறிப்பிடுகின்றார்.

1. சங்கப்பாடல்கள் பாடிய ஔவையார் (அதியமான், எழினி, பாரி, நாஞ்சில் வள்ளுவன், தொண்டைமான் காலத்தவர்)
2. தனிப்பாடல்கள் எழுதிய ஔவையார் (கி. பி. 10 முதல் 13 நூற்றண்டு வரை)
3. தனிப்பாடல்கள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி எழுதிய ஔவையார் (கி.பி. 16 முதல் 17 நூற்றாண்டு வரை)
4. விநாயகர் அகவல், ஞானக்குறள் பாடிய ஔவையார் (கி.பி 17,18 நூற்றாண்டுகள்)
5. அசதிக்கோவை, பந்தனந்தாதி பாடிய ஔவையார் ( கி.பி. 18 நூற்றாண்டு)
6. கல்வி ஒழுக்கம், பெட்டகம், வேழமுகம், கணபதி ஆசிரிய விருத்தம், சரஸ்வதி சிந்தனை பாடிய ஔவையார் (கி.பி 18 நூற்றாண்டு)

என்று அறுவராக பகுத்துக் கூறுகின்றார்.

தாயம்மாள் அறவாணனே தனது அவ்வையார் படைப்புக் களஞ்சியம் நூலில் ஔவையார் எண்மர் என்கிறார்.

1. ஔவையார்-1-சங்கப்பாடல்கள் அகம், புறம், அதியமான் பொகுட்டெழினி, நாஞ்சில் வள்ளுவன் முதலானொர் பற்றிய பாடல் பாடியவர் - ஏறக்குறைய 2ஆம் நூற்றாண்டு.
2. ஔவையார் -2 - மூவேந்தர், பாரி மகளிர், கம்பர், சேரமான் பெருமான் முதலியோர் பற்றிய தனிப்பாடல்கள் பாடியவர் - ஏறக்குறைய 10 ஆம் நூற்றாண்டு முதல் 13 ஆம் நூற்றாண்டு வரை
3. ஔவையார் -3 - ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி பாடியவர் ஏறக்குறைய 12 ஆம் நூற்றாண்டு முதல் 16 ஆம் நூற்றாண்டு வரை
4. ஔவையார் -4 - விநாயகர் அகவல், ஔவைக் குறள் பாடியவர் - ஏறக்குறைய 16 ஆம் நூற்றாண்டு
5. ஔவையார்-5-அவ்வை நிகண்டு, பிடக நிகண்டு (கிடைக்கப்பெறவில்லை) எழுதியவர் - ஏறக்குறைய 16 ஆம் நூற்றாண்டு
6. ஔவையார் -6 - அசதிக்கோவை, பந்தன் அந்தாதி, பெட்டகம் பாடியவர் ஏறக்குறைய 17ஆம் நூற்றாண்டு
7. ஔவையார் -7 - கல்வி ஒழுக்கம், கணபதி ஆசிரிய விருத்தம், வேழமுகம் பாடியவர் - ஏறக்குறைய 18 ஆம் நூற்றாண்டு

8. ஔவையார் -8 நீதி ஒழுக்கம், தரிசனப் பத்து பாடியவர் - ஏறக்குறைய 18 ஆம் நூற்றாண்டு

இவர் ஔவையார் பாடிய பாடல்களை வைத்துக் காலத்தைப் பகுத்திருப்பினும் ஒரே காலக்கட்டத்தில் அதாவது 16 ஆம் நூற்றாண்டில் மூன்று ஔவையார்களையும் 18 ஆம் நூற்றாண்டில் இரண்டு ஔவையார்களையும் கூறியிருப்பது முரணானது.

**கால பேதம்**

மேற்கூறியவற்றிலிருந்து ஔவை பற்றிய கால ஆராய்ச்சி ஒரு குறிப்பிட்ட முடிவுக்கு வரமுடியாததாகின்றது என்றே கூறலாம். சங்க காலத்தில் ஔவை பெயரால் வழங்கப்பட்டு வருகின்ற பாடல்களும், தனிப்பாடல்களில் ஔவைப் பற்றி கூறப்படுகின்ற செய்திகளும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன போல இருந்தாலும் அவையெல்லாம் இக்காலத்தில் இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களின் செய்திகளைத் தனக்கேற்றவாறு மாற்றி கவிஞர்கள் புதுக்கவிதைகளிலும், ஹைக்கூ கவிதைகளிலும் எழுதுவது போலவே கர்ண பரம்பரையாகக் கேட்டு எழுதியதாகவே கருதலாம். ஔவையார் வரலாற்றை எழுதிய அனவரதம் பிள்ளை அவர்களும் “இப்பாட்டுகள் பிற்காலத்தன என்பதற்கு அவற்றின் நடையும் அவற்றிற் காணும் பிரயோகங்களும் துணை செய்யும். புறநானூறு முதலிய பழந்தமிழ் நூல்களில் உள்ள அவ்வையார் பாட்டுகளை வாசித்தவர் இப்பாட்டுகளை வாசிக்கும்போது எளிதில் பேதம் காண்பர். இலக்கணக் கவிஞர் நிட்டூரம், மெச்ச, பந்தயம், சுணங்கன், மூர்க்கன், காசினி, தாலி, உதாரன், சூரன், பாக்கியசாலி, கலியாணம் என்னும் சொற்கள் பிற்காலத்துப் பாடல்களிலேயே காணப்படும்”[14] என்கிறார்.

தாயம்மாள் அறவாணன், கி.பி. 16, 17 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர் நீதி நூல்களை இயற்றிய ஔவையார் என்கிறார். அதற்கு காரணங்களாக அவர் கூறுவன:

- ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வாக்குண்டாம் ஆகிய நூல்களில் காணப்படும் விநாயகர் வணக்கம் கி.பி. 7ஆம் நூற்றாண்டிற்கு பிற்பட்டது.
- முதல் வரியையே நூல் பெயராக்கும் முறை பிற்காலத்தது.
- எழுத்துகளை அகரவரிசையில் முன்னிறுத்திப் பாடும் முறை கலிங்க மக்களிடமிருந்து வந்தது. கலிங்கத்திற்கும் தமிழகத்திற்கும் உள்ள தொடர்பு 14 ஆம் நூற்றாண்டிற்குப் பின் வந்தது.

ஆனால், விநாயகன் என்பது புத்தருக்கு வழங்கப்படும் பெயர்களுள் ஒன்றாகும். புத்த மதத்தை அசோகர் பரப்பியதற்குக் காரணமாக அமைந்தது கலிங்கப்போரே. புத்தமதம் சங்க காலத்திலேயே தமிழகத்தில் வேரூன்றியது. இவை மட்டுமின்றி அகர வரிசைப்படி எழுதும் மரபை நிகண்டுகளில் காணலாம்.

மூதுரை எழுதிய ஔவையாரை மு. அருக்ணாசலம் 12 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர் என்கிறார். தாயம்மாள் அறவாணனோ 15 ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவர் என்கிறார். அதற்கு அவர் கூறும் காரணம், ‘கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி’ என்ற மூதுரை 14 ஆம் பாடல். வான்கோழி இந்தியப்பறவை இனத்தைச் சார்ந்தது அன்று. அது ஐரோப்பிய பறவை. ஐரோப்பியர் வருகைக்குப் பின்தான் வான்கோழி தமிழகம் வந்திருக்க முடியும். ஐரோப்பியர் வருகை 14 ஆம் நூற்றாண்டின் இறுதியில்தான் தமிழகத்தில் நிகழ்ந்தது. எனவே, வான்கோழியைப் பற்றிப் பாடும் மூதுரை 15 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்கிறார். ஆத்திசூடியும், கொன்றைவேந்தனும் பள்ளிக் குழந்தைகளுக்கு கற்பிக்கவே எழுதப்பட்டது. எனவே, இவையும் 15 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததே என்கிறார். இக்கருத்துகளை மறுக்க தமிழண்ணலின் பின் வரும் கூற்றுகளையே ஆதரமாகக் கூறலாம்.

“கொன்றை வேந்தனின் இறை வணக்கச் செய்யுளாகிய, ‘கொன்றை வேய்ந்த செல்வன் அடியிணை என்றும் ஏத்தி தொழுவோம் யாமே’ என்பதைத் தொல்காப்பிய உரையாசிரியர்களாகிய பேராசிரியர், நச்சினார்க்கினியர் இருவரும் குறிப்பிடுவதோடு (தொல்.பொருள்.452) இளம்பூரணரும் பண்ணத்திக்கு (தொல்.பொருள்.483) உதாரணமாக எடுத்துக்காட்டுகிறார். பேராசிரியரும் (தொல்.பொருள்.384) ‘அட்டாலும்’ எனத்தொடங்கும் மூதுரைப் பாடலையும் காட்டாகக் காட்டியுள்ளார். இவ்வுரை ஆசிரியர்களுள் காலத்தால் முற்பட்ட இளம்பூரணர் கி.பி. 12 ஆம் நூற்றாண்டிற்குரியவர். பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் முறையே 13,14, ஆம் நூற்றாண்டுகளுக்குரியவர் என்பர் ஆய்வாளர்கள்.

கி.பி.13ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த மூன்றாம் குலோத்துங்க சோழன் மீது பாடப்பட்ட ‘குலோத்துங்க சோழன் கோவை’ நல்வழிப் பாட்டொன்றை ஆள்கிறது. ‘இட்டார் எப்போதும் இடுவார், இடார் என்றும் இட்டுண்கிலார், பட்டாங்கில் உள்ளபடியிதன்றோ’ என்பது ‘இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தார், பட்டாங்கில் உள்ளபடி’ என்ற ‘நல்வழி’ப் பாடலை அடியொற்றியுள்ளது.

கி.பி. 11ஆம் நூற்றாண்டினதென்று எண்ணப்படும் யாப்பருங்கல விருத்தியுரையும், 'கொன்றை வேய்ந்த....' எனத் தொடங்கும் கடவுள் வாழ்த்தை, 'செந்துறை வெள்ளைப் பா' என எடுத்துக் காட்டுகிறது (சூ. 69). இவற்றால் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி ஆகிய நான்கு நீதி நூல்களையும் பாடிய இடைக்கால ஔவையார் சோழப் பேரரசு சிறப்புற்றுத் திகழ்ந்த கி.பி. பத்தாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தவர் என்பது போதரும்"[15] என்கிறார் தமிழண்ணல்.

தமிழண்ணல் கூற்று மட்டுமின்றி மு. அருணாசலமும் "ஆங்கிலேயர் இந்தியா வந்தது 16 ஆம் நூற்றாண்டில் அதன் பின்தான் 'டர்கி' எனப் பெயருள்ள இப்பறவை இந்நாடு வந்தது. ஆகவே இப்பாடலுள்ள நூல் மிகவும் பிற்காலத்தது என்பது ஒரு சாரார் கூற்று. உண்மைவேறு. டர்கி என்பது துருக்கி. துருக்கியர் இந்தியா வந்தது 10 ஆம் நூற்றாண்டு என்பர். அப்போதே இப்பறவை துருக்கியர் வழியாக இங்கு வந்திருத்தல் வேண்டும்"[16] என்று கூறி வான்கோழி என்ற பறவையின் பெயரை மட்டுமே கொண்டு இந்நூல்களை பிற்காலத்தது என்பதை மறுக்கிறார்.

ஔவையைப் பற்றிய கதைகளும், வரலாறு குறித்த ஆய்வும் காலம் பற்றிய பேதங்களும் ஒரு முடிவுக்கு வரமுடியாத ஆய்வாகவே தொடர்கிறது என்றே கூறலாம். "வினோதக் கதைகள் யாவும் தெனாலிராமன் பெயரால் வழங்கப்பட்டு வருதல் போல கட்டுரைகள் யாவும் ஔவையார் பெயரால் வழங்கப்பட்டு வரும்"[17] என்பார் சுப்பிரமணிய ஆச்சாரியார். இங்கு கட்டுரைகள் என்பதை கட்டி உரைக்கப்படும் கதைகள் என்றே கொள்ளவேண்டும்.

'தமிழ் மகள் சொல்லிய சொல் அமிழ்தம் என்போம்' என்று ஔவையின் பாடல்களை அமிழ்தம் என்றார் பாரதியார். அமிழ்தம் போன்ற நல்ல நெறிகளைக் கூறிய ஔவை அக்கற்பனையான அமிழ்தத்தை உண்டு சாகாவரம் பெற்றிருப்பாரோ எனில் அதுவுமில்லை எனலாம். கருநெல்லியை உண்டதால் நீண்ட நெடுங்காலம் வாழ்ந்திருப்பாரோ என்றால் அதுவும் சாத்தியமில்லை.

"வரலாற்றுச் சான்றுகளோடு முரண்படும் நிகழ்ச்சிகளும் சூழ்நிலைகளும் அமைகின்றன. அவற்றோடு புனை கதைகளும் இணைந்து விடுகின்றன. மேலும் ஒரு கதைக்கும் மற்றொரு கதைக்கும் இடையே இருக்கும் ஒவ்வாமைகள்தாம் வரலாறு சாராத கூறுபாடுகளாக இருப்பதனை உணர்த்தி விடுகின்றன. நம்புவதற்கு அரிய நிகழ்ச்சிகளும் சூழ்நிலைகளும் தொடர்புறுத்தப் படுகின்றன. இயற்கைக் கடந்த நிகழ்ச்சிகளோடு இயற்கை மீறிய ஆற்றல்களும் மனிதர்க்கு உரியனவாய்ப் புனையப்பட்டு விடுகின்றன"[18] என்ற கருத்தே ஔவையார் பாடல்களுக்கும் கதைகளுக்கும் பொருந்தும்.

**அடிக்குறிப்புகள்**


1. பெ.சு.மணி, சங்க கால ஔவையாரும் உலகப்பெண்பாற் புலவர்களும், பூங்கொடி பதிப்பகம், சென்னை. ப.293
2. வரகவி. அ. சுப்பிரமணிய பாரதி, ஔவை அருந்தமிழ், கே.பழனியாண்டி பிள்ளைக் கம்பெனி, சென்னை. ப.4
3. பாலசுந்தரம் பிள்ளை, ஔவையார் திருவுள்ளம்,சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி ப.2
4. ம.பொ.சி, ஔவை யார்? பூங்கொடிப் பதிப்பகம், சென்னை. ப.5
5. அனவரதம்பிள்ளை, ஔவையார், வ.உ.சி. நூலகம், சென்னை. பக்.123,124
6. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், புலவர் புராணம், கலாரத்தினம் அச்சுக்கூடம், சென்னை ப.84
7. ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை, நற்றிணை உரை, ப.498
8. சுப்பிரமணிய ஆச்சாரியார், ஔவையார் சரித்திரம், ப.10
9. ப.சரவணன், ஔவையார் கலைக்களஞ்சியம், இராஜராஜன் பதிப்பகம், சென்னை. ப.17
10. டாக்டர்.மு. கோவிந்தசாமி, ஔவை, ப.4
11. பெ.நா.அப்புசாமி, முன்னுரை, பி.ஸ்ரீ, ஔவையார், அல்லயன்ஸ் கம்பெனி, சென்னை. ப.1
12. சாலை இளந்திரையன், சாலினி இளந்திரையன், தமிழ் தந்த பெண்கள், ப.31
13. மு.அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, பதினைந்தாம் நூற்றாண்டு, ப.459
14. அனவரதம்பிள்ளை, ஔவையார், வ.உ.சி. நூலகம், சென்னை. ப.107
15. தமிழண்ணல், ஔவையார், சாகித்ய அகாதெமி, புதுதில்லி பக்.56,57
16. மு.அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, பதினைந்தாம் நூற்றாண்டு, ப.502
17. சுப்பிரமணிய ஆச்சாரியார், ஔவையார் சரித்திரம், ப.43
18. தி. லீலாவதி, ஔவையார் பாடல்கள், தமிழ் இலக்கிய கொள்கை, ப.273


●


கட்டுரையாளர், உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, தருமமூர்த்தி இராவ்பகதூர் கலவல கண்ணன்செட்டி இந்துக் கல்லூரி, பட்டாபிராம், சென்னை – 72



கட்டுரை

# வண்ணதாசன் படைப்புகளில் பெண்ணியம்

அ.சாந்திராணி,
முனைவர் சா.சுஜாதா,

**பெண்ணியம்**

பெண்ணியம் என்பதை ஆங்கிலத்தில் *'Feminism'* என்று குறிப்பிடுவர். இந்த ஆங்கிலச் சொல் பெண்ணைக் குறிக்கும் *'Feminism'* என்ற இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து தோன்றியது. தமிழில் பெண்ணியம், பெண்நிலைவாதம், பெண்ணுரிமை, ஏற்பு என்ற சொற்கள் இதற்குரிய சொற்களாக வழங்கிவருகின்றன.

நவீனகாலம் என்று குறிப்பிடும்பொழுது நமக்கு அருகில் இருக்கின்ற நம்முடன் வாழ்கின்ற மக்களின் நிலையினைக் குறிப்பது மட்டுமின்றி அதற்கு முந்தைய காலப்பகுதியில் வாழ்ந்த வேறுபட்ட தன்மைகளைக் கொண்ட மக்களைப்பற்றியும் அறிவதற்கு உதவி செய்கின்றது. இவ்வாறு பல்வேறு சூழ்நிலைகளில் வாழ்ந்த மக்களைப் பற்றி நாம் அறிகின்ற பொழுது அதன்மூலம் வாழ்வின் மகத்துவத்தை அறிந்து காலநிலைக்கு ஏற்றாற்போல் வாழ்வதற்கும் அவ்வாறு வாழும்பொழுது ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான அனுபவத்தையும் தந்து நமக்கு உதவி செய்கின்றது.

வண்ணதாசன் நாற்பதாண்டு காலமாகத் தமிழ்ப் படைப்புலகத்தில் தலைசிறந்த படைப்பாளியாகவும் சிறந்த மாமனிதராகவும் திகழ்பவர். கவிதை, சிறுகதை என்ற இரண்டு பரிமாணங்களிலும் படைப்புலகை ஆட்சிசெய்து கொண்டிருப்பவர் வண்ணதாசன். "வண்ணதாசன்" என்ற

புனைப்பெயரில் சிறுகதைகளும் "கல்யாண்ஜி" என்ற புனைப்பெயரில் கவிதைகளும் எழுதிவருபவர். அவ்வாறு நவீன யுகத்தின் பிரதிநிதியாய் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு எழுத்துலகில் இயங்கிக் கொண்டிருப்பவர் வண்ணதாசன்.

**வண்ணதாசனும் பெண்ணியமும்**

பெண்கள் மீது அதீத அக்கறை கொண்டவர். பெண்களின் பாடுபொருள்களைப் புரிந்தே பாத்திரங்களைப் படைத்திருப்பார். பெண்கள் எந்த அளவு துன்பப்படுகிறார்களோ அந்த அளவு ஆண்களும் துன்பப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். சொல்லப் போனால் பெண்கள் துன்பம் அடைகிறார்களே என்று அக்கறைகொள்ளும் ஆண்கள் அந்தக் கரிசனம் காரணமாக அடைகிற துன்பம் அதைவிடத் துன்பமானது என்று குறிப்பிடுகிறார்.

வண்ணதாசன் "தோட்டத்திற்கு வெளியிலும் சிலபூக்கள்" பகுதியில் தன் வீட்டுப் பெண் துன்பப்படும் பொழுது அதைக்கண்டு மனம் கலங்கும் வீட்டு ஆணின் சூழ்நிலையினைப் பதிவு செய்யும்பொழுது,

"இவள் அழுவாள் என்று எதிர்பார்த்தது போல, இவள் அழுதிருக்கிறாளா என்று பார்த்துத் திருப்திப்பட்டுக் கொள்வது போல, சரசுவின் பக்கத்தில் வந்து தலைமாட்டில் உட்கார்ந்து, தலையணையில் நனைகிற முகத்தை ரொம்ப உக்கிரமாகக் கன்னத்தில் கையைக் கொடுத்துத் திருப்புவான். எதுக்கு அழுதுகிட்டு இருக்கே, சொல்லு, சொல்லு என்று திரும்பித் திரும்பிக் கேட்பான். உன்னைப் பிடிக்கவில்லை, என்று சொல்லாமல் குத்தி வாங்குகிறது போல இருக்கும் அது."[2] (தோ.வெ.சி.பூ.ப:22)

என்று கூறுகிறார். மனிதன் எல்லா நேரங்களிலும் அமைதியையும் ஆறுதல்களையும் தேடுவதில்லை. மனம்கலக்கம் கொள்ளும்பொழுது மட்டுமே மனம் சிலரின் ஆறுதல்களை எதிர்பார்க்கிறது. இக்கதையில் வரும் பாத்திரம்கூட ஒருவித புரிதல்களை நம்மிடம் விதைக்க நினைக்கிறது. சாதாரண குடும்பத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளைக் காணும்பொழுது அழுவதும் சிரிப்பதும் இயல்பான ஒன்றாகவும் அதற்கு ஆறுதல்படுத்தும் உறவுகளும் புதிதான ஒன்றும் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டி இயற்கையான நிகழ்வுகளைப் பதியவைக்கிறார்.

'கலைக்க முடியாத ஒப்பனைகள்' சிறுகதையில் 'மிச்சம்' தலைப்பில் பெண்ணின் உள்மன நிகழ்வுகளை விமர்சித்துள்ளார். இதனை,

"மறுபடியும் எழுந்திருந்து லைட்டைப் போட்டாள். எல்லாக் கதவும் சாத்தப்பட்டு, தான் மட்டும் தனியாக இருப்பதில் பத்திரமாக இருப்பது போலவும் இருக்கிறது. எல்லாக் கதவையும் சாத்திவிட்டு லைட்டைப் போட்டுக் கொண்டால் அவளுக்கு வருகிற சந்தோஷம் சிலசமயம் கதவைத் திறந்து போடாவிட்டால், தான் தற்கொலை பண்ணிக் கொண்டு விடுவோமோ என்ற பயம் வந்தவுடன் முடிந்து போகும். உடனடியாக ஒரு இம்மி அடைசல் இல்லாமல் எல்லாவற்றையும் விரியத் திறந்து உலகத்தைப் பக்கத்தில் வைத்துக் கொண்டால்தான் ஆயிற்று என்ற தவிப்பு வரும். இப்போது அந்தத் தவிப்பில்லை. தொண்டையில் மாத்திரம் கணகணவென ஏதோ எரிந்தது. ஒரு டீ குடிக்க வேண்டும் போல் இருந்தது."[3] (க.மு.ஒ.ப:16)

என்று விவரிக்கின்றார். இக்கதையின் ஒருபகுதி துன்பம் மிகுந்த வாழ்க்கையைக் காட்டுகிறது. பெயரில்லாத இளம்பெண் தனிமையில் வாழ்கிறாள். நம்பிக்கை என்பதில்லாமல் வெளியுலகச் சூழ்நிலையினால் அச்சுறுத்தப்பட்டவள். அவளின் தனிமையைப் பிற்காலத்தில் உணர்கிறாள்.

வண்ணதாசன் "நேர்காணல் அழியாச் சுடர்கள்" பகுதிக்காக அவர் கூறிய பதிவுகளில் பெண்களின் முன்னேற்றமானது எந்த அளவிற்கு வளர்ந்துவிட்டது என்பதையும் அவர் கதைகளில் பெண்களின் மீதான அக்கறை மிகவும் முக்கியமானது என்பதையும் அப்படியானச் சூழலில் பெண்களின் துன்பங்கள் பாதிக்கின்றது என்பதை மிகவும் தெளிவாக வெளிப்படுத்தி இருப்பதைக் காணமுடிகின்றது.

"அடிப்படையான உளவியல் காரணம் என்னவெனில், பெண்களே அதிகமிருந்த ஒருபெரிய கூட்டுக்குடும்பத்தின் மத்தியில், அம்மாவாலும், அம்மாச்சியாலும் நான் மிகுந்த பாதுகாப்புடன் வளர்க்கப்பட்டதே என்று சொல்ல வேண்டும். இப்போது அல்லவா பெண்கள் இவ்வளவு உரக்கவும் இவ்வளவு வெளிப்படையாகவும் சிரிக்கிறார்கள். நாற்பது, ஐம்பது வருசங்களுக்கு முன்பு எல்லாம் பெண்கள் உரக்க அழுவதையும், உரக்கச் சண்டைபோடுவதையும் தானே அதிகம் பார்க்கமுடியும். அன்பைத் தவிர வேறு எந்த தோளுமற்று, சதா ஒரு பூப்பந்தைப் போல அன்பை மட்டுமே தங்களின் ஒவ்வொரு கைக்குள்ளும் இருந்து மற்றவர் கைகளுக்குக் கடத்திக் கொண்டிருக்கிறவர்கள் தானே அவர்கள்."[4] (நே.கா.மார்ச்.10)

என்று கூறியுள்ளார். ஆணை மையமிட்ட குடும்பத்தில் அனைத்து முடிவுகளையும் எடுப்பவனாகவும் தன் கருத்துக்களை மற்றவர் மீது கட்டாயப்படுத்துபவனாகவும், திணிப்பவனாகவும் உள்ளான்.

நாம் செய்யும் செயல்கள் அனைத்தும் சரி என்று குடும்பத்தில் வாழும் தலைவன் எண்ணுதல் முற்றிலும் தவறானது. குடும்பத்தில் கணவன் - மனைவி இருவரும் ஒளிவு மறைவு இன்றி ஒரு பிரச்சனைக்குத் தெளிவான முடிவினை எடுக்கவேண்டும் என்று கூறநினைக்கும் வண்ணதாசன் "பெயர் தெரியாமல் ஒரு பறவை" சிறுகதைப் பகுதியில்,

"வீட்டு பொம்பளைகிட்ட என்றைக்குயோசனை கேட்டாரு. இன்றைக்கு கேட்க, அப்படிக் கேட்டாத்தான் எம்புட்டோ இதுக்குள்ளே குடும்பம் முன்னிலைக்கு வந்திருக்குமே. முன்னே பின்னே யோசிக்காம இப்படிச் சொல்லிக்கிட்டிருக்கிற மனுஷனை என்ன பண்ண."[5] (பெ.தெ.ஒ.ப.ப:16)

என்று கூறுவதின் மூலம் ஒரு பெண்ணின் எதிர்பார்ப்பும் முக்கியத்துவமும் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது. அன்றைய காலத்தில் இருந்த பெண்ணடிமைத்தனம் இன்றைய சூழலில் இல்லை என்றாலும். பெண்கள் மீதான அடக்குமுறைகள் இன்றளவும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. சில இடங்களில் பெண்களை இழிவுபடுத்துவதும், பொருட்படுத்தாதச் சூழலும் நிலவுவதைக் காணலாம்.

வண்ணதாசன் "மனுஷா மனுஷா"வில் மனிதனின் அனுபவ நிலையை,

"இந்த விஷயத்தை எவ்வளவு இயல்பாகச் சொல்ல முடியுமோ அவ்வளவு இயல்பாக ஆச்சி சொன்னதுகூட ஆச்சரியமில்லை அந்தக் காலத்து அனுபவம், அந்தக் காலத்துப் பெருந்தன்மை, அதற்குச் சரியாக இருந்திருக்கும். இந்த விஷயத்தை என்னுடைய வீட்டுக்காரியும் அதே அளவு இயல்புடனும் மரியாதைக்குப் பழுதில்லாமலும் ஏற்றுக்கொண்டது எப்படி என்று விளங்கவில்லை."[6] (ம.ம.ப:62)

என்று கூறுவதன் மூலம் அந்தக்காலத்தில் இருந்த பொறுமை, பெரியோர்களை மதிக்கும் தன்மை, அவர்கள் கூறும் வார்த்தைக்கு மறுபேச்சு பேசாமல் ஏற்றுக்கொள்ளும் தன்மை, அத்தகைய மனித மனநிலை இன்று இல்லை என்பதை நாம் அறியமுடிகிறது. அக்காலத்தில் இருந்த பெருந்தன்மையை இன்று காணமுடிவதில்லை. எதையும் இயல்பாக ஏற்றுக்கொண்டு வாழ்ந்த அந்தக்கால மனிதர்களை இன்று காண்பது அரிதான ஒன்றாக இருக்கின்றது.

வண்ணதாசன் "கமழ்ச்சி"யில் கணவனை இழந்த பெண்ணுக்கு ஏற்படும் அவலநிலைகளையும் சமூகத்தால் அவளுக்கு ஏற்படும் அவச்சொற்களையும் எடுத்துரைக்குமாறு உள்ளது.

"இன்னும் எதுக்கு சுப்பையா அதை மூலையில் வச்சுக்கும் பிட்டுக்கிட்டு இருக்கே ஊருஉலகத்தில உனக்குத் தெரிஞ்ச பேரு எத்தினி இருப்பாங்க கஷ்டப்பட்டவன், நஷ்டப்பட்டவன் இருந்தால் வச்சுப்பொழச்சுக்கச் சொல்லித் தூக்கிக் கொடுத்திர வேண்டிய தானே. கடலு வத்திப்போன இடத்தில் எம்புட்டுக் காலம் உப்பைக் கொட்டி வச்சுப்பார்த்துக் கிட்டு கிடப்ப. பரமனின் அம்மா அவ்வளவு வருத்தத்திலும் அப்படித்தான் இப்படி எதாவது ஜாடையாகச் சொல்வாளே தவிர, பாண்டியம்மாளைப் பற்றி இதுவரை இந்த இரண்டு சொச்சவருடத்திலும் இவன் காதுபட அசிங்கமாக எதுவும் சொன்னதில்லை." [7] (க.ப:57)

என்கிறார். குடும்பம் என்னும் உறவுக்குள் நுழையும் நிமிடம் அது. இறுதிவரை குடும்ப உறவாக, எந்த இழப்பும் இல்லாமல் இருந்தால் மட்டுமே சமூகம் நம்மை ஏற்றுக்கொள்ளும். இதில் கணவன் இல்லாமல் மனைவியோ, மனைவி இல்லாமல் கணவனோ வாழ்ந்தோமேயானால் இதைவிடத் துன்பம் வேறு எதுவுமில்லை. சமூகத்தின் பார்வையும் தவறாகவே இருக்கும். இதன் நிமித்தம் விழுமியத்தில் பாதிப்புகள்தான் ஏற்படும். குடும்பம் என்ற அமைப்பு சிதைவுறாமல் ஆணும் பெண்ணும் நடத்தும் இனிய இல்லறத்தையே ஆசிரியர் முன்வைக்கின்றார். சமூகத்தின் விதிமுறைகள், கட்டுப்பாடுகள் இவற்றில் வண்ணதாசன் ஆதரிக்கவோ எதிர்க்கவோ இல்லை. எதார்த்தத்தை கேள்விகளின்றி ஏற்றுக்கொள்ள வலியுறுத்துகிறாரோ என எண்ணத் தோன்றுகின்றது.

எனவே வாழ்க்கை என்பது ஒவ்வொரு நிமிடமும் புரிந்து கொண்டு வாழவேண்டும் என்பதையும், அத்தகைய வாழ்க்கையில் குறிக்கோளோடு வாழ்ந்து முன்னேற வேண்டும் என்பதையும் அம்முன்னேற்றமானது ஆண் - பெண் பாகுபாடு ஏதுமின்றி சமஅளவில் இருத்தல் வேண்டும் என்பதையும் அவ்வாறு இருக்கும் பொழுதான் நாடும் வீடும் வளர்ச்சியடையும் என்றும் சமவாய்ப்பானது பாரபட்சம் பாராமல் அனைவருக்கும் வழங்கும் பொழுது இவ்வுலகம் மாற்றங்களைக்கண்டு வளர்ச்சிப்பாதையில் பயணிக்கும் என்பதையும் வண்ணதாசனின் படைப்புகளின் வழி இக்கட்டுரையின் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது.

●

*கட்டுரையாளர்கள்*

அ. சாந்திராணி, முனைவர் பட்ட ஆய்வாளர்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

முனைவர் சா. சுஜாதா, இணைப்பேராசிரியர்
மற்றும் தமிழ்த்துறைத்தலைவர்,
ஜி.டி.என். கலைக்கல்லூரி, திண்டுக்கல் – 624 005.

நூல் அறிமுகம்



# பால்யத்தை எழுதுதல்

ஹமீம் முஸ்தபா

குமரி ஆதவன் கன்னியாகுமரி மாவட்டத்துக்காரர். சமகால எழுத்தாளர்களுள் குறிப்பிடத்தக்கவர். அவரின் சமீபத்திய வரவு ‘ஆட்டுக்குட்டியின் அலறல்’. வேரல் புக்ஸ் வெளியீடாக வந்திருக்கும் கவிதைத் தொகுதி.

வாழ்கையைப்போலவே மொழியும் பன்முகப்பட்டது. பன்முகப்பட்ட வாழ்க்கை, மொழிகளில் தன் சொந்த முற்றத்தில் கொஞ்சம் எடுத்து இந்தப் பிரதியின் வழியாகத் தந்திருக்கிறார் ஆதவன்.

அழிந்துபோன பால்யம், நிறுவன கிறிஸ்தவ மதம் இவற்றைத்தான் பிரதியின் பெரும்பாலான கவிதைகள் பிரதிபலிக்கின்றன. பால்யத்தை எழுதுகையில் ஓர் இழப்பின் வலியையும் நிறுவனப்படுத்தப்பட்ட மதத்தை எழுதும்போது அறம்சார் சீற்றத்தையும் கவிதைகளுக்குள் கொண்டுவரும் முயற்சியில் இறங்கி இருக்கிறார். வெற்றியும் பெற்றிருக்கிறார்.

நாவலில் இடம்பெறுவதுபோல் ஏராளமான கதாபாத்திரங்கள் கவிதைப் பிரதிக்குள் வந்து செல்கிறார்கள். அருளாயிப்பாட்டி, காளியம்மா, அவரின் பீடி, மரியம்மா, உறவுத்தா, அவரின் மீன் கூடை என்று பெண் கதாபாத்திரங்கள்; பானை உடைச்சான் தாத்தா, ரெத்தினம் தாத்தா, ஆசான், ராப்பாடி, வெள்ளை சாகிப்பு, அப்பா என்று ஆண் பாத்திரங்கள்; இவர்கள் போக மணி, பத்தாயம், பனைமரம், உலக்கை என்று புழங்கு பொருட்களும் இயற்கையும் பிரதிகளில் இடம்பெறுகின்றன.

இவர்கள் ஒவ்வொருவரின் வழியாகவும் தொலைந்துபோன தன்னுடைய கிராமத்தை அவர் மீண்டும் எழுத்தின் வழியாக மீட்டுருவாக்கம் செய்ய முயற்சித்திருக்கிறார். நம்முடைய பார்வைக்கு கிராமம் என்பது இயல்பாக எந்தவிதமான பாகுபாடும் பார்க்காத நிலமாய்த் தோன்றும். ஆனாலும் அந்தக் கிராமம் எப்படி இயல்பற்றும் இருந்தது என்பதைக் கவிதையின் பல்வேறு குரல்கள் நமக்கு உணர்த்திவிடுகின்றன.

தலைச்சுமடில் மீன்விற்கும் பெண்ணை முக்குவச்சி என்றுதான் பொதுசமூகம் பார்த்தது. உறவுத்தாவாக பார்ப்பது எல்லாம் பெரும்பேறு. முக்குவச்சி என்பது வெறும் தொழில்சார் அடையாளம் மட்டுமல்ல. அந்த அடையாளத்தின் மீது சுமத்தப் பட்டிருக்கும் நாற்றம், சுத்தம், அசுத்தம் உள்ளிட்ட பண்பாட்டு மதிப்புகளையும் உள்ளடக்கியது. ஒவ்வொருவரின் சாதி குறித்து அறிந்துகொண்டே மனிதர்கள் எப்படி அறியாதவர்கள் போல் இயல்பாக இருந்தார்கள் என்பதை ஆதவனின் கவிதைகள் நமக்குக் காட்டித்தருகின்றன.

ஒருகாலத்தில் உள்ளூர் பெண்களின் பிரசவம் பார்க்கும் மருத்துவச்சியாக இருந்து பிறகு காஜாபீடி வலித்துக்கொண்டே உடல் உழைப்பால் தன்னுடைய வாழ்க்கையைக் கடத்திச்செல்லும் காளியம்மா, நாயர் வீட்டில் வேலை செய்கிறார், தண்ணீர் எடுக்கிறார், அவர்கள் வீட்டு அழுக்குத் துணிகளை துவைக்கிறார். வயோதிகம், மரணம், உடல் எரித்தல் என்று அந்தக் கவிதையில் வாழ்ந்து முடிக்கிறாள். வாழ்ந்து முடிக்கும் காளியம்மா அம்பட்டச்சி காளியாகவே கடைசியில் மிஞ்சுகிறாள்.

"தட்டான்குளக்கரையில் காளியம்மா எரிகையில் / ஒரு நூற்றாண்டுக்கான காஜா பீடியும் / சேர்த்தே புகைத்ததாய் ஒரு நினைவு;/ விடாது பற்றிப்படர்ந்து/ கொளுப்பேறிக்கிடந்த/ விஷச்செடி அருகே நின்ற கூட்டம் சொன்னது/ அம்பட்டச்சி காளி எரிகிறாளென்று" *(ப.60)*

தவறவிட்ட பால்யம், கவிதை சொல்லி-யிடமிருந்து மட்டுமல்ல, மண்ணில் இருந்தும் தவறி-விட்டது. அதன் அழுகுரலை கேட்கும் நிலையை நம்முடைய செவிப் புலன் இழந்தும் விட்டது இல்லாவிட்டால்,

"ஏதோவொரு சுழல் காற்று/ காதுகிளியும் அலறச்சத்தம் / காக்காய்களின் அழுகை / குயில்களின் முகாரி பாட்டு / வவ்வால்களின் ஓலம் / இவற்றிற்கிடையில் கர்ஜித்தன பனைகள்" *( ப.51)* இவற்றுள் ஒன்று கூட நமக்குக் கேட்காமல் இருந்திருக்குமா?

பால்யத்தை எழுதும்போது எழுதுபொருள் சார்ந்த எதனையும் விட்டுவிடக்கூடாது என்னும் எண்ணத்தில் மேய்த்துக் கொண்டிருப்பவனின் கையில் இருந்து கயிறு நழுவும்போது கால்நடை தன்போக்கில் செல்வதுபோல் கவிதையும் ஆங்காங்கே அதன்போக்கில் செல்கின்றன. ஒரு காலத்தில் குருவிகள் இருந்தன, பானை உடைச்சான், கலப்பை, பனைமரம் பேசிய கதை, காளியம்மாவும் காஜா பீடியும், பாட்டியின் சமையலறை, செபமாலையோடு அப்பா என பல கவிதைகள் இந்தச் சிக்கலில் மாட்டிக்கொண்டுள்ளன.

தொகுப்பின் இன்னொரு பகுதி கத்தோலிக்க கிறிஸ்தவம் மீதான பார்வை. நிறுவனப்படுத்தப்பட்ட மதங்களைப் பொறுத்தவரை அவற்றுள் இருக்கும் சிக்கல்கள் நுண் அடுக்குகளுக்குள் ஒளிந்து எளிய மக்களை வேட்டையாடுகின்றன. திருச்சபைகள் வணிகத்தை மையப்படுத்திய செயல்பாட்டை தீவிரமாக மேற்கொண்டு வருகின்றன. கல்வி (குறிப்பாக சுயநிதி கல்வி நிறுவனங்கள்), மருத்துவம், இதர தொழில்கள் என்று அது பரந்து கிடக்கிறது. இவற்றின் வழியான மூலதனக் குவிப்பு, அதன்மீதான அதிகார மோதல் என சபைகளின் அரசியல் மாறி-விட்டது. பல்வேறு சிக்கல்கள் உருவாகி அது அதிகாரப் படி நிலைகளையும் எளிய மக்களையும் பாதிக்கத் தொடங்கிவிட்டன. இவற்றை ஆழமாக பதிவு செய்துள்ளார் ஆதவன். ஆனால், கத்தோலிக்க மதம் சாராத ஒரு வாசகனுக்கு சில சொற்கள் பொருள்மயக்கம் தரும் அவற்றைத் தவிர்த்திருக்கலாம். சிக்கலில் சாமிகள் என்னும் கவிதை இவ்வகைப்பட்டது. சாமி என்னும் சொல் கத்தோலிக்கத்திற்கு வெளியில் என்னவாகப் புரிந்துகொள்ளப்படும் என்னும் கேள்வியும் எழுகிறது.




(ஆட்டுக்குட்டியின் அலறல், குமரி ஆதவன், விலை : 160 ரூ. வெளியீடு : வேரல் புக்ஸ், சென்னை.)

நிறைவாக தொகுப்பில் இடம் பெற்றிருக்கும் முதல் கவிதை. அந்தக் கவிதையின் தலைப்பே தொகுப்பின் தலைப்பாகவும் இருக்கிறது. 'ஆட்டுக்குட்டியின் அலறல்'. ஆப்ரஹாமிய மதங்கள், நம்பிக்கைகளுக்குள் இருக்கின்ற தொன்மம் ஒன்றை எடுத்து கவிதையாக்கி இருக்கிறார் கவிஞர். ஆப்ரஹாமின் பக்தியை சோதிக்க விரும்பிய கடவுள் அவருடைய மகனை தனக்காகப் பலியிடச் சொன்னார். கடவுளின் வாக்கினை செயல் படுத்த ஆப்ரஹாம் முற்படும்போது கடவுளால் தடுத்தாள் செய்யப்பட்டு மகனுக்குப் பதில் ஆடு பலிகொடுக்கப்பட்டது என்பது தொன்மம்.

மேய்ப்பன், ஆடு, மந்தை போன்ற சொல்லாடல்கள் ஆப்ரஹாமிய மரபுக்குள் தொடர்ந்து புழங்கப்பட்டு வருகின்றன. மோசே, இயேசு போன்ற தூதர்கள் மேய்ச்சல் சார்ந்து அடையாளப்பட்டார்கள். எப்போதும் மேய்ப்பர்கள் பத்திரமாக இருக்கிறார்கள். அல்லது கடவுளின் பாதுகாப்பில் இருக்கிறார்கள். ஆட்டுக்குட்டிகள்தான் பாவம் எப்போதும் பலிபீடம் செல்கின்றன. தாய் ஆட்டின் கதறலும் குட்டியின் கதறலும் ஒரு போதும் கடவுளின் வெளியில் பிரவேசித்ததில்லை. குஜராத்தில் என்றாலும், பாலஸ்தீனத்தில் என்றாலும், மணிப்பூரில் என்றாலும், காஷ்மீரில் என்றாலும் குட்டிகளும் தாய்களும் சாகக்கடவான்கள்.


இந்தத் தொகுப்பை அன்பு அண்ணன் ஹெச்.ஜி.ரசூல் அவர்களுக்கு அர்ப்பணித்து இருக்கிறார். நிச்சயம் அவர் மகிழ்ந்திருப்பார்.

●

**கட்டுரையாளர், எழுத்தாளர்**

# ‘கபிலம்’ வழி வெளிப்படும் ம.ரா.போ வின் உரைத்திறன்


முனைவர் மா.கார்த்திகேயன்



சங்க காலப் புலவர்களில் அதிக எண்ணிக்கையில் அமைந்த பாடல்களைப் பாடிய பெருமையும், குறிஞ்சித் திணைப் பாடல்களைப் பாடுவதில் தனித்துவமும் பெற்றுத் திகழ்ந்தவர் கபிலர். சங்க இலக்கியத் தொகுப்பில் இவர் பாடிய பாடல்களின் எண்ணிக்கை 235 ஆகும். இவரின் பாடல்களைப் பற்றி உரையாசிரியர்களும் திறனாய்வாளர்களும் பல்வேறு நோக்கில் நுணுகி ஆராய்ந்து தம் கருத்தினை வெளிப்படுத்தி வருகின்றனர். அவ்வகையில் தமிழ் கூறும் நல்லுலகில் ம.ரா.போ என அனைவராலும் அன்போடு அழைக்கப்பட்ட பெருமைக்குரியவர் மம்சாபுரம் ராக்கப்பிள்ளை போத்திலிங்கம் குருசாமி அவர்கள் ‘கபிலம்’ என்ற நூலில் கபிலரின் பாடல்களுக்கு உரை வகுத்துள்ளார். அவரின் உரையில் காணப்படும் உரைத்திறனை வெளிக்கொணர்வதாக இவ்வாய்வு அமைகின்றது.

**சொற்பொருள் விளக்குதல்**

கபிலர் பாடல்களுக்கு உரை எழுதும்போது எண்ணற்ற சொற்களுக்கு மிக நுட்பமாகவும் சுவையாகவும் பொருள் விளக்கம் தரும் போக்கினை ம.ரா.போ வின் உரையில் காண முடிகின்றது.




கபிலம்: கபிலர் பாடல்கள் - அறிமுக விளக்கம் / ம.ரா.போ.குருசாமி விலை: ரூ.390/- வெளியீடு: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்

இதற்கு, "கவ்வை - (ஊரார் தமக்கு மறைவாகப் பேசி) காதலர் பற்றி ஒரு மாதிரியாக பேசும் அலர்" (கபிலம், பக்.18) என்றும், "கையுறை - கையில் சேர்ப்பது காணிக்கை அன்பளிப்பு" (கபிலம், பக்.63) என்றும், "கன்னம் - நோய் தணிப்பதற்கு வழிபாட்டு இடத்திற்குச் செய்து கொடுக்கப்படும் பிரதிமை (பொம்மை); தாயத்து என்றும் சொல்லலாம்" (கபிலம், பக்.103) என்றும் வரும் உரைகள் சான்றாகும்.

**ஒரு சொல்லுக்குப் பல பொருள் தருதல்**

ஒரு சொல்லுக்கு உரிமை உடைய ஒரு பொருளை மட்டும் கூறாமல் அச்சொல்லுக்குரிய பல பொருள்களையும் சுட்டி உரை எழுதும் தன்மையைக் காண முடிகிறது. இதற்கு, "மாதர் என்ற சொல் காதல், அழகு, மகளிர் என்ற பொருள்களை உடையது, இங்கே கண்டோர் விரும்பும் அழகு எனப் பொருள் உரைக்கப்பட்டது" (கபிலம், பக்.441) எனவும், "பசி - பசுமை, ஈரம், நாய் எனப் பல பொருள் உடையது. மழையால் நனைந்தது என்றால் ஈரம் எனக் கொள்ளலாம்; வேட்டை நாயும் உடன் வந்ததெனக் கருதினால் நாய் எனக் கொள்ளலாம்" (கபிலம்,பக்.57) எனவும் வரும் உரைகள் சான்றாக அமைந்துள்ளன.

**அணி நயத்தினைச் சுட்டுதல்**

புலவர்கள் பல்வேறு அணிநயங்களைப் பயன்படுத்தி தம்முடைய செய்யுளைச் சொல்லாலும் பொருளாலும் அழகுற எடுத்துரைப்பர். அவ்வகையில் கபிலரும் தம் பாடல்களில் பல்வேறு அணி நயங்களை கையாண்டு உள்ளார். ம.ரா.போ கபிலர் கையாண்ட அணி நயங்களை ஒரு சில இடங்களில் எடுத்துக்காட்டி உரை வகுத்துள்ள தன்மை போற்றுதற்குரியது. ''இயல்பு நவிற்சியையே பெரிது இயல்பாகக் கொண்ட சங்க இலக்கியத்துள் கவிதைச் சுவையின் பெயரால் ஆங்காங்கே உயர்வு நவிற்சியும் இடம் பெற்றுள்ளது. மலையுச்சியில் விழும் மழைத்துளிகளின் எண்ணிக்கையை விட காரி வழங்கிய தேர்களின் எண்ணிக்கை மிகுதி! சொல்வது கபிலர்! வாழ்க உயர்வு நவிற்சி!'' (கபிலம், பக்.513) என்று புறநானூறு 123 ஆவது பாடலின் உரையின் வழி அறிய முடிகின்றது.

**இலக்கண விளக்கம் தருதல்**

ம.ரா.போ கபிலர் பாடல்களுக்கு உரை எழுதுகின்ற போது தேவைப்படுகின்ற இடங்களில் இலக்கணக் குறிப்புகளையும் இலக்கண விளக்கங்களையும் எடுத்துக்காட்டி உரை எழுதியுள்ளார். "மனை என்றது ஆகுபெயரால் வீட்டில் உள்ளவர்களைக் குறித்தது'' (கபிலம், பக்.20); "நம் என்பது நட்பொற்றுமை சுட்டுகின்ற உளப்பாட்டுத் தன்மைப் பன்மை"(கபிலம், பக்.79); "பின் - பின்னுதல் (முதல் நிலைத் தொழில் பெயர்)" (கபிலம், பக்.224); ''கூந்தல் என்ற ஒருமை பெயர் உரிய என்ற பன்மை முற்றினைப் பெற்றது. "கூந்தல் ஐந்து பகுதியாக அணி செய்யப்படுவதால்'' (கபிலம், பக்.315) எனவரும் சான்றுகளின் அடிப்படையில் ஆழ்ந்த இலக்கணப் புலமையினை அறிந்து கொள்ள முடிகின்றது.

**பிறர் உரையைச் சுட்டலும் மறுத்தலும்**

கபிலர் பாடல்களுக்குத் தனக்கு முன்பு உரை எழுதிய உரையாசிரியர்களின் கருத்துக்களைப் பல இடங்களில் எடுத்துக்காட்டுகின்றார். மேலும் அவர்களின் கருத்தினை ஏற்க வேண்டிய இடத்தில் ஏற்றும், மறுக்க வேண்டிய இடத்தில் மறுத்தும் உரை எழுதி உள்ள தன்மை போற்றுதற்குரியது. உரையாசிரியரின் கருத்துக்களை ஏற்றுக் கொண்டதற்கு, "பல வீடுகள் சேர்ந்திருப்பது சேரி என விளக்குவர் பின்னத்தூர் நாராயணசாமி ஐயரவர்கள்" (கபிலம், பக்.348) என்றும், "மன்னன் என்றது தலைமகனை எனப் பழைய உரை குறித்திருப்பது மனம் கொள்ளத்தக்கது" (கபிலம், பக்.154) என்றும் வரும்

உரைகளின் வழி அறிய முடிகின்றது. ஐங்குறுநூறு 252 ஆவது பாடலில் பேராசிரியரின் கருத்தினை மறுத்துரைத்ததை, "தொல்காப்பிய உவம இயலில் இதனை உள்ளுறை யுவமம் எனப் பேராசிரியர் குறித்தார்; இக்கருட்பொருள் காட்சி இன்றெனினும் உரிப்பொருள் தெரிய இடமிருப்பதால், இதனை இறைச்சியெனக் கொள்ளுதல் சீரிது" (கபிலம், பக்.111) எனவரும் உரைப்பகுதியின் வாயிலாக அறியலாம்.

**இலக்கியப் புலமை**

உரையாசிரியர்கள் தம்முடைய கருத்திற்கு வலிமை சேர்க்கும் பொருட்டு இலக்கண, இலக்கிய மேற்கோள்களைத் தம்முடைய உரைகளில் பயன்படுத்துவர். அவ்வகையில் ம.ரா.போ பல்வேறு இடங்களில் பிற இலக்கியப் பாடல்களை குறிப்பிட்டு தம்முடைய இலக்கியப் புலமையை வெளிப்படுத்தி உள்ளார். சங்க இலக்கியம் முதல் பாரதியார் கவிதைகள் வரை உள்ள இலக்கிய பாடல்களைத் தம்முடைய உரையில் எடுத்தாண்டு உள்ளார். திருக்குறளின் கருத்தை "இசைப்பட வாழ்பவர் செல்வம் என்ற தொடருடன் ஈதல் இசைப்பட வாழ்தல் என்ற குறள் தொடரை ஒப்பிட்டுக் காண்க" (கபிலம், பக்.350) எனக் குறிப்பிட்டுள்ளார். ஒரே கருத்தினை வெளிப்படுத்தும் பாடல் அடிகளை ஒருங்கே குறிப்பிட்டு உரை எழுதி உள்ளதை "வேங்கை மலரை பறிக்க நினைப்பவர்கள் புலி புலி என்று ஆரவாரம் செய்வர் என்பது ஓர் இலக்கிய வழக்கு. (மதுரை:296-7); (மலைபடு:305-6); (அகநா:48:6-7;52:2-4)" (கபிலம், பக்.317) எனவரும் சான்றின் மூலம் அறிய முடிகின்றது. சுடர்த்தொடீஇ! கேளாய்! எனத் தொடங்கும் கலித்தொகைப் பாடலுக்கு உரை எழுதுகின்ற போது "தேசியக்கவி சுப்பிரமணிய பாரதியாரின் தீராத விளையாட்டுப் பிள்ளை' எனத் தொடங்கும் கவிதையோடு ஒப்பிட்டு உணரத் தகுந்த நயமான கற்பனை" (கபிலம், பக்.232) என்று பாரதியாரின் கவிதைகளையும் மேற்கோள் காட்டி உரை வகுத்துள்ளார்.

**திறனாய்வாளரின் கருத்துகளை எடுத்துரைத்தல்**

ம.ரா.போ தம்முடைய உரையில் மு.வரதராசனார், வ சுப மாணிக்கனார், வேங்கடராசுலு ரெட்டியார், பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை, இரா. ராகவ ஐயங்கார் போன்ற அறிஞர்களின் கருத்துக்களைப் பயன்படுத்தி உரை எழுதிய பாங்கு போற்றுதற்குரியது. குறிஞ்சிக் கலித்தொகை 26 ஆவது பாடலின் உரையில் வ சுப மாணிக்கனார் கருத்தை, "பெருந்திணையையும் அகத்திணையையும் சேர்த்தே விளக்கும் அறிஞர் வ சுப மாணிக்கம் இப்பாடலை பெருந்திணைக்குரியதாக ஏற்கவில்லை. தலைவனும் தலைவியும் உறழ்ந்து பேசுவதை ஊடலாகவே விளக்கியுள்ளார். அவர்தம் கருத்து மேலும் ஆராய்வதற்கு உரியது என்ற அளவில் இங்கு நிறுத்துவோம்" (கபிலம், பக்.274) என்று எடுத்துக்காட்டியுள்ளார்.

**சமூகவியல் நோக்கில் உரை எழுதுதல்**

உரையாசிரியர்கள் நூலுக்கு உரையெழுதுகின்ற போது அந்நூல் குறிப்பிடுகின்ற சமூக நிலையினைச் சுட்டிக்காட்டி உரை எழுதுவர். அவ்வகையில் ம.ரா.போ உரை எழுதுகின்ற போது நூல் இயற்றப்பட்ட காலத்தில் இருந்த சமூக நிலையிலும் தற்போது உள்ள சமூக நிலையினையும் ஒருங்கிணைத்து உரை எழுதியுள்ள தன்மை சிறப்பானதாகும். ஐங்குறுநூறு 292 ஆவது பாடலுக்கான உரையில் "இரண்டாம் மணத்தைத் தடை செய்ய சட்டம் இருக்கிற காலம் நம் காலம். ஆனால் சமுதாய வழக்கம் சட்டப்படி இருக்கிறது என்று சொல்ல முடியாது. இரண்டாம் தாரம் மட்டுமின்றித் திருமண முறைக்கும் மாறான தொடர்புகளும் இன்றும் இருக்கவே செய்கின்றன. ஆடவர் மேலாண்மையின் கோளாறு இது. சங்க காலத்தில் மறுதார மணமும் பரத்தையர் பழக்கமும் இருந்தன என்பதில் ஐயமில்லை" (கபிலம், பக்.157) என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வுரையானது சமூகம் சார்ந்த கண்ணோட்டத்தோடு அமைந்திருப்பதை அறிய முடிகின்றது.

**முடிவுரை**

திறனாய்வாளர், மொழிபெயர்ப்பாளர், பதிப்பாளர் எனப் பன்முகத்தன்மை கொண்டு விளங்கிய பெருந்தகை ம.ரா.போ குருசாமி. கபிலர் பாடல்களுக்கு உரை கண்டதன் வாயிலாக ம.ரா.போ ஒரு சிறந்த உரையாசிரியர் என்பதையும் அறிய முடிகின்றது. சொற்பொருள் விளக்குதல், ஒரு சொல்லுக்குப் பல பொருள் தருதல் நிலையில் ம.ரா.போ வின் தமிழ்ச்சொல் ஆளுமையை அறிந்து கொள்ள முடிகின்றது. இலக்கண விளக்கம் தருதல், அணி நயத்தினைச் சுட்டுதல், இலக்கியப் புலமை, திறனாய்வாளரின் கருத்துக்களை எடுத்துரைத்தல் ஆகியவை இலக்கணம் மற்றும் இலக்கியத்தில் ம.ரா.போ வின் ஆழ்ந்த புலமையினை வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளது.

●

கட்டுரையாளர், உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை, பி எஸ் ஜி கலை அறிவியல்
கல்லூரி, கோவை – 14.

கட்டுரை



# தொல்காப்பியமும் இலக்கணநிலை வழுவமைதியும்

ஸ்ரீ. மணிகண்டன்

இலக்கணமென்பது மொழியின் அமைப்பியல் புகளைப் பற்றிய விளக்கமாகும். இந்த அமைப்பியல் பற்றிய விளக்கமாவது விதிமுறையாகவோ அல்லது வரையறையாகவோ இல்லாமல் மொழியின் பயன்பாட்டுத் தளங்களையும் அதன் இயல்பான போக்குகளையும் விளக்குவதாக அமையும். அவ்வாறான நிலையில் தமிழ் மொழியின் பயன்பாட்டுத்தளங்களோடு இணைத்து மொழியின் அமைப்பியல்புகளை விளக்கும் இலக்கணமாகத் தொல்காப்பியம் இருக்கிறது. அந்தவகையில், தொல்காப்பியம் மொழியின் இலக்கணத்தை அதன் இயல்பான போக்குகளிலிருந்து விளக்கும் இலக்கண நூலாக இருக்கின்றது. தொல்காப்பியம் இவ்வாறு, வழக்கு, செய்யுள் எனும் இருவகைத் தரவுகளினூடாக மொழியைப் பகுப்பாய்வு செய்கிறது. எனவேதான் குறிப்பிட்ட பொருண்மை பற்றி குறிப்பிடும் தொல்காப்பியம் அப்பொருண்மைகளைக் கடந்தியங்கும் முறையியல்கள் குறித்தும் விளக்குகின்றது. உதாரணமாக, வேற்றுமையியல் குறித்துப் பேசும் தொல்காப்பியம், வேற்றுமைகளின் இயல்பைக் கடந்தியங்கும் முறைகளை வேற்றுமை மயங்கியலில் பேசுகின்றது. இவ்வாறான மொழியின் ஒழுங்கமைவுகளைக் கடந்தியங்கும் கூறுகளும் மொழியின் அமைப்பாகவே கருதமுடியும். தொல்காப்பியம் மொழியின் இயங்குதளத்தை அதன் போக்கில் பகுப்பாய்வு செய்து விளக்கும் பனுவலாக அமைகிறது. மொழியானது ஒழுங்கமைவுக்கூறுகளும் அவற்றைக் கடந்து இயங்கும் சூழல்களுமாக குறிப்புநிலையில் இயங்குவதைத் தொடர்ந்து வலியுறுத்தும் போக்கிலேயே பொருண்மைப் பகுப்பு விளக்கங்கள் அமைகின்றன. இந்த நோக்கிலேயே சூத்திரங்களின், இயல்களின், அதிகாரங்களின் அமைப்புமுறைகள் உள்ளன. அந்த வகையில் தொல்காப்பியம் குறிப்பிடும் மொழியின் ஒழுங்கமைவுகளைக் கடந்தியங்கும் கூறுகளை இலக்கணநிலை வழுவமைதிகளாகக் கொண்டு ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**மொழியமைப்பின் வழுவமைதிக் கூறுகள்**

மொழியமைப்பின் இயங்கு தளத்தில் உருவாகும் மயக்கங்களை மொழியமைப்பின் வழுவமைதியென்று கூறலாம். இவ்வாறான மயக்கங்கள் கவிதையமைப்பில் அமைவதென்பது கவிதையின் பண்பை மேலும் அழகியலாகவும் கவித்துவமானதாகவும் மாற்றுகின்றன. அதாவது பொதுமொழியின் இயங்குநிலையில் மிகவும் இயல்பானதாக இருக்கும் இப்பண்புகள் இலக்கியம்/கவிதையில் இடம்பெறும்போது அதன் சிறப்புநிலையில் இயங்குகின்றன என்று கூறமுடியும். தொல்காப்பியர் குறிப்பிடும் 'செய்யுட் போலி, செய்யுள் விகாரங்கள், செய்யுளில் முதலெழுத்து நீண்டு ஒலித்தல், சுட்டுப்பெயர் செய்யுளில் முன்னதாக வருதல், உருபு மயக்கங்கள், எச்சச் சொற்கள்' போன்ற பல்வேறு கூறுகளை மொழியமைப்பின் இலக்கணநிலையில் உருவாகும் வழுவமைதிகளென்று கூறலாம். இக்கூறுகளனைத்தும் இயல்பான வழக்கிலும் இருப்பதென்பது குறிப்பிடத்தக்கதாகும். இவையே கவிதைநிலையில் வரும்போது கவிதையின் பண்பை மேலும் அழகியலாக்குகின்றன. இவ்வாறாக இலக்கணநிலையில் காணப்படும் வழுவமைதிகளை அவற்றின் பயன்படுநிலையிலிருந்து மொழியமைப்பின் இயல்புக்கேற்றவாறு ஒலிநிலை (எழுத்து), சொல்நிலை, தொடர்நிலை என மூன்றாகப் பகுக்கமுடியும். ஆங்கிலக் கவிதைமொழியின் ஒலிநிலையில் காணப்படும் விலகல்களை ஒலிநிலை வழுவமைதியென்றும் சொல், தொடர்நிலையில் காணப்படும் விலகல்களை இலக்கணநிலை வழுவமைதியென்றும் குறிப்பிடுகின்றார் ஜெஃப்ரி லீச். அவரின் மொழிவிலகல் கோட்பாட்டோடு (Theory of language Deviation) மிகவும் நெருக்கமானதாகத் தொல்காப்பியரின் வழுவமைதிக் கருத்தாக்கம் அமைந்துள்ளது. அந்தவகையில் இலக்கணநிலை வழுவமைதிக் கூறுகள் இங்கு முதன்மைபெறுகின்றன. இந்த இலக்கண நிலை வழுவமைதிக் கூறுகள் இலக்கணப் பகுப்பாய்வு நிலையில் அமைந்தாலும் செய்யுளில் இவற்றுக்குத் தனிச்சிறப்புள்ளதைத் தொல்காப்பியத்தின்வழி புரிந்துகொள்ள முடியும். இயல்பான பேச்சு வழக்கிலும் இவ்வாறான மயக்கங்கள் இருப்பது இயல்பானதைப் போலவே கவிதையில்/இலக்கியத்திலும் இடம்பெறும்போது மிகவும் முக்கியத்துவமுடையனவாகின்றன.

**ஒலிநிலைக் கூறுகள்**

மொழியமைப்பின் ஒலிநிலையில் (எழுத்து) உருவாகும் மயக்க வடிவங்களை ஒலிநிலையின் வழுவமைதிக் கூறுகளென்று கூறமுடியும். ஒலிநிலை வழுவமைதிகளாக லீச் குறிப்பிடும் கூறுகளோடு தொல்காப்பியர் குறிப்பிடும் விகாரங்கள், செய்யுட் போலி, முதலெழுத்து நீண்டு வருதல் போன்ற கூறுகள் மிகவும் நெருங்கியிருப்பனவாக உள்ளன. ஒரு பொருண்மை குறித்த அமைவொழுங்கு முறையைக் கடந்தவற்றை வழுவமைதியாகக் கொள்ளமுடியுமென்பதை தொல்காப்பியம் மற்றும் பிற்கால இலக்கண நூல்களின்வழியாக அறிய இயலும். அந்த வகையில் வழக்கு மற்றும் செய்யுளைத் தரவுகளாகக் கொண்டு எழுதப்பட்டுள்ள தொல்காப்பியத்தில் செய்யுளில் வரும் ஒலிகளுக்கு அவ்வொலிகளின் ஒழுங்கமைவுகளைக் கடந்தியங்கும் இடங்களும் குறிப்பிடப்பட்டிருப்பது முக்கியத்துவமுடையதாகின்றது. எனவே அம்மாதிரியான கூறுகளான செய்யுட் போலி, செய்யுள் விகாரங்கள், அளபெடை, புணர்ச்சி மாற்றங்கள் போன்ற கூறுகளை மொழியின் ஒலிநிலை-யிலிருக்கும் வழுவமைதிகளாக லீச், தொல்காப்பியர், உரையாசிரியர்களின் கருதுதல்களிலிருந்து அறியமுடியும்.

**செய்யுட் போலி**

ஒரு சொல்லில் ஒரு எழுத்திற்குப் பதிலாக இன்னொரு எழுத்து வந்து பொருள் திரிபுறாமலிருப்பது போலியாகும். போலியென்பதற்குப் 'போன்று இருப்பது' என்பது பொருளாகும். இவ்வாறான போலியெழுத்துகள் செய்யுளின் கவித்துவத்தை மேம்படுத்துவதற்காகப் பயன்படுவதாகக் கொள்ள இயலும். ஐகாரம் மற்றும் ஔகாரத்திற்குப் போலியெழுத்துகளாகத் தொல்காப்பியர், "அகர இகர மைகார மாகும்" (தொல்.எழு.54), "அகர உகர மௌகார மாகும்" (தொல்.எழு.55) என்று குறிப்பிடுகின்றார். அதாவது, அகரமும் இகரமும் இணைந்து ஐகாரமும் (அஇ), அகரமும் உகரமும் இணைந்து ஔகாரமும் (அஉ) பெறப்படுமென்று குறிப்பிடுகின்றார். மேலும், ஐகாரத்திற்கு மற்றொரு போலியெழுத்தாக, "அகரத் திம்பர் யகரப் புள்ளியும் ஐயெ னெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்" (தொல்.எழு.56) என்பதைக் குறிப்பிடுகின்றார் தொல்காப்பியர். அதாவது அகரத்திற்குப் பக்கத்தில் யகரப்புள்ளி இடம்பெறுவதும் (அய்=ஐ) ஐகாரத்தின் போலியாகக் கொள்ளவேண்டுமென்பது தொல்காப்பியர் கூற்றாகும். அதைப்போலவே, அகரத்திற்குப் பக்கத்தில் வகரப்புள்ளி இடம்பெற்றால் அது (அவ்=ஔ) ஔகாரத்தின் போலியாகக் கொள்ளவேண்டுமென்பதை உரைகளின்வழியாகப் புரிந்துகொள்ள முடியும்.

மேலும், இகரவீற்று மொழிக்கண் இகரமும் யகரமெய்யும் விரவி வருமென்பதை, "இகர யகர யிறுதி விரவும்" (தொல்.எழு.58) என்னும் சூத்திரத்தின் மூலம் குறிப்பிடுகின்றார். இதைப்போலவே, "செய்யுள் இறுதிப் போலி மொழிவயின் னகார மகாரம் ஈரொற் றாகும்" (தொல்.எழு.51) எனும் சூத்திரம் செய்யுளின் இறுதியில் 'போலும்' எனவரும் சொல்லில் னகாரமும் மகாரமும் ஈரொற்றாக வந்து 'போன்ம்' எனமுடியும் என்கின்றது. எனவே மொழியில் ஒரு எழுத்தையோ அல்லது ஒலியையோ குறிப்பிடுவதற்கென ஒரு வடிவம் இருக்க அதே எழுத்தைக் (ஒலி) குறிப்பிட வேறொரு வடிவத்தைக்

குறிப்பிடுவதும் மொழியிலிருக்கும் இயங்கியலாகவே கருதும் அதேவேளை அவ்வகையான போலிகள் அவையுணர்த்த வரும் பொருளைத் திரிபுறாமல் கருத்தையுணர்த்துவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

பிற்கால இலக்கண நூல்கள் அவற்றின் வருகையிடம் நோக்கி முதற்போலி, இடைப்போலி, கடைப்போலி என மூன்று வகைப்படுத்தியுள்ளன. ஒரு சொல்லின் முதல், இடை, கடையாகிய இடங்களில் ஒரு எழுத்திற்குப் பதிலாக மற்றொரு எழுத்து வந்து அச்சொல்லின் பொருள் வேறுபடாதவாறு வருவது போலியாகும். சில அஃறிணைப் பெயர்களின் ஈற்றில் வரும் மகரமெய்க்குப் பதிலாக னகரமெய் போலியாக வருமென்பதை நன்னூல், “மகர விறுதி யஃறிணைப் பெயரின் னகரமோ டுறழா நடப்பன வுளவே” (நன்.எழு.122) என்று குறிப்பிடுகின்றது. உதாரணமாக,

> “…..மரம்பயி லுறும்பி னார்ப்பச் சுரனிழிபு
> மாலை நனிவிருந் தயர்மார்…..” (குறுந்:155)

எனும் குறுந்தொகைப் பாடலில் சுரன் என்பதில் மகரவொற்றுக்குப் பதிலாக னகரவொற்று வந்து போலியாகவுள்ளது. சுரம் என்பதே அச்சொல்லின் அமைவொழுங்கென்பதால் அதைக்கடந்து போலியாக வரும் சுரன் என்னும் வடிவத்தை வழுவமைதியாகக் கொள்ளமுடியும். மேலும், இதுபோன்று வரும் நிலம் - நிலன், புலம் - புலன், வலம் - வலன் என்று வரும். இவ்வாறான போலிகளை எழுத்துப் போலியென்று இலக்கணங்கள் குறிப்பிடுகின்றன. இப்போலி வடிவங்கள் ஒலிப்புநிலை உறவுடையனவாக அமைந்து கவிதையின் யாப்பிசைக்கு இசைவாகவும் பொருளமைதிக்கு உறவுடையனவாகவும் இருக்கின்றன.

**செய்யுள் விகாரம்**

செய்யுளீட்டச் சொற்களான இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்னும் நான்கு சொற்களும் செய்யுளில் அசை, சீர், தளை, அடி, தொடை நோக்கி சிலவிடங்களில் விகாரப்படும் முறை செய்யுள் விகாரமாகும். இவ்வாறான விகாரங்கள் எதுகை முதலிய தொடை நோக்கியும், சீர் அமைதி நோக்கியும் அமைவனவாகும். “வலிக்கும் வழி வலித்தல் முதலிய யாவும் இலக்கணத்துக்கு மாறாக அமைக்கப்படுவன என்பதும் அவை வழுவாயினும் செய்யுளின்பம் நோக்கி அமைக்கப்பட்டன” என்று சிவலிங்கனார் குறிப்பிடுகின்றார் (1988:49). இவ்விகாரங்கள் வலித்தல், மெலித்தல், விரித்தல், தொகுத்தல், நீட்டல், குறுக்கல் என ஆறு வகைப்படுமென்பதைத் தொல்காப்பியம், “…..வலிக்கும்வழி வலித்தலும் மெலிக்கும்வழி மெலித்தலும் விரிக்கும்வழி விரித்தலும் தொகுக்கும்வழி தொகுத்தலும்…..” (தொல்.சொல்.398) எனும் சூத்திரத்தின் மூலம் குறிப்பிடுகின்றது. இதையே நன்னூல், “வலித்தன் மெலித்த னீட்டல் குறுக்கல் விரித்த றொகுத்தலும் வருஞ்செய்யுள் வேண்டுழி” (நன்.சொல்.155) என்று குறிப்பிடுகின்றது. இவ்வாறு சொற்கள் விகாரப்பேறு பெறுவது செய்யுளில் ‘குற்றமில’ என்று தெய்வச்சிலையார் குறிப்பிடுகின்றார்.

> “….. தண்ணந் துறைவன் கொடுமை
> நம்மு னாணிக் கரப்பா டும்மே” (குறுந்:9)

எனும் குறுந்தொகைப் பாடலில் ‘கரப்பா டும்மே’ என்னும் சொல்லில் வரும் விரித்தல் விகாரம் யாப்பசைப்பண்பிற்காக (டுமே - நிரை, டும்மே- நேர் நேர் - மாச்சீர்) வந்துள்ளது. கரப்பாடுமே என்பதே வழாநிலையாக இருக்க மகரவொற்று இரட்டித்து வந்திருப்பது யாப்போசைக்கானதாக இருப்பதால் இசைப்பண்பின் ஏற்பில் இவ்வாறான விகாரங்களை வழுவமைதியெனக் கொள்ளமுடியும். இவ்வாறு சொற்கள்தம் இயல்பான ஒழுங்கமைவைக் கடந்திசைப்பது வழுவெனினும் செய்யுளின்பம் நோக்கி விகாரப்படுவது செய்யுளில் ஏற்றுக்கொள்ளப்படுமென்பதால் சொற்களின் ஒழுங்கமைவைக் கடந்த விகாரங்களை வழுவமைதியாகக் கொள்ளமுடியும்.

**அளபெடை**

தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில் எழுத்துகள் ஒலிக்கும் மாத்திரையளவைக் குறிப்பிட குறிலுக்கு அளவு ஒன்று, நெடிலுக்கு இரண்டு என விதிகூறிய அடுத்த சூத்திரமாக “மூவள பிசைத்தல் ஓரள பின்றே” (தொல்.எழு.5) என்று குறிப்பிடுவ-திலிருந்து மூன்று மாத்திரையளவு ஒலிக்கக்கூடிய எழுத்துகள் இல்லையென்பதை அறிந்துகொள்ளலாம். இச்சூத்திரமானது “மாத்திரை பற்றி எழுத்துகட்குப் புறனடை கூறுகின்றது” (2012:87) என்று பாலசுந்தரனார் குறிப்பிடுகிறார். இரண்டு மாத்திரையளவிற்கு மேல் ஒலிக்கக்கூடிய முறையை, “நீட்டம் வேண்டின் அவ்வள புடைய கூட்டி எழூஉதல் என்மனார் புலவர்” (தொல்.எழு.6) எனும் சூத்திரத்தில் அமைத்து அளபெடையாகக் கொள்ளப்படும். உதாரணமாக,

“…..பெருங்களிறு வாங்க முரிந்துநிலம் படாஅ / நாருடை யொசிய லற்றே….” (குறுந்:112) எனும் குறுந்தொகைப் பாடலில் வரும் படாஅ என்னுல் சொல் அளபெடுத்து வந்துள்ளது. இது இசையை நிறைவு செய்வதற்காக வந்த இசைநிறை அளபெடையாகும். இவ்வாறு எழுத்துகள் நீண்டு ஒலிக்கும் முறை வழுவமைதியாக அமைத்துக்கொள்ளப்படுவதை, “அளபிறந் திசைத்தலும் ஒற்றிசை நீடலும்…” (தொல்.எழு.33) எனும் நூன்மரபிற்கான இயல் புறனடையாகத் தொல்காப்பியரால் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அகரச்சுட்டு நீண்டு வருதல்**

அகரச்சுட்டு செய்யுளில் நீண்டு வருவதற்குமுரியது. இருமொழிப் புணர்ச்சிக்கண் அகரச்சுட்டானது தனது அமைவொழுங்கைக் கடந்து நீண்டு ஒலிப்பது

செய்யுளிடத்துரியது என்பதைத் தொல்காப்பியர், "நீட வருதல் செய்யுளுள் உரித்தே" *(தொல்.எழு.209)* எனும் சூத்திரத்தின் மூலம் குறிப்பிடுகின்றார். உதாரணமாக, 'ஆயிருதிணையி னிசைக்குமன சொல்லே' *(தொல்.சொல்.1)*, 'ஆயிருபாற்சொல்' *(தொல்.சொல்.3)* எனவரும் தொல்காப்பியச் சூத்திரங்களில் அகரச்சுட்டானது நீண்டு வந்துள்ளதைக் காணமுடிகின்றது.

**புணர்ச்சி மாற்றங்கள்**

தொல்காப்பியர் குறிப்பிடும் நிறுத்த சொல்லும் (நிலைமொழி) குறித்துவரு கிளவியுமாகிய (வருமொழி) இரண்டு சொற்களின் சேர்க்கையே புணர்ச்சியாகும். இப்புணர்ச்சிகள் வேற்றுமை மற்றும் அல்வழியில் இயல்பு, தோன்றல், மெய்பிரிதாதல், குன்றல் எனும் நான்கு நிலைகளில் அமைவதாகத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். இவ்வாறான சூழலில் ஏற்படும் புணர்ச்சிகள் பொருள் வேறுபாட்டிற்குக் காரணமாக அமைகின்றன. எனவே சூழல் நோக்கிப் பொருள் கொள்ள வேண்டுமென உரையாசிரியர்கள் கூறுவதும் முக்கியத்துவமுடையதாகின்றது. உதாரணமாக, கீரை+கடை= கீரைக்கடை எனவரும் போது விற்பனை நிலையமாகவும் கீரைகடை எனவரும் போது வினைச்சொல்லாகவும் வருவதிலிருந்து புணர்ச்சி மாற்றங்கள் பொருள் வேறுபாட்டிற்குக் காரணமாக அமைகின்றன என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

மேலும், புணர்ச்சி முறைகளைக் குறிப்பிடும் தொல்காப்பியர் கட்டுப்பாடான விதிகளாகக் கூறாமல் பல்வேறு நெகிழ்வுகளுடனும் தளர்வுகளுடனும் அமையுமென்று குறிப்பிட்டிருப்பது முக்கியத்துவமுடையதாகின்றது. உதாரணமாக, "யாமரக் கிளவியும் பிடாவுந் தளாவும் ஆமுப் பெயரும் மெல்லெழுத்து மிகுமே" *(தொல்.எழு.230)* என மெல்லெழுத்து மிகும் முறையைக்கூறி, அடுத்த சூத்திரமே "வல்லெழுத்து மிகினு மானமில்லை" *(தொல்.எழு.231)* என்று முதலில் மெல்லெழுத்து மிக வேண்டிய சூழலைக் குறிப்பிட்டாலும் வல்லெழுத்து மிகுந்தாலும் குற்றமில்லை எனக்கூறும் முறையானது புணர்ச்சியில் நெகிழ்வுத்தன்மை இருப்பதையே காட்டுகின்றது.

**உருபு மயக்கம்**

